கங்கை முத்துப் பிள்ளை
அவர்களின்

# நாட்டிய நன்னூல்

தொகுப்பாசிரியர் :
இசைமணி
முத்தமிழ் ஆசான்
க. சங்கரனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

கங்கை முத்துப் பிள்ளை
அவர்களின்

# நாட்டிய நன்னூல்


தொகுப்பாசிரியர் :
இசை மணி
முத்தமிழ் ஆசான்
க. சங்கரனார்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Nattiya Nannool |
| Author/Compiler | : | Isai Mani, Muttamil Asan. Sankaranar |
| Publisher & Copy right | : | International Institute of Tamil Studies, C.I.T. Campus Taramani, Chennai-113 |
| Publication No. | : | 274 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1998 |
| Edition | : | Reprint |
| Paper used | : | TNPL 16 kg Creamwove |
| Size of the book | : | 1/8 Demy |
| Printing types | : | 10 Points |
| No. of pages | : | ii +106 |
| Price | : | Rs.25/- |
| No. of copies | : | 1000 |
| Printed by | : | M/s Paavai Printers (p)Ltd. Chennai - 14 |
| Subject | : | A Study of Bharata Nattiyam |

அரிய நூல்களை வெளியிடத் தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழங்கிய நிதியுதவியைப் பெற்று இந்நூல் வெளிவருகிறது.

# நாட்டிய நன்னூல்

*நடனாதி வாத்திய ரஞ்சனம்*
*மதுரை பரத வித்துவான்*
*திருநெல்வேலிவாசி*
*கங்கை முத்துப்பிள்ளை யவர்களியற்றியது*
*ஸ்ரீஅனவரததானநாதர் சன்னிதானத்து மகாவித்துவான்*
*கவிராஜ நெல்லையப்ப பிள்ளையவர்கள்*
*அனுமதிப்படி*
*யாழ்ப்பாணம்*
*அம்பலவாண நாவலரவர்கள்*
*முன்னிலையில் பரிசோதித்தது*

பரத சாஸ்திரமானது பற்பல கர்த்தகர்களாற் பற்பல படியாகச் சொல்லப்பட்டு எல்லை காண முடியாது கடல் போற் பரந்து கிடத்தலின் அதனைச் சிரத்தையோடு முற்றக் கற்பார் ஒரு சிலரேயாக மற்றைப் பெரும்பாலோர் அதனை அங்ஙனம் கல்லாமையின் அவர் அந்நூல்களைப் பேணுதல் யொழிந்தனர் என்பாலுள்ள ஆரிய திராவிட ஆந்திர பரத சாஸ்திரங்களைப் பல்காறும் ஆராய்ச்சி செய்து இந்நூல் எழுதப்பட்டது.

*தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்*
*சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமா*
*ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு.*

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை - 600 113.

# அணிந்துரை

விலங்கோடு விலங்காக அலைந்து திரிந்த மனிதனைப் பண்படுத்தியது மொழி. இம்மொழி தோன்றுவதற்கு முன்னர் மனிதன் எதன் மூலம் தன் கருத்தைப் பிறர்க்குப் புலப்படுத்தினான்? அதற்கு உதவியது என்ன? எனச் சிந்திக்கும் போது அதற்குப் பயன்பட்டது 'சைகை மொழி' என்பது விளங்கும். இச் சைகை மொழியின் வளர்ச்சிக் கூறாகவே கூத்துக் கலை - நடனக் கலை திகழ்ந்திருக்க வேண்டும். மொழி எனும் ஒன்று கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுவதற்கு முன்னரே சைகை மொழியால் தன் கருத்தைக் கற்கால மனிதன் புலப்படுத்தியிருக்கிறான் எனும்போது இச் சைகை மொழியின் வளர்ச்சியான கூத்துக் கலையின் பழமை தெற்றென விளங்கும்.

முன்னைப் பழமைக்கும் பழமையதாய்
பின்னைப் புதுமைக்கும் புதுமையப் பெற்றியதாய்

இக்கலை விளங்கி மக்களைக் கவர்ந்த வண்ணம் உள்ளது. இதற்கெல்லாம் காரணம் இக்கலையின் முறையான இலக்கண அமைப்பு என்று தான் கூறவேண்டும். ஆனாலும் இக்கலை குறித்த பழமையான நூல்கள் பெரும்பாலும் அழிந்துபட்டன.

இக் கூத்துக் கலை பற்றிய வரலாற்றைச் சிலப்பதிகார 'அரங்கேற்றுக் காதை'யில் விளக்கமாகக் காண்கிறோம். அதற்குப் பிறகு, கூத்துக் கலை பற்றிய பல நூல்கள் தோன்றியுள்ளன. அவ்வெல்லாம் கூத்து - நடனம் பற்றிய பொதுக் கூறுகளை முறையே வடமொழியிலும், தமிழ்மொழியிலும், ஆங்கிலத்திலும் விளக்கிச் செல்கின்றனவாய் அமைந்துள்ளன. அதாவது, கூத்துக்கலை குறித்த தமிழ் - நூல்கள் யாவும் அழிந்துபட்ட நிலையில் உதித்த நூல்களாக இவை காணப்படுகின்றன.

ஆயின் 'நாட்டிய சாஸ்திரம்' எனும் வடமொழி நாடக இலக்கண நூலே தமிழ்க் கூத்துக் கலைக்கு இலக்கண நூல் எனக்

கொண்டு நாட்டிய சாஸ்திரத்தை அடியொற்றி இந்நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறு கூத்துக்கலை - பரதக்கலையோடு நாட்டிய சாஸ்திரத்தைத் தொடர்புபடுத்திக் கூறிவருவதோடு, அவ்விலக்கணங்களை நாட்டியத்தில் புகுத்தியும் வருகின்றனர். இந்நிலையில் முனைவர் புரட்சிதாசன் என்பவர் இக்கூத்துக்கலை-பரதக்கலை குறித்த நூல்கள் பலவற்றைத் தமிழில் எழுதியுள்ளார். அதில், வடமொழிப் பெயர்கள் எல்லாம் தமிழ்ப்படுத்தப்-பட்டுள்ளன. வடமொழி நூல்களில் காணப்படும் செய்யுள் விளக்கங்களும் தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளன. முனைவர் புரட்சிதாசனுக்கு முந்தைய நூல்களான அபிநயதர்ப்பணம், பரத சேனாபதியம், மகாபரதசூடாமணி போன்ற நூல்கள் தமிழில் எழுதப்பட்டிருந்தாலும் அந்நூலாசிரியர்கள் வடமொழிச் சொற்களை - முத்திரைகளைத் தமிழ்ப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகு சூழ்நிலையில் வெளிவந்துள்ள இன்னொரு நாட்டிய நூல்வடிவமே **நாட்டிய நன்னூல்** என்பது. இந்நூலாசிரியர் மதுரையைச் சார்ந்த கங்கை முத்துப்பிள்ளை நட்டுவனார். இவர் நாட்டியப் பரம்பரையில் தோன்றியவர். நாட்டியப் பரம்பரையில் பிறந்ததோடு மட்டுமல்லாமல் தாமே நட்டுவனாராகவும் திகழ்ந்தவர். நட்டுவனார் என்ற தகுதியாலும் பரதக்கலையின்பால் கொண்ட ஈடுபாட்டாலும் அக்கலையின் எதிர்கால வாழ்வைக் கருதியும் நூல் எழுத முற்பட்டுள்ளார். அதன் விளைவாகத் தோன்றிய நூல்வடிவம் தான் இந் நாட்டிய நன்னூல் என்பது.

கங்கை முத்துப்பிள்ளை நட்டுவனார் தம் நூலுக்கு இட்ட பெயர் **நடனாதிவாத்யரஞ்சனம்** என்பதாகும். மேலும் இவ்வாசிரியர் **சபாரஞ்சித சிந்தாமணி** என்ற வேறொரு நூலையும் எழுதியுள்ளார். இந்நூல்களை நாட்டிய நூல்களையெல்லாம் கற்றுணர்ந்து ஆய்ந்து எழுதியுள்ளதாக, கங்கை முத்துப்பிள்ளை நட்டுவனாரே நடனாதிவாத்யரஞ்சனத்தில் குறிப்பிட்டுள்ளதாக அறியமுடிகிறது.

ஆனால் இந்நூலை நாட்டிய நன்னூல் என்ற பெயரில் உலகுக்கு அறிமுகப்படுத்துபவர் இந் நூலின் தொகுப்பாசிரியர் இசைமணி, முத்தமிழ் ஆசான் திரு. க. சங்கரனார் அவர்கள்.

இவர் தன் உரையில் இந்நாட்டியக் கலையின் மீது தான் கொண்டுள்ள பற்றின் காரணமாக இத் தொகுப்புப் பணியில் ஈடுபட்டதாகக் கூறியுள்ளார். எந்த ஒரு செயலும் தம்மால் இயலுமா என்றறிந்து, அதற்கானவற்றைத் தேடி வைத்துப் பின்பு முயற்சியில் ஈடுபடுகின்ற போது அம்முயற்சி வெற்றியைத் தரும்.

ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க, சங்கரனாரின் வெற்றியாக நாட்டிய நன்னூல் இன்று நூல் வடிவம் பெற்றுள்ளது. இந்நூல் நாட்டிய ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படத்தக்கதோடு நாட்டியம் பயிலும் அனைத்து மாணவர்க்கும் பயனளிக்கக் கூடிய ஒன்றாகத் திகழும் என்பது என் நம்பிக்கை. 1898-இல் வெளிவந்த இந்நூலினை மறுபதிப்புச் செய்வதில் நிறுவனம் மகிழ்ச்சியடைகிறது.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற நிறுவனத் தலைவர் முனைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-பண்பாட்டுத்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறைச் செயலாளர், திருமிகு த. இரா. சீனிவாசன், இ.அ.ப. அவர்களுக்கும், அரிய நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் நிதி வழங்கிய தமிழ் வளர்ச்சி இயக்கக இயக்குநர் முனைவர் ச. நாகராசன் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

மெய்ப்புத் திருத்திய முனைவர் இராசா அவர்களுக்கு நன்றி.

நூலினை வனப்புற அச்சிட்டுத் தந்த பாவை அச்சகத்தார்க்கும் எங்கள் நன்றி.

**இயக்குநர்**

# முன்னுரை

ஒரு நாட்டின் பெருமையை மதிப்பிடும் அளவை அதன் மொழி வளம், கலைத் திறன், இலக்கிய வளர்ச்சி, பண்பு, நாகரிகம் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டதேயாகும்.

எண்ணத்தின் இனிமையை இயல் வாயிலாகவும், ஓசையின் இனிமையை இசை வாயிலாகவும் மெய்க்குரிய செயலின் இனிமையை நாட்டியம் வாயிலாகவும் பண்டைத் தமிழறிஞர் புலப்படுத்தினர்.

மனத்தில் எழுந்த எண்ணத்தை வெளிப்படுத்துவது மொழி. மொழியின் பொருளை மெய்யின் வாயிலாக வெளிப்படுத்துவது செயல். இச்செயலே நாட்டியமாகும். ஆகவே, மனம், மொழி, மெய் ஆகிய இம்மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையன. அவற்றின் பயனாக முத்தமிழும் ஒன்றோடொன்று தொடர்புடையன.

பண்பாடு வளர மேற்கூறிய மூன்று கூறுகளும ஒன்றுபட்டு இயங்குதல் வேண்டும். இயலிசை நாடகம் ஆகியவை முறையே அறிவு, உணர்ச்சி, முயற்சி ஆகிய மூன்றையும் வளர்க்கும்.

நாட்டியம் தோன்றிய காலத்தைத் துணிந்து கூறுவதற்கில்லை. நாடகத் தமிழ் நூல்களாகிய பரதம், அகத்தியம் முதலாக உள்ள தொன்னூல்களும், பின்வந்த முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்பனவற்றுள்ளும் சிற்சில சூத்திரங்களே கிடைத்துள்ளன. எனவே நாட்டிய இலக்கணங்களை முழுமையாக அறிய வாய்ப்பில்லை.

இருப்பினும் பரம்பரையாகவும், சிற்பங்கள் மூலமும் இக்கலை காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றது. சான்று :- சிந்துச் சமவெளியில் அகழ்ந்தெடுக்கப் பட்ட தென்முகக் கடவுள் தக்ஷிணாமூர்த்தி, நாட்டியப் பெண் சிற்பங்கள்.

தமிழக ஆலயங்களில் காணப்படும் சிற்பங்கள் ஆடற்கலைகளுக்கான அபிநயங்களை விளக்குகின்றன. (உ.ம்) சிதம்பரம், கும்பகோண ஆலயங்களும் மற்றும் பிற ஆலயங்களும் ஆகும்.

மனிதன் இன்றைய உருவத்தை அடைந்து பல ஆண்டுகளுக்குப் பின்னரே பேசும் ஆற்றல் பெற்றான் என்பது அறிஞர் முடிவு. ஆயினும் சைகையாலும் ஒலிக்குறிப்புக்களாலும் மெய்ப்பாடுகளாலும் தம் இன்பதுன்ப உணர்ச்சிகளையும் தேவைகளையும் பிறர்க்கு உணர்த்தி வந்தனர்.

சிறு குழந்தைகளும், ஊமையரும் தம் தேவைகளைச் சைகைகள் மற்றும் ஒலிகளின் மூலம் வெளிப்படுத்துவது உலக நியதி. இத்தகைய மொழியையே அறிஞர் இயற்கை மொழி என்றனர்.

எனவே மனிதன் தன் எண்ணத்தைப் பேச முற்படுவதற்கு முன் தன்

தேவைகளைப் பெற வேண்டிக் காட்டிய அபிநயங்களும், சைகைகளும், முகக் குறிப்புகளான பாவங்களும் ஆகியவற்றின் வளர்ச்சியே இன்றைய நாட்டியம். நம்நாடு முழுவதும் தொன்றுதொட்டு நாட்டியக் கலை இருந்து வருகின்றது. தமிழகத்தில் பரதமென்றும், கேரளத்தில் கதகளி யென்றும் உத்திரப்பிரதேசத்தில் ''கதக்'' எனவும், வடகிழக்கில் 'மணிப்புரி' என்றும் பல்வேறு பெயர் பெறலாயிற்று. அவரவர் கலாச்சாரப்படி ஆடி மகிழ்கின்றனர்.

இயல், இசை, கூத்து,சிற்பம், ஓவியம் ஆகிய கவின்கலைகளின் இணைப்பே நாட்டியமெனலாம். கவின்கலைகளைக் கூட்டிக் குழைத்த அமிழ்தமே நாட்டியம். ஏனையக் கலைகளைப் போல் ஐம்புலன்களுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி நில்லாது யாவற்றையும் பற்றி நின்று இன்பம் அளிப்பது நாட்யடிம். இயல், இசை, சிற்பம், ஓவியம் ஆகிய நான்கினையும் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் கண்டு கேட்டு உணர்ந்து மகிழும் இடம் நாட்டியம் ஆகும்.

வாழ்க்கையிலே தோன்றும் ஏமாற்றம், துக்கம், வெறுப்பு முதலியவைகளை மாற்றி மனத்துக்கு அமைதியையும், ஒரே சமயத்தில் கண்ணுக்கும் காதுக்கும் ஆனந்தத்தையும் தரக் கூடிய கலை நாட்டியம்.

மேலே குறிப்பிட்ட நாட்டிய வகைகள் அனைத்திலும் இலக்கண அமைதியும் நிலையான தரமும் கூடிய நாட்டியம் பரதம் ஆகும். 'பரதம்' என்ற சொல்லின் பிறப்புக்கான காரணத்தை ஆராய்வோம். பாவம், இராகம், தாளம், அபிநயம், பாதக்கிரமம் என்னும் இவ்வைந்தும் நாட்டியத்துக்கு இன்றியமையாதன. அபிநயம் பாவத்திலும், பாதக்கிரமம் தாளத்திலும் அடங்கிவிட்டன. ஆதலால் பாவம், ராகம், தாளம் என்னும் மூன்றாகக் குறிக்கப்படுகின்றன. இம்மூன்று பதங்களின் முத லெழுத்துக்களுடன் இம்மூன்றும் 'ம்' என்ற எழுத்தில் முடிவதால் அதனையும் சேர்த்து ப-ர-த-ம் 'பரதம்' என உருவாக்கப்பட்டது. பாவம், கையமைப்பு, நிலை இம்மூன்றும் நடனத்துக்குத் தேவை. இவற்றுடன் அசைவாகிய ஆடல் இணையும்போது நடனம் களை கட்டுகிறது. அதற்காகவே நர்த்தனம் நடனத்துடன் ஒன்று சேர்க்கப்படுகின்றது.

பாவ, ராக, தாளங்களோடு இயங்க வேண்டிய நடனம் ஆடலாகிய நிருத்தத்தோடும் கலந்து பயிற்றுவிக்கப்பட்டு பழக்கத்தில் இருந்து வருகின்றது.

தாண்டவம், லாஸ்யம், மார்கம், தேசியம் என்னும் நால்வகை நடனங்களைப் பற்றிக் கீழே ஆராய்வோமாக.

ஆண்மை, வீரம், உக்கிரம் இவைகளைக் கொண்டு அங்கங்களை யசைத்துப் பாட்டின் பொருளுக்கேற்றபடி ஆடுவது தாண்டவம். இஃது ஆடவர்களுக்கே உரியது.

**லாஸ்யம்:**

பிரத்தியாங்கம், உபாங்கம் அனைத்தையும் நளினமாக ரச பாவனையுடன் அபிநயித்து ஆடுவது. இஃது மங்கையருக்கே உரியது. ''மார்க்கம்'' என்பது பண்ணும் பரதமும் சேர்ந்து பல பாவங்களில் நடிப்பது. தேசியமென்பது அரசர், செல்வர் மகிழ நடிப்பது.

**நாட்டிய இலக்கணம் :**

நினைப்பது மனோபாவம். நினைத்தவுடன் அசைத்தல் அபிநயம். தோன்றும் முகக் குறி சுவை. ஒலியின் பேதம் பண். கால்களின் பேதம் தாளம். இவை ஐந்தும் ஒன்று சேர்ந்தவிடத்து நாட்டியம் முழு உருவம் பெறுகிறது. எனவே அகத்தியரும், ''நடையுறு கால்கள் நடிக்கும் பேதம் அடைவெனச் செப்பும் நடனமாமே விழிசிரங் கைகால் மெய்யுடன் லயமிசை நளின பாவம் நாட்டியமாமே இசையுடன் பாவம் லாசியமாமே.'' எனச் சூத்திரஞ் செய்தார்.நடையுறுபேதம் என்னும் அடைவு 108 ஆகும்.

அவ்வப்போது ஏற்பட்ட மாற்றங்கள் பிற்கால நூல்களில் தெளிவுபடுத்தப்படுகின்றன. கையின் சைகைகளான பிண்டி எனும் ஒற்றைக்கைச் செய்கைகளும், பிணையல் எனப்படும் இரட்டைக்கைச் செய்கைகளும் இவற்றோடு காலின் அடைவுகள் இணைக்கப்பெற்றும் பல வகையாகப் பிரிக்கப்பட்டன.

ஸாம வேதத்திலிருந்து சங்கீதத்தையும் யஜுர் வேதத்திலிருந்து அபிநயத்தையும், ரிக் வேதத்திலிருந்து வசனங்களையும், அதர்வண வேதத்திலிருந்து நவரஸங்களையும் திரட்டி ஒன்று கூட்டி நாட்டியம் உருவாக்கப்பட்டதாகப் புராண வரலாறு உண்டு. பண்டைக் காலத்தில் ''நாட்டியம்'' என்ற சொல்லை ''நாடகம்'' என்ற பொருள்பட வழங்கி வந்தனர். (உ.ம்.) மகாகவி காளிதாஸரின் ''மாளவிகாக்கினி மித்திரம்'' ஓர் நாட்டிய நாடகம்.

நாட்டிய நூல்களில் மிக விரிவனது பரத சாஸ்திரம். அது ஏற்பட்ட காலம் விரிவாகக் குறிப்பிடப்படக் காணோம். நாட்டியத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது அபிநயமாகும். இந்த ''அபிநயம்'' என்பது சமஸ்கிருதச் சொல் 'அபி' என்றால் 'முன்' அல்லது 'எதிரில்' எனப்பொருள் பெறும். 'நயம்' என்பதற்கு 'அடைவித்தல்' என்று பொருள். ஆகவே, பார்ப்பவர்களின் எதிரில் ஒரு கதாவஸ்துவை கொண்டுவருவது அல்லது விளங்க வைத்தல்; நவரஸங்களுக்குமான கருத்துக்களை அங்க அசைவுகளாலும் முகபாவத்தாலும் வெளியிடுதல்;படித்து அனுபவிக்க முடியாத விஷயங்களையும் தெளிவுபடச் செய்யும் கலையே அபிநயம்.

இந்த அபிநயம் ஆங்கிகம், வாசிகம், ஆஹார்யம், ஸாத்விகம் என நான்கு வகைப்படும்.

**1) ஆங்கிகம்:**

அங்கங்களின் அசைவுகளால் காண்பிக்கப்படும் அபிநயம். இஃது அங்கம், பிரத்தியாங்கம், உபாங்கம் என்ற மூன்று பிரிவுகளை உடையது.

**2) வாசிகம்:**

காவியங்களிலும், நாடகங்களிலும் காணும் வார்த்தைகளின் உபயோகத்தைக் கொண்ட அபிநயம்.

**3) ஆஹார்யம் :**

வளைகளாலும், மாலைகளாலும் மற்றும் தக்க உடைகளாலும் அலங்கரித்துக் கொண்டு செய்யும் அபிநயம்.

**4) ஸாத்விகம் :**

மனோநிலையை விளக்கிக் காட்டும் பாவங்களைக் கொண்டது ஸாத்விக அபிநயம். இஃது சமாதி நிலை, வியர்த்தல், மயிர்க்கூச்சம், குரல் மாற்றம், நடுங்குதல், முகவர்ணபேதம், கண்ணீர் வடித்தல், மூர்ச்சை யாகுதல் போன்ற எட்டுவித மனோநிலையைக் காண்பிக்கவே பயன்படும்.

நிருத்தம், நிருத்தியம் என்னும் இவ்விரண்டு பதங்களைக் கவனிப்பது முக்கியம். உண்மையில் இரு பதங்களும் ஒன்றையொன்று ஒத்திருப்பினும் இரண்டுக்கும் கருத்து வேறுபாடுகள் மிக அதிகம். அதாவது ஆடுகிறவர்களின் முகத் தோற்றம், அங்க அசைவு, இவைகளினால் பார்ப்பவர்களுக்கு ஏதேனும் கருத்து வெளியாகி, அதன் மூலம் சுவையுணர்ச்சி உண்டாக்கும் நிலைக்கு ''நிருத்தியம்'' என்று பெயர்.

எவ்விதக் கருத்தையும் வெளியிடாமல் ஆடப்படும் நடனத்திற்கு ''நிருத்தம்'' என்று பெயர். இதற்கு லயம், தாளக் கட்டு இரண்டும் முக்கியமானவை. நடனத்தில் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தும் சக்தி பெற்றது நிருத்தம். மன ஒருமைக்கு வேண்டிய வசதியைத் தாளக் கட்டுடன் செய்வதும், இதன்மூலம் அடுத்தடுத்து வரும் கருத்தை ஆர்வத்துடன் எதிர் நோக்கியிருக்கம்படிச் செய்யும் சக்தியும் நிருத்தத்துக்கு உண்டு.

பண்டைக் காலத்தில் கீதம், நிருத்தியம், வாத்யம் இவை மூன்றும் சேர்ந்து சங்கீதம் என அழைக்கப்பட்டு வந்தது. இவை மூன்றும் சேர்ந்து இணைபிரியாத கலைகளாக இருந்தன. கீதமும், நிருத்தியமும் எப்படி இணைந்திருக்கின்றன என்று ஆராய்ந்தால், இணைந்திருக்கும் அபிநயம் முக்கியத்துவம் அடைந்திருப்பதை அறியலாம்.

உலகின் முதன்மொழியாகவும் உணர்ச்சிகளைப் பிழையின்றி உணர்த்துவனவாகவும் அமைந்த ஆயிரக்கணக்காண கலைஞர்களால் வளர்க்கப்பட்டு வந்த உயர்ந்த ஆடற்கலையைப் பற்றிப் பேசாத இலக்கியம் நம்மிடம் இல்லையெனலாம். அவற்றை விரிப்பின் பெருகும். பலதரப்பட்ட ரசிகர்களையும் ஒன்றுபடுத்தி மகிழச் செய்வது நாட்டியம்.

இத்தகைய பரத நாட்டியத்தைக் கண் இமைக்காமல் பார்க்க வேண்டுமென்றும் சிறிது கண் இமைத்துவிட்டாலும் இமைத்த நேரத்தில் பல எழில்களைக் காண முடியாது போய்விடுமென்றும் இதனைக் கண்டு களித்த ருஷ்ய நாட்டுக் கலைஞர் பாராட்டியுள்ளார். மேல்நாட்டவரும் பாராட்டும் ஒப்பற்ற நாட்டியத்தைத் தமிழர் பெற்றது அவர்களின் தவப்பயனே. அதனால் இயற்றப்பட்ட இந்நூல் நடனக் கலையும் பல ஆண்டு காலம் பலரின் நன்மதிப்பைப் பெற்று இப்பாரில் உய்ய இறைவன் தன் இன்னருள் சுரப்பானாக.

# நன்றியுரை

இந்தக் கலை நூலைத் தமிழ்ப்பெரு மக்களுக்கு எல்லாம் வல்ல இறைவனைத் தாள் வணங்கித் தொகுத்து அளிக்கின்றேன். இந்நூல் நெல்லை நகர்வாசியும், நாட்டிய மேதையுமான உயர்திரு கங்கைமுத்துப் பிள்ளையவர்களின் நடனாதி வாத்யரஞ்சனம், சபாரஞ்சித சிந்தாமணி ஆகிய இரு நூல்களையும் நாட்டிய நன்னூல் என்ற பெயரில் விளக்கத்துடன் தொகுத்து வெளியிடப்படுகின்றது.

காலஞ்சென்ற கங்கை முத்துப் பிள்ளையவர்களின் வரலாறு பூரணமாகத் தெரியவில்லை. இருப்பினும் , அவரைப் பற்றித் தெரிந்தவரை கூறுகின்றேன். இஃது அவரே அவரது நூலில் எழுதியது. ''அருமையான பரத சாஸ்திரமானது எல்லா நலமுமியைந்த இக்காலத்தில் மறைந்துபோனால் பின்னர் இதன்கதி என்னவாகுமென்று ஏக்கமுற்று இக்குறை தீர்த்தலே எனது கல்வியாலாய நலமென உணர்ந்து இந்நூல் பெரியாரும் சிறியாரும் கற்றுணருமாறு சுலப நடையிற் செய்தலேயெனத் தெரிந்து என்பால் உள்ள ஆரிய திராவிட ஆந்திர பரத சாஸ்திரங்களைப் பலகாலமும் ஆராய்ச்சி செய்து நடனாதி வாத்திய ரஞ்சனமென்னும் இந்நூலும் வேறு சில நூல்களும் எனக்குத் தெரிந்தவாறு முன்னூலோடு எவ்வாற்றானும் முரணாமையியற்றினன்'', என்று தம் நூலின் (நடனாதி வாத்ய ரஞ்சனத்தில்) முன்னுரையில் கூறியுள்ளார். இதிலிருந்து அவரின் பரத கலையார்வம் நன்கு புலப்படும்.

மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசர் ஆலய நட்டுவாங்கப் பரம்பரையில் காந்தீசுவர அண்ணாவி மக்கள் சூரியமூர்த்தியென்னும் பெரிய தம்பி அண்ணாவி குமாரர் பொன்னுச்சாமி அண்ணாவி, தெய்வநாயகம் அண்ணாவியென்னும் சின்னத்தம்பி அண்ணாவி குமாரர் ஸ்ரீ மீனாட்சி சுந்தர அண்ணாவியுமாகிய இவ்விருவர் போற்றி வைத்திருந்த ஆரிய திராவிட ஆந்திர பரதசாஸ்திரங்களை அவ்விருவர் குமாரர் கந்தசாமி பிள்ளை கல்யாணசுந்தரம் பிள்ளையாகிய இவர்களது அனுமதி பெற்று அவையிரண்டையும் சிவகாசி சிவாலயம் மங்கள வாத்தியாதி சங்கீதவித்வ பரம்பரை அப்பாவு அண்ணாவி அவர்கள். திருச்செந்தூர் சுப்பிரமணியாலய நட்டுவாங்கப் பரம்பரை ஓதுவாராகிய சுப்பராய அண்ணாவியவர்களாகிய இவர்கள் உதவிய பழைய ஏட்டுப் பிரதிகள் ஆகிய பலவற்றோடு ஒத்திட்டுச் சரிகண்டு அவற்றினின்றும் பாலர்களும் பெரியோர்களும் எளிதில் கற்றுணருமாறு மதுரை மாவட்டம் இராமநாதபுரச் சமஸ்தானம் பள்ளிகடந் தாலுகா திருக்கழிகைக் கிராமம் கல்லுமடையென்னும் கச்சிநகர் மிராசுதார் குப்பையா பாண்டி பிள்ளை குமாரர் முத்திருளப்ப பிள்ளை சகோதரர் நாகலிங்கம் பிள்ளை குமாரனும் அப்பொன்னுச்சாமி அண்ணாவியின் மருமகனுமாகிய கங்கை முத்துப் பிள்ளையவர்களால் சுருக்கி விளக்கிச் செய்யப்பட்டது நடனாதி வாத்யரஞ்சனம். இவ்வளவு பெருமை படைத்த கங்கை முத்துப் பிள்ளையவர்களின் நடனாதி வாத்ய ரஞ்சனத்தையும், அவரின் மற்றோர் நூலான சபாரஞ்சித சிந்தாமணியையும் தொகுத்து வெளியிட யான் தகுதியற்றவனென்றாலும் இக்கலையின்பால் எனக்குள்ள ஆர்வம் காரணமாக யான் இதனைச் செய்தேன். மற்றும் இது சம்பந்தப்பட்ட பணியில் எனக்கு உதவிய திருநெல்வேலி ம.தி.தா. இந்து மேல்நிலைப் பள்ளித் துணை தலைமையாசிரியர் உயர்திரு எஸ். வெங்கடாசலம், எம்.ஏ., பி.டி. அவர்களுக்கும், உயர்திரு நமச்சிவாயம் அவர்களுக்கும் திரு. பிரபாகரனுக்கும் எனது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

# நாட்டிய அங்கங்கள்

நாட்டிய அங்கங்கள் பிரத்தியாங்கம், உபாங்கம் என இரண்டு வகைப்படும்.

## 1. சிரோபேதம் :

நாம் ஒருவரைப் பார்க்கும்போது முகத்தைத் தான் முதலில் பார்க்கிறோம் . இதனை ஒட்டியே ஆடுபவருக்கும் சிரநிலை பற்றி முதலில் அறிய வேண்டுவது இன்றியமையாதது ஆகும். அதனையடுத்தே ஏனைய நிலைகள் ஆராயத்தக்கன. மன எண்ணங்களாகிற சுவை அனுபவங்களை முகத்தின் வாயிலாகத் தான் வெளிப்படுத்த இயலும். ஆதலால், சிர நிலை நடனத்திற்கு மிக இன்றியமையாதது.

பல நூல்களில் சிரநிலை வகைகளின் எண்ணிக்கை பலவாறாகக் கூறப்பட்டுள்ளன.

இந்நூலில் 19 வகைகள் கூறப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:-

**1) சமசிரசு:**

அசையாது நிற்றல்.

(விநி) தொழிலாரம்பம். எல்லையில்லாத பிரணய கோபம், ஸ்தம்பித்தல், கர்வம், நிராசை, ஜபம் செய்தல், விஸ்வாஸம், நிஷ்கிரியை.

**2) உத்வாகிதம்:**

தலையை மேலே தூக்கிப் பார்ப்பது.

(விநி) மேருவின் சிகரம், சந்திரன், வானில் உள்ள விண்மீன்கள் தேர்ச்சி பெற்ற பேச்சு, கலசம், பறவை, உயரப் பார்த்தல், உயர எழுந்த துவசத் தம்பம், ஆகாயம்.

**3) அதோமுகச் சிரசு:**

தலை குனிதல்.

(விநி) மிகுந்த மோகம், துக்கம், இலஜ்ஜை, மூர்ச்சை,

தண்ணீரில் ஸ்நானம் செய்தல், வணங்குதல், பாதத்தைத் தொடல், பொருளைத் தேடல், வெட்கம், அநாவசியக் கவலை, கீழேயுள்ள வஸ்துக்களைக் காட்டுவது.

**4) ஆலோளித சிரசு:**

வட்டமாகச் சுற்றல்.

(விநி) தூக்கம் மேலுறல், சிரிப்பு, கூட்டம் மிகுந்திடும்போது மூச்சு மிகவும் அடங்கி நிற்கும் தருணம், மேடு பள்ளம், பூமியின் மீது பேய் சுற்றல், குடி மயக்கம், மயக்கம், பிரணயானும், அருவருப்பை உண்டாக்கும் அடக்க முடியாத சிரிப்பு.

**5) கம்பித சிரசு:**

மேலும் கீழும் காட்டுதல்.

(விநி) 'வாரும், இரும்' என்று கூறி அழைத்தல், கோபித்துக் கேள்வி கேட்டல், மிரட்டியே தட்டல், அன்புள்ள சமிக்ஞை, குற்றத்தை எடுத்துக் காண்பித்தல், 'நிறுத்து' எனல், விசாரனை, தேவதைகளைக் கூப்பிட்டுப் பயமுறுத்தல்.

**6) துதச் சிரசு:**

வலமிடம் அசைத்தல்.

(விநி) பக்கத்தே மெதுவாய்ப் பார்த்தல், 'சொல்' என்பவருக்கு 'இல்லை'யென்பது, ஆச்சரியத்தால் எழுந்த சந்தோஷம். 'அது பழக்கத்தில் இல்லை' எனல், பிறர் உற்சாகத்தைக் குறைத்தல், வருத்தமுறல், விருப்பமற்ற ஜுரம், பயம், மது அருந்தியவனின் முதல் அவஸ்தை, யுத்தம் முயற்சி தடுப்பது பழிக்குப்பழி, தன் அவயங்களைப் பார்த்துப் பக்கத்திலிருப்பவர்களைக் கூப்பிடுவது.

**7) பராவிருத்தச் சிரசு:**

சம முகம் திரும்பிப் பார்த்தல்.

(விநி) ஆதரவற்றுப் பார்த்தல், ஸ்தனத்தைப் பார்த்தல், வெட்கம், பராமுகம், பிறரிடமிருந்து வரும் சத்தங் கேட்கும் விதம், 'அதனைச் செய்' என்று உத்தரவிடல், கோபம், அவமானம் இவைகளால் முகத்தைத் திருப்பிக் கொள்ளல், அலக்ஷியம் செய்தல், தலை மயிரை முடிதல், அம்பறாத் தூணி.

**8) உட்சிப்தச் சிரசு :**

தலையைச் சாய்த்து அண்ணாந்து பார்த்தல்.

(விநி) காரியங்களைக் காட்டல், 'இதைப்பிடி' என்று உத்தரவிடல், 'வா' என்று அழைத்தல், ஏதாவது ஒரு வஸ்துவைத் தூக்கல், அங்கீகரித்தல்.

**9) பரிவாகிதச் சிரசு :**

இரண்டு தோள்களின் மீது பக்கத்தில் சிரசைச் சாய்த்தல்.

(விநி) மோகம், சோகம், சந்தோஷம், பெரியோரை ஆசையாய்க்

கண்டு அழைப்பது, காற்று நிரப்புதல், ஆமோதித்தல், விரக தாபம், தோத்திரம், திருப்தி.

**10) நிகஞ்சிதச் சிரசு :**

இரு தோள்களையும் உயர்த்திப் பிறகு கழுத்தைக் கூசி அமைத்தல்.

(விநி) மயிர்க் கூச்சு, தழுவிக் கூடல், சந்தோஷம்.

**11) அஞ்சிதச் சிரசு :**

தலையை ஒரு தோளில் சாய்த்தல்.

(விநி) மோகம், விசாரம், சோகம், சஞ்சலம், மேலோர் நெருங்கி வரும் போது.

**12 ) விஜாதச் சிரசு :**

தலை நடுக்கல் (விரைவாக மண்டையாட்டல்).

(விநி) கள் குடித்ததால் உண்டான போதையில், மருந்து உண்ணும் போது.

**13) ஆதூதச் சிரசு :**

இருபுறமும் பார்த்துப் பின் மேலே பார்ப்பது.

(விநி) ஆச்சரியம், சந்தோஷம்.

**14 ) அவதுதச் சிரசு :**

இரு புறங்களிலும் பார்த்து, அண்ணாந்து, கீழே பார்ப்பது.

(விநி) 'இரு' என்று சொல்லும் சமிக்ஞை

**15 ) அகம்பிதச் சிரசு :**

தலையை அழகாக அசைத்தல்.

(விநி) பேச்சு, 'செவ்வையாயிருக்கிறதென்று தலையசைத்தல், வணக்கம் கூறுதல்.

**16 ) சுகாந்தனச் சிரசு :**

தலையை இயல்பாகத் தோளில் வைத்தல்.

(விநி) தூக்கம் , மந்தம், நேசம், மூர்ச்சை.

**17) திரியக்க தானைச் சிரசு :**

திரும்பிப் பார்த்து விசையுடன் மேலே நோக்கல்.

(விநி) கருவம்.

**18) அராதிகச் சிரசு :**

சற்றே தோளை நோக்கிச் சாய்த்து, பிறகு அதனை நேராக்கல்.

*(விநி)* பிறர் மனத்தைக் காணல்.

**19 ) பார்ச்சுவாபி முகச் சிரசு :**

பக்கம் நேராக்கல்.

*(விநி)* ஆச்சரியம்.

# 2. திருஷ்டி : (கண்)

நடனம் செய்பவர் தாம் நடிக்க தம் மனத்துட் கொண்ட பொருள்களுக்கும் குறிப்பிற்கும் ஏற்பச் சிரங்களை அமைத்துக் கொள்வதோடு கண், புருவம், மூக்கு, உதடு, கன்னம், முகவாய்க் கட்டை ஆகிய உபாங்கங்களாகிய துணை உறுப்புக்களையும் மனக்குறிப்பு வெளிப்படுவதற்கு ஏற்ற முறையில் அமைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு உபாங்கங்களாகிய துணை உறுப்புகளில் கண் மிகச் சிறந்த கருவியாதலால் நேத்திர நிலைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டுவது அவசியமாகும்.

கண் பார்வைகள், சுவைப் பார்வை, மனோ விகாரத்தை அறிவிக்கக் கூடிய பார்வை, மன நிலைகளை உணர்த்தும் பார்வை என மூவகைப்படும். இவை முறையே ரஸதிருஷ்டி, ஸ்தாயி பாவ திருஷ்டி, வியபிசாரி திருஷ்டி என வடநூற்களில் வழங்கப் பெறும். அவற்றுள் ரஸதிருஷ்டி சாந்த ரசம் நீங்கலாக எட்டு சுவைகளை உணர்த்தும் பார்வை.

இந்நூலில் 36 வகைகள் கூறப்பட்டுள்ளன.

**1) சம திருஷ்டி :-**

கண்களிரண்டும் இமைக்காமல் பார்த்தல்.

(விநி ) தராசு, நாட்டியாரம்பம், ஆகாயம், தேவ உருவங்கள், ஆச்சரியங்கள், பிறர் காரியத்தை நினைக்கும் சிந்தை.

**2) ஆலோகிதம் :**

சாடையாய்ப் பிரமித்துத் திறமையுடன் சுழற்றிப் பார்த்தல்.

(விநி ) சகலமும் பார்த்தல், குயவன் திரிசக்கரம், இச்சை மிகது , சிந்தையில் பொருந்திய பிரமை, யாசிப்பது.

**3) சாசி திருஷ்டி :**

பக்கங்களில் குறுக்கே பார்ப்பது.

(விநி ) நீட்டிய பார்வை, கிளி, மீசையை முறுக்கல், இஞ்சிதம், சேலை, சாரிக் கூத்து, அம்பினால் குறி பார்த்தல், மறைமுகமாகச் சொல்வது, பழைய சம்பவத்தை நினைப்பது, காரியத்தைத் தெரிவிக்கும் படியான காலம்.

**4) பிரலோகித திருஷ்டி :**

இருபக்கங்களிலும் பார்த்தல்.

(விநி ) மிகுந்த சம்பாத்யம், இருபக்கங்களிலும் உள்ள எல்லாப்

பொருள்களையும் பார்த்தல், அசைவது, புத்தியீனங்கள் அபரிதமான, வாத்ஸல்யம், நகருதல், மூடத்தனம்.

**5) நீமிலித திருஷ்டி :**

அரை விழியாய் விழித்தல்.

(விநி ) நமஸ்காரங்கள், பரவசம், ஜெபம், தியானம், பைத்தியம், கொஞ்சப் பார்வை, இருஷி வேஷம், பாம்பு, அடிமைத் தனம், வந்தனம், கூர்மையான கவனிப்பு.

**6) உல்லோகித திருஷ்டி :**

உயரப் பார்த்த பார்வை .

(விநி ) தேவ மண்டலங்கள், சந்திரன், கோபுரங்கள், கொடி நுனிகள், உயரிடங்களிலுள்ள பொருள்கள், முன் பிறப்புக்கள், உயரம்.

**7) அநுவிருத்த திருஷ்டி :**

மேலேயும் கீழேயும் மிக விரைவாகப் பார்த்தல்.

(விநி ) பொல்லாக் கோபங்கள், மந்திரி, பல வேலைகள் , நண்பர்களை வரவேற்பது.

**8) அவலோகித திருஷ்டி :**

தரையைப் பார்ப்பது.

(விநி ) நடத்தல், நிழல் பார்த்தல், விசாரம், சூரம், புராணங்கள், படிப்பது, கவனமாய்த் தன் தேகம் பார்த்தல், பிரதிபிம்பம், ஆலோசனை செய்தல்.

**9) துரித திருஷ்டி :**

கருவிழிகளை யானையைப் போல் உருட்டி நோக்கல்.

(விநி ) பிரபந்தம், கீதம், உடம்பிலே பூசும் சந்தனம், வீர ரசம்.

**10) சூசனா திருஷ்டி :**

கண்ணைச் சுழித்து மூடல்.

(விநி ) மேல் தேசங்களைப் பார்த்தல், நாட்டியம், பரணம் தொடுத்தல், பதிவிரதைகளின் கற்பு நிலை, மன்மத லீலைகள், சிருங்கார ரசங்கள்.

**11) உக்கிர திருஷ்டி :**

இரு கடைக் கண்களும் சிவந்து பார்த்தல்.

( விநி) பைத்தியம் கொண்டவன் ,கோபம், வேகம், பயரசம்.

**12 ) தூர திருஷ்டி :**

சிறிது உயர நோக்கம்.

(விநி) கள்ளையும் சாராயத்தையும் அருந்துபவன் கை, கால்களை நீட்டல்.

**13 ) காத்தக் கண் :**

கருவிழியைப் பெரிதாக்கிப் பார்த்தல்.

( விநி) பிரமை, அதிசயித்தல், பெண் வதனம் பார்த்தல், சித்திர உறுப்பு, சிருங்காரம், மதி, ரவி, இரதத்தில் பூட்டிய குதிரை,கொடுமுடி, கோபுரம், கண்ணாடி பார்த்தல், பெண்கள் பொருள்களைப் பார்த்தல்,முகத்தில் வீர ரசம் சனித்தல், நக்ஷத்திரங்கள், சந்திரன், சூரியன், பல பொருள்களைப் பார்த்தல், அஞ்சனம்.

**14) பயாநக திருஷ்டி :**

கண்ணைத் திறந்து மூடி பிறகு கருவிழியால் பார்ப்பது.

(விநி) மையல், வாஞ்சனை, வாஞ்சை, மூக்குக் கண்ணாடி, புத்தகத்தில் எழும் சலிப்பு, வாசனையை மோத்தல், விநயம், கருவம், வஞ்சனை, அடையாளம் மோகித்தல், துக்கம், ஆசையைக் காட்டல், மோகினியுருவங் கண்ணாடி பார்த்தல், பல பொருள்களை மதிப்பிடல், மருட்சி.

**15 ) கருணா திருஷ்டி :**

இருகண்களின் ஓரங்களின் நடுவை விரித்து இடைக் கண்களால் இடுக்கிப் பார்ப்பது.

(விநி) சூரியனைப் பார்த்தல், மந்திரத் தியானம், சேவை, பகைவரோடு எதிர் மொழி செப்புதல், கண்ஷோலரல், கண் கூசிப் பார்த்தல், மன அன்பு பொருந்த உடலைச் சிலுப்புதல், தவசிகள் மூக்கினைப் பார்த்தல், அசதி, மணப்பெண் தலை கவிழ்ந்து நாணி குனித்துப் பார்த்தல், வாயில் திரி வைத்துக் குறி பார்த்தல், மையல், ஆசை, கண்களில் தூசி விழுந்திருத்தல், மருந்து அருந்துதல், புகை சூழ்ந்திருத்தல், ஒரு பொருளை மறந்திருப்பின் யோசித்தல், ஆசையாய்க் காட்டல், நெருப்பின் புகை, சாந்த குணங் காட்டல்.

**16) மூடாம்பகக் கண் :**

இமைகள் சூட்சித்துப் பார்த்தல்.

( விநி) விரைந்திடும் சிந்தை நோய், மயக்கம், தியானம், துக்கம், நித்திரை.

**17) அற்புத திருஷ்டி :**

வாடிச் சோம்பி நோக்கல், இமைகள் சற்று நாடித்துடிக்கக் கருவிழி சஞ்சலங் கொண்டு நோக்குதல்.

( விநி) ஒருவரைத் தாக்கும் பொருட்டு, ' அவரை நோகச்

சொன்னோம்' என்னும் போது, சரீரம் நோய் கொண்ட போது, அற்புதமான பொருள் ஒன்றையே யோசித்துப் பார்த்தல்.

**18 ) வீர திருஷ்டி :**

இமையும் கண்ணும் அசையாதிருத்தி, மெதுவாகப் புருவத்தை நெரித்து, கண்ணைச் சிவக்கச் செய்து, நொய்மையாகவும் பொறுமையாகவும் நோக்குதல்.

( விநி) வீரர் மேல் பாய்வது.

**19) விகற்ப திருஷ்டி :**

இரு கண்களையும் கம்பீரமாய்த் திறந்து, கடைக்கண்ணைச் சற்றே குவித்து, அசையாமல் சீராய் பார்ப்பது.

**20) விப்பிராந்த திருஷ்டி**

இரு விழிகளும் திறந்து,அவை யிரண்டும் ஒருமிக்கப் பரபரப்பாய் வேகமாய் பார்ப்பது.

**21) விஷான திருஷ்டி :**

கடைக்கண் சொக்கி இமைகளைத் திறந்து, கண் இமையைக் கொட்டிப் பார்ப்பது.

**22) விப்புலுத திருஷ்டி :**

விழித்திருக்கும்போது, கோரியது 'உண்டு', 'இல்லை' என்று இமைகளைக் கொட்டுதல்.

( விநி) துக்கம், உன்மத்தம்.

**23 ) விதர்க்கித திருஷ்டி :**

கண்ணும் இமையும் துடித்துப் பரபரப்பாய் நாற்றிசையும் நோக்குவது.

**24 ) தீனா திருஷ்டி :**

மேல் இமை சிறிதளவு கொட்டி, கருவிழியைச் சற்றுக் காட்டி, கண்ணீர் ததும்பப் பார்த்தல்.

**25) திரஸ்தா திருஷ்டி :**

உள் நடுக்க, இமை துடிக்க, விழி சலிக்க நோக்கல்.

**26 ) கிரஸ்தா திருஷ்டி :**

இமை சலித்து, புருவம் நெரித்து விழி எழப் பார்த்தல்.

**27 ) இருட்டாக் கண்:**

கருவிழியைச் சற்றே சொருவி ஓய்ந்து, இமைகளைக் கொட்டி கபோலத்தை நிமிர்த்துப் பார்ப்பது.

**28) மலிதீ திருஷ்டி :**

ஒன்றைப் பார்த்துத் திரும்பிப் போவது போல, மெதுவாக இமையைச் சற்றே பணிய மூடுவது.

**29) வளித திருஷ்டி :**

கடைமூடி, புருவம் சேர்த்து, (பிறகு) கண் திறந்து பார்ப்பது.

**30) குஞ்சித திருஷ்டி :**

இமை பாதி மூடி, விழிப் பக்கம் தாவிச் சஞ்சலமாய்ப் பார்த்தல்.

**31) ஆசியாக் கண் :**

விழியைச் சற்றே சுருங்கச் செய்து ஆச்சரியமாய்ப் பார்த்துக் கூவிச் சிரித்தல்.

**32) அச்சதா திருஷ்டி :**

உள்ளும் புறமும் தோற்றவும், ஒளி நிறக்கவும் காட்டுவதும், வெள்ளை விழி மேலிடப் பார்ப்பதும் ஆகும்.

**33) சங்கித திருஷ்டி :**

கண்ணைத் திறமாய் விழித்துப் பார்த்து, மறுபடி இமையை மூடி கடைக்கண்ணால் பார்த்தல். (''மதக்கண்'' என்ற வகையில் மூன்று வகை உண்டு. அவை பின்வருவன.)

**34) கருணை மதக் கண்:**

விழித்து, ஓரம் சரித்து, விகாரமுற்றுப் பார்த்தல்.

**35) மத்திம மதக் கண் :**

நிர்ணயமாகச் சற்றே இமைகளை விழித்து மூடி, அசைத்துப் பார்ப்பது.

**36) அதரும மதக் கண் :**

விழியைக் கீழே திருப்பிப் பார்த்து பிரயாசைப்பட்டு இமைகளைச் சேர்த்துக் கொட்டுதலாகும்.

## 3. புருவ பேதம்

புருவங்கள் கண்ணுக்கு ஒத்த சுவையுணர்ச்சியை வெளிப்படுத்துவது. அவை பிருகுடி, உயரத் தூக்குதல், வீழ்த்துதல்,

வளைத்தல், சதுரமாக அமைத்தல், சுழற்றுதல், இயல்பில் நிற்றல் என்று ஏழு வகைப்படும். அவற்றுள் உயரத் தூக்குதலாவது புருவங்களை நெற்றியின் மேல் தூக்குதல். ஒரொருக்கால் இயல்பாயும் மேலேறியும் இருக்கும் புருவங்களைக் கீழ் நோக்கி இறக்குதல் 'வீழ்த்துதல்' எனப்படும். புருவத்தின் நுனியை மேல் நோக்கித் தூக்குதல் 'பிருகுடி' யாம். கொஞ்சம் மூச்சு விடும் போது இனிமையாகப்புருவங்களை அசைத்தல் சதுரமாம். ஒரு புருவத்தையாவது இரு புருவங்களையாவது அழகாக அசைப்பது குஞ்சரமாகும். ஒரு புருவத்தை அழகாகஉயர்த்துதல் 'ரேசிதம்' ஆகும். உயர்த்தாமலும், தாழ்த்தாமலும் புருவங்களைச் சமமாக நிறுத்துதல் சகஜமாகும்.

கீழே நான்கு வகைப் புருவ பேதங்கள் கூறப்பட்டுள்ளன.

**1) மிதப்புருவம் :**

புருவம் சிறந்து மேலே சிறிதசைத்தல்.

(விநி) சாடை செய்தல், மனமுவந்த வேடிக்கை பேச்சுப் பேசுதல்.

**2) அமிதப் புருவம் :**

மிகுந்து மேல் அசைப்பது.

(விநி) நாடக சூசனையில் காண்பது.

**3) உத்வர்திதப் புருவம் :**

மேலே நோக்குதல்.

(விநி) ஞானம், தீர்க்காலோசனை.

**4) அபவர்திதப் புருவம் :**

புருவம் கீழ் நோக்குதல்.

(விநி) துக்கம்.

# 4. நாசி பேதம்

மூக்கு பேதம் பின்வருமாறு 5 வகைப்படும்.

1. அசீலிட்ட நாசி
2. சிலிட்ட நாசி
3. கம்பித நாசி
4. சிலிட்டபுட நாசி
5. சத்புட நாசி

**1) அசீலிட்ட நாசி :**

நாசியை வலப்பக்கமாகத் தூக்குதல்.

(விநி) சாடை, கபடம்.

**2) சிலிட்ட நாசி :**

இட நாசியை ஆட்டுதல்.

(விநி) தூர திருஷ்டி.

**3 ) கம்பித நாசி :**

இரு நாசிகளையும் தூக்கி ஆட்டடல்.

(விநி) வாசனையை ஒப்புக் கொள்ளல், ஜன்னி நோய்.

**4) சிலிட்ட புட நாசி :**

நாசியை இடைவிடாமல் அசைத்தல்.

(விநி) வேடிக்கை, விரகம், சோகம்.

**5) சத்புட நாசி :**

இரு நாசிகளும் தூக்கியிருத்தல்.

(விநி) அசூயை.

## 6. அதர பேதம் :

உதட்டின் தொழில், வளைத்தலும், நடுங்குதலும், விடுத்தலும், மடித்து வாய்க்குள் தூற்றுதலும், உதட்டைக் கடித்தலும், இயல்பாக வைத்துக் கொள்ளுதலும் என ஆறு வகைப்படும். மற்றும், கீழே நாக்கு அதர பேத வகைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**1) சமவதரம் :**

வாயை மூடியிருத்தல்.

(விநி) கோபம், துக்கம்.

**2) சுபாவதரம் :**

இள நகை . (விநி) தயவு , வஞ்சம்.

**3) விகசித அதரம்:**

மிகவும் மகிழ்வது. (விநி) சந்தோஷாதிகள்.

**4) ஈஷார்யவதரம் :**

வாய் கோணி நகைத்தல். (விநி) சாடை, சைகை.

**5) முகராகம் : (முகவாய், மோவாய்)**

முகவாய்க்கட்டையின் தொழில் குட்டனம் முதலாக ஆறு

விதப்படும். இவ்வண்ணம் முகம், முகத்தையொட்டிய நாட்டிய பாவங்கள் ஒவ்வொரு நாட்டியங்கள் தோறும் பலவகைகளில் மேற் கொள்ளப்படுகின்றன. ஆகவே, நாட்டிய தாண்டவங்களை அறிந்து சுவைக்க வேண்டுமானால் நடிப்பவருடைய முகத்தில் உணர்தல் வேண்டும். கீழே இந்த முகராகப் பிரிவின் நான்கு வகைகள் தரப்பட்டுள்ளன.

**1) சுவாபாவிக முகம் :**

மனத்தில் விகாரமில்லாமல் இருத்தல்.

**2) பிரசன்ன முகம் :**

மனம் மிகுந்த சந்தோஷத்துடன் இருத்தல்.

**3) இரத்த முகம் :**

கிருபை, முன் கோபம், வீரம் இவற்றுடன் இருத்தல்.

**4) சியாமம் :**

மனதில் துக்கம் கொண்டிருத்தல்.

# 7. கழுத்து பேதம்

இந்த கண்ட (கழுத்து) பேத பிரிவில் 4 வகைகள் கூறப்பட்டு உள்ளன.

அவையாவன :

1) சுந்தரி கண்டம்

2) திரச்சீன கண்டம்

3) பரிவர்த்தன கண்டம்

4) பிரகம்பித கண்டம்

**1) சுந்தரி கண்டம் :**

கழுத்தை குறுக்கி விந்தையாய் அசைத்துக் காட்டுதல்.

(விநி) இரத்னங்கள் பார்ப்பது, வீணை வாத்யம், தேவதா நமஸ்காரங்கள், பல காரியாரம்பம், நல்லோர் சிநேகாரம்பம், பயித்தியம், சரசங்கள், சந்தோஷம், நட்பின் தொடக்கம், நல்லது என்ற பாவத்தை விளக்குவது முயற்சி, மகிழ்ச்சியோடு ஆமோதித்தல்.

**2) திரச்சீன கண்டம் :**

பாம்பு போவது போல், இருபக்கங்களிலும் உயர்ந்து அசைத்தல்.

(விநி) பாம்பின் கதிகள், பெரிய கத்தி, ஆயாசங்கள், வாட் பயிற்சி.

**3) பரிவர்த்தன கண்டம் :**

வலப் பக்கமாக அர்த்த சந்திரனைப் போல் அசைத்தல்.

(விநி) சிங்கார நாட்டியம், ஆசைநாயகியின் கபோலத்தைப் பருகிடல். (முத்தமிடல்).

**4) பிரகம்பித கண்டம் :**

மாடப்புறாவைப் போல் முன்னும் பின்னும் கழுத்தை அசைத்தல்.

(விநி) 'உனக்கு' என்பது, தேசிய நாட்டியம், நீண்ட மாலைகள், 'நீ', நான் எனல், சம்போக காலத்தில் ஏகாந்தமான சம்பாஷனை, ஊஞ்சலில் ஆடுவது.

# ௭. புஜபேதம்

இந்தப் பிரிவில் பதினாறு வகைகள். இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையும், அவற்றின் விவரங்களும் : (கீழ் வருமாறு)

| | | |
|---|---|---|
| 1) ஊர்த்வம் | : | உயர்ந்து காட்டல். |
| 2) அதோ முகம் | : | தணிந்து காட்டல். |
| 3) த்ரியக்கதம் | : | பக்கத்திற் காட்டல். |
| 4) அபவிருத்தம் | : | தோளைத் தொடுதல். |
| 5) பிரஸாரிதம் | : | முன்னே நீட்டல். |
| 6) அஞ்சிதம் | : | மார்பில் வைத்தல். |
| 7) மண்டல கதி | : | நான்கு திக்கும் நீட்டல். |
| 8) சுவத்திகம் | : | கைகட்டிக் கொள்ளுதல். |
| 9) உத்வர்த்திதம் | : | உயரச் சுற்றுதல். |
| 10) பிரிஸ்டானுசாரிதம் | : | பின்னே நீட்டல். |
| 11) நம்ரம் | : | கையை வளைத்து ஏந்தல். |
| 12) ஆவிடம் | : | வளைத்து வாங்குதல். |
| 13) சரலம் | : | பக்கத்தில் நீட்டி வாங்குதல். |
| 14) குஞ்சிதம் | : | முழங்கையை வளைத்து முடியாகப் பிடித்தல். |

15) ஆந்தோளிதம் : கையை வீசி நடத்தல்.

16) உத்ஸாரிதம் : போகச் சொல்லி நடத்தல்.

# 9. கரபேதம் :

கரம் என்பது கை, இதுவே தாண்டவத்தில் பெரும் பங்கு கொண்டிருக்கிறது. இது ஒற்றைக் கை, இரட்டைக் கை, நிருத்தக் கை, முத்திரைக் கை என நான்கு வகைப்படும். ஒற்றைக்கையை 'அஸம்யுத உறஸ்தம்' என்றும், இரட்டைக் கையை 'சம்யுத ஹஸ்தம்' என்றும், நிருத்தக் கையை நிர்த்த ஹஸ்தம்' என்றும், வட மொழி நூல்கள் வழங்குகின்றன. 'ஒற்றைக்கை' யின் வகைகள் பல நூல்களிலும் பலவாறாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் 47 வகைகள் கூறப் பட்டுள்ளன.

## 1) ஒற்றைக் கை :

பதாகம் :

நான்கு விரல்களையும் நீட்டிக் கட்டை விரலை வளைத்தல்.

(விநி) நாட்யாரம்பம், கடலலை நகர்ச்சி, காடு, சந்திரனைப் பழித்தல், ஸ்தன தடம், அஞ்சனம், மலை, ஓலை, நடன பாவம், அரசன், நிலம், சந்திரன், கதவு, வீதி, ஏழு வேற்றுமை உருபுகள், பந்தடி, நதியிலோடும் வெள்ள நீச்சு, மௌனம், சத்தியம், காலம், கந்தப் பூச்சு, சமர்த்தன், புண்ணியன், போதனை, போகச் சொல்லல், ஆயிற்று எனல், பெருக்கித் தள்ளுதல், முழம், வேல், சூதுக்காயை எறிந்திடல், வெயில் மறைப்பு, வாளின் உருவம், வளர்ச்சி, குட்டை, குளம், கோபித்தல், வீரம், வெகுதயவு, ஆசீர்வாதம், தெய்வலோகத்தைச் சுட்டிக் காட்டல், ஊக்கம், வேகமாகச் செவியில் அறைதல், பெரியோர் கண்டிப்பு, உள்ளங்கையால் மத்தைப் பிடித்துத் தயிர் கடைதல், மூடல், பெருவழி நடத்தல், 'அடே' அடித்திட வேண்டாம்' எனல், ஏசி அழைத்தல், தொடுதல், தன்னைப் பின்பற்ற உரைத்தல்.

**மேகங்கள், காற்று இவற்றுக்கு :**

ஒரு கையை முகத்துக்கும், தலைக்கும் நேராகத் தூக்கி அதே சமயத்தில் உள்ளங்கை பூமியை நோக்கி இருக்கும்படியாய் அமைத்து, கையைக் கொஞ்சம் கொஞ்சமாய் அசைத்துக் கொண்டே கீழே இறக்குதல்.

**''வனம், இரவு''களுக்கு :**

தலைக்கு நேராக, முகத்துக்கு முன் பக்கத்தில், ஒரு கையை வைத்து, உள்ளங்கை தரையைப் நோக்கி இருக்கும்படி அமைத்தல்.

**பொருட்களைத் தடை செய்தல் :**

உள்ளங்கை பிறருக்குத் தெரியும்படியும், முழங்கை முதல் கீழ்க்கை

முழுவதும் எதிரிலுள்ளவர்களுக்குத் தெரியும்படியும் நீட்டி, மணிக்கட்டு முதல் முன்கையினை வலது பக்கமாகவும் இடது பக்கமாகவும் அசைத்தல்.

**அர்ப்பமிருக்குமிடம் :**

உள்ளங்கையை எதிரிலிருப்பதற்குத் தெரியும்படியாகப் பிடித்து, விரல் நுனிகள் பூமியைப் பார்க்கும்படி அமைத்து முழங்கை முதல் கீழ்க்கையை இறக்குதல்.

**ஆறு :**

ஒரு கையை தலை உயரத்துக்கு மற்றொரு பக்கத்துக்குக் கொண்டு போய், பின்னால் இருப்பவர்களுக்கு உள்ளங்கை சிறிது தெரியும்படிக் காட்டி, பிறகு கையை முன்னிருந்த பக்கத்துக்கே வரும்படி சாய்வாய் இறக்குதல்.

**தேவ சமுகம், அமர மண்டலம் :**

கையைத் தலைக்குமேல் மறுபக்கத்துக்குக் கொண்டு வந்து, உள்ளங்கையைப் பின்புறம் இருப்பவர்களுக்குத் தெரியும்படி திருப்பி, அதே சமயத்தில் விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படி அமைத்து, கொஞ்சம் வளைவாய்க் காட்டுதல்.

**குதிரை, துண்டித்தல்:**

இடக்கை விரல் நுனிகள் மட்டும், எதிரில் இருப்பவர்களுக்குத் தெரியும்படி வைத்து, முழங்கை முதல் நீட்டி, வலது உள்ளங்கை இடது பாகத்தில் இருப்பவர்க்குக் கொஞ்சம் தெரியும்படி இடது காதுக்கு அருகில் பிடித்து, சாய்வாக வேகத்துடன் வலது கையை இறக்கித் தன் பக்கத்துக்குக் கொண்டு வருதல்.

**படுக்கை :**

விரல் நுனிகள் பின்னால் இருப்பவர்களுக்குத் தெரியும்படி இரு கைகளையும் அதனதன் பக்கத்திலுள்ள காதுக்கு சமீபத்தில் இருத்தி, உள்ளங்கைகள் காதுகளில் பொருந்துவது போலக் காட்டி, தலையணை ஏதாவது ஒருகையில் பொருந்துவது போல அமைத்து அந்தப்பக்கம் தலையைச் சிறிது சாய்த்தல்.

**புறப்படுதல்:**

மணிக்கட்டு மார்புக்கு நேராக வர மணிக்கட்டுக்கு மேல்பட்ட எதிரில் இருப்பவரைப் பார்ப்பது போல ஆனால் அதே சமயத்தில் விரல் நுனிகள் மட்டும் அவர்களுக்குத் தெரியும்படி அமைத்து, கையை எதிரில் கொண்டு போதல்.

**கீர்த்தி :**

அந்தந்தக் கைகளை உள்ள பக்கத்தில் முழங்கை முதல் மேலே

தூக்கி, உள்ளங்கை பின்னால் இருப்பவர்க்குத் தெரியும்படியாகக் கையைக் கொஞ்சம் பின்னால் கொண்டு போதல். (விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்க வேண்டும்).

**அனுக்ரகம் :**

மணிகட்டை மார்புக்கு நேராகக் கொண்டு உள்ளங்கை அடுத்த பக்கத்தில் உள்ளவர்களுக்குத் தெரியும்படியாயும், விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படியாயும் அமைத்து, கையைக் கொஞ்சம் சாய்வாகப் பிடித்தல்.

**தனித்தல் :**

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து உள்ளங்கையைக் கொஞ்சம் பூமிக்கும் சிறிதளவு மார்புக்கும் தெரியும்படி வேகமாக அசைத்தல்.

**கதவைத் திறத்தலும் மூடலும் :**

தோள்பட்டை முதல் முழங்கை வரையில் சிறிது முன்னே கொண்டு வந்து, மணிக்கட்டு மார்புக்கு நேராக வரும்படியாகக் கீழ்க் கையைச் சிறிது மடித்து, மணிக்கட்டின் மேல் பாகத்தை மேலே தூக்கி உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாகப் பிடித்தல்.

**ஏழு விபத்திகளை விளக்குதல் :**

முழங்கை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி உள்ளங்கை ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படிப் பிடித்தல்.

**அலை :**

''காற்றுக்குப் பிடித்த ஹஸ்தம் போலவே மார்புக்கு நேராகப் பிடித்த கையை ஒருபக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்துக்குக் கொண்டு வருதல்.

**வீதியில் ஊர்வலம் செல்லுதல் :**

வலக்கையை இடதுபக்கத்துக்கு அருகில்கொண்டு வந்து, உள்ளங்கையை ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படியாகப் பிடித்து, அப்படியே தாழ்வாகத் தன் பக்கத்துக்குக் கொண்டு வருதல்.

**பிரவேசம் :**

வலது மணிக்கட்டை மார்பின் நடுப்பாகத்துக்கு நேராகக் கொண்டு வந்து, விரல் நுனிகள் எதிரில் இருப்பவர்களுக்குத் தெரியும்படிப் பிடித்து, மணிக்கட்டு முதல் மேற்பட்ட பாகத்தை எதிரில் இருப்பவரைப் பார்க்கத் தள்ளுதல்.

**சமத்துவம் :**

கணுக்கையை மார்பின் நடுப்பாகத்துக்கு நேராகப் பிடித்து, உள்ளங்கை பூமியைப் பார்க்கும்படியாய் அமைத்து, எதிரில்

இருப்பவரைப் பார்க்கத் தள்ளி மறுபடியும் தன் மார்புக்குச் சமீபமாகவே இழுத்துக் கொள்ளுதல் .

**சந்தனம் பூசுவது :**

உள்ளங்கையை வயிற்றில் பொருத்தித் தோளிற்குச் சமீபம் வரை இழுத்தல்.

**ஆத்ம பிரயோஜனம் :**

உள்ளங்கையை மார்பில் பொருத்துதல்.

**சபதம் :**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்கும்படி நீட்டியும் உள்ளங்கை பூமியைப் பார்க்கும்படியும் அமைத்து, மணிக்கட்டு பூமியைப் பார்க்க ஒருதடவை அசைத்தல்.

**கத்தி பிடித்தல் :**

முழங்கை முதல் மேலே தூக்கி, உள்ளங்கை கன்னத்தைப் பார்த்திருக்கும்படி பிடித்தல்.

**மழை பெய்தல்:**

முகத்துக்கு எதிரில் தலைக்கு மேலாகக் கையைக் கொண்டு வந்து, உள்ளங்கை பூமியை நோக்கியிருக்கும்படி அமைத்துக் கொஞ்சம் அசைத்தல்.

**மெதுவாகப் பேசு எனல் :**

பாம்பு விரல், நாசிக்குச் சமீபமாய்ப் பொருந்துவது போலவும் அமைத்து உள்ளங்கை தன்னைப் பார்க்கப் பிடித்தல்.

**பனை ஓலை :**

வலது கை ‘இடது’ முழங்கைக்கு மேலாக இருக்கும்படியும், உள்ளங்கை ஆகாயத்தைப் பார்க்கும்படியாகவும் அமைத்து, கொஞ்சம் சாய்வாகக் கையைத் தன் பக்கத்துக்குக் கொண்டு வருதல்.

**ஆசிர்வதித்தல் :**

முழங்கை முதல் எதிரில் இருப்பவரைப் பார்க்க நீட்டி, எதிரில் இருப்பவருக்குத் தெரியும்படி நீட்டிப் பிடித்து, கீழ்க் கையை ஒரு தடவை பூமியைப் பார்க்க இறக்கல்.

**பெரிய அரசர்களைக் காட்டல் :**

முழங்கை முதல் தோள் பட்டையைப் பார்க்க வலப்பக்கமாகத் தூக்கி, கட்டை விரல் நுனியைக் கொஞ்சம் காதுப் பக்கம் சாய்த்து அமைத்தல்.(உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரிய வேண்டும்.)

**கன்னத்தைக் காட்டல் :**

விரல் உட்புறத்தைக் கன்னங்களில் வைத்தல்.

**'அதை' 'இதை' என்று சுட்டிக் காட்டுவது :**

முழங்கை முதல் எதிரில் இருப்பவரைப் பார்க்க நீட்டியும், உள்ளங்கை அவர்களுக்குத் தெரியும்படிப் பிடித்தும், கீழ்க் கையை இரண்டு மூன்று தடவை அசைத்தல்.

**பொருட்களைத் தொடுதல் :**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி,உள்ளங்கையைப் பூமியைப் பார்க்கப் பிடித்து, மணிக்கட்டுக்கு மேற்பட்ட பாகத்தைப் பூமியைப் பார்க்க ஒரு தடவைஅசைத்து, முன் அசைத்த இடம் விட்டு இரண்டு அல்லது மூன்று தடவைகள் மேலே சொன்னபடி அசைத்தல்.

**சமுத்திரம் :**

மணிக்கட்டு முதல் கொப்பூழுக்கு அருகில் கொண்டு வந்து உள்ளங்கையைப் பூமியில் பார்க்கப் பிடித்து, மணிக்கட்டு முதல் கீழே இறங்கி - மேல் ஏறினது போல் எதிரில் இருப்பவரைப் பார்க்கத் தள்ளுதல்.

**புண்ணியவான் :**

'அதை' என்று காட்டப் பிடித்தது போலப் பிடித்து ஒரு தடவை அசைத்தல்.

''அடே'' என்பது போலுள்ள தாத்பரீயம் , ''முன்னால் போனவன்'' எனல் :

தோள் பட்டை முதல் எதிரில் இருப்பவரை நோக்கி, தன் மார்புக்கு நேராக இருக்கும்படி நீட்டுதல்.உள்ளங்கை ஆகாயத்தைப் பார்த்திருக்க வேண்டும்.

**வருடம், மாதம், நாள்:**

மணிக்கட்டை மார்புக்குச் சமீபத்தில் கொண்டு வந்து, உள்ளங்கை எடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியும்படி மணிக்கட்டு முதல் மேல் பட்ட பாகத்தை மேலே தூக்குதல்.

**மழை பெய்தல் :**

முகத்துக்கு எதிரில் தலைக்கு மேலாகக் கையைக் கொண்டு வந்து, உள்ளங்கை பூமியை நோக்கியிருக்கும்படிக் கொஞ்சம் அமைத்தல்.

**துடைப்பம் :**

முழங்கை முதல் எதிரில் இருப்பவரைப் பார்க்க நீட்டி, மணிக்கட்டு இடுப்புக்குச் சமீபமாக வரும்படித் தாழ்த்தி முழங்கை முதல் வலமிடமாக அசைத்தல்.

**நாட்டியாரம்பம் :**

இரண்டு கைகளையம் ஒன்றையொன்று உட்புறம் பார்க்கும்படியாகவும், விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியாகவும் அமைத்து, கைகளைச் சிரசுக்கு மேல் தூக்கி ஒன்றுடனொன்று பொருந்துவது போல இருகைகளையும் அருகில் கொண்டு வந்து, பிறகு அந்தந்தக் கைகளை அதனதன் பக்கத்தில் கொண்டு வந்து, தோள் பட்டை முதல் மணிக்கட்டுவரை கொஞ்சம் சாய்வாக நீட்டி விரல் நுனி எதிரிலிருப்பவர்களுக்குத் தெரியும்படி முன் கையைத் திருப்புதல்.

மத்தளத்திலும் பலகையிலும் வாத்தியம் வாசித்தல். பக்ஷிகள் பறப்பதைக் காட்டல், தரையை மெழுகுதல், சுவரில் சுண்ணம் தீட்டுதல், முழந்தால் அளத்தல், நீந்துதல், சலாமிடுதல், அஞ்சனம் பார்த்தல், பிரபஞ்ச விஸ்தாரம் காட்டுதல், 'வா' எனல், பாகம் அளத்தல், வேல், வாள், சமுதாடு இவற்றின் உருவங் காட்டுதல், மார்பைத் தட்டுதல், பொருள் திரட்டல், அபிஷேகித்தல், ஒன்றைப்புகுத்தல், நிவேதித்தல், பிசாசாட்டத்தில் தரையிற் கையூன்றல், யாகாக்கினியைக் கை வைத்து ஊதுதல், 'நினைத்த காரியம் கை கூடும்' எனல், கண்ணேறு பட்டவரையும், ஜீவர முற்றோரையும் தொட்டுப் பார்த்தல்.

**சங்கீர்ண பதாகம் :**

பதாகக் கையில் நடுவிரலை விரைவுடன் மடக்கிச் சுட்டுவிரலைப் பவித்திர விரலால் தொட்டு, நீட்டித் தாளத்தில் வைத்தல்.

(விநி) தண்ணீர், பால், வருடம், மாதம், 'ஏன்' என்று கேட்டல், துக்கம், வில்லைப் பிடித்திழுத்தல்,மௌனம், மழை, விகாரம், கூந்தல், விளக்குமாறு, 'நான்' எனக் கையால் காட்டல், தியானம்.

**சிலிட்ட பதாகம் :**

பதாகத்தில் சிறு விரலை வளைத்தால் நாய், முதுகு, நீர்ப்பூச்சி இவற்றைக் குறிக்கும்.

**தலபதாகம் :**

பதாகக் கையில் கட்டை விரலையும், சுண்டு விரலையும் உயர்த்தி, மற்ற மூன்று விரல்களைச் சிறிதளவு தணித்துச் சாடையாக அடக்கிக் காட்டல்.

(விநி) உடும்பு, நரம்புகளை இழுத்துப் பதைக்கச் செய்யும் ஜன்னி, குட்டரோகம், ராமப் பற்று (ஒரு நோய்) அகத்தியின் மலர்கள்.

## 2. திரிபதாக அஸ்தம் :

பதாகக் கையில் மோதிர விரலை வளைத்தக் காட்டல்.

(விநி) வருடம், மாதம், ருது, தினங்கள் , வாருகோல், யுத்தங்கள்,

கபால ரேகை, திருமால், சண்டையிற் பாணம் போடல், கிரீடம், கோபம், தேவேந்திரன், திலகம், நாமம், நல்வாசனை, காது, மங்கலம்.

இக்கையை நெஞ்சில் வைத்தால் சுடர் விளக்கு, வச்சிராயுதம் (செவிக்கு அருகில் வைத்தால்) நிமித்தம், மார்பில் வைத்தால் வைதல், மூன்று வைத்து வாங்கத் தம்பதி சேர்க்கை.

**சலிதத்திரி பதாகம் :**

திரிபதாகத்தை அசைப்பது.(விநி) ஈட்டி திருப்பல், தூள்களைக் குறுக்கே குவித்தல், குடுகுடுப்பையை ஆட்டுதல், பெருமரக் கொம் பாடல், ரோகணி.

**கிரீடம் :**

உள்ளங்கை அடுத்த பாரிசத்தில் இருப்பவருக்குத் தெரியும்படி நடுத்தலைக்குச் சமீபமாய்ப் பிடித்தல்.

**விருக்ஷம் அல்லது மரம் :**

தோள்பட்டை முதல் எதிரில் இருப்பவரைப் பார்க்கக் கொஞ்சம் நீட்டி, கணுக்கையை மார்புக்குச் சமீபத்தில் வரும்படி மேலே தூக்கி, உள்ளங்கை அடுத்த பாரிசத்தில் இருப்பவர்க்குத் தெரியும்படிப் பிடித்தல்.

**வஜ்ராயுதம்:**

உள்ளங்கை எதிரில் இருப்பவரைப் பார்க்க, முழங்கை முதல் தோள் பட்டைக்கு மேலே தூக்கல்.

**விளக்கு :**

மணிக்கட்டை மார்புக்குச் சமீபத்தில் பிடித்து, விரல் நுனி ஆகாயத்தையும், உள்ளங்கை அடுத்த பக்கத்திலுள்ளவரையும் பார்க்கப் பிடித்தல்.

**கபோலம் :**

கன்னத்தில் பாம்பு விரலைப் பதிய வைத்தல்.

**இந்திரன் :**

தோள்பட்டைக்கு மேல் மணிக்கட்டைத் திருப்பி, உள்ளங்கை எதிரில் இருப்பவருக்குத் தெரியும்படியும், விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படியும் அமைத்துப் பிடித்தல்.

**தாழம்பூ :**

மணிக்கட்டை மார்புக்கு அருகில் பிடித்து,உள்ளங்கை மற்றொரு பக்கத்தில் இருப்பவருக்குத் தெரியும்படியாகவும், விரல் நுனிகள் எதிரில் இருப்பவரைப் பார்க்கும்படியாகவும் அசைத்துப் பிடித்தல் .

**மகரிகா பத்திரம் எழுதுதல் :**

மோதிர விரல் நுனியை ஸ்தானத்தில் வைத்துச் சுற்றி போடுவது போல் காட்டல்.

**நெருப்புச் சுவாலை :**

''விளக்குக்குப்'' பிடித்தது போலப் பிடித்துக் கொஞ்சம் அசைத்தல்.

**அம்பு விடுதல் :**

''தாழம்பூ''வுக்குப் பிடித்தது போலக் காட்டி, முன்னாலிருப்பவரைப் பார்க்கத் தள்ளுதல்.

**நாண் இழுத்தல் :**

மேற் சொன்னபடி காட்டி மார்புக்குச் சமீபமாய் இழுத்துக் கொள்ளுதல்.

**ஆண் பெண் சேருதல் :**

முழங்கை முதல் எதிரில் இருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை அவர்களுக்குத் தெரியும்படிக் காட்டுதல்.

இவைகள் மட்டுமின்றி விஷ்ணுவின் சங்கு சக்கர ஹஸ்தங் காட்டுதல், மோதிர விரலால் கண்மையிடுதல், திருநாமம், திலகம் ஆகியவை இடுதல், தேகத்திலும் நெற்றிலும் ஆகம விதிப்படி மந்திரமெழுதுதல், அங்குசங் காட்டுதல், ஜவ்வாது, புனுகு பூசுதல் ஆகியவைகளும் 'திரிபதாக' ஹஸ்த விநியோகங்கள்.

## 3.) அர்த்த பதாகம் :

திரிபதாகத்தில் சுண்டு விரலை வளைத்தல்.

(விநி) தமிழ்ப் பலகை, தீரம், 'இருவர் வருவர்' எனல், சூர்க்கத்தி, துவசம், சிகரம்.

## 4) வக்கிரார்த்த பதாகம் :

அர்த்த பதாகத்தில் சுட்டுவிரல், நடுவிரலை - வக்கிரமாய் வளைத்தல்.

(விநி) அங்குசம், நீண்ட பல், வேடதாரி, மீன் கொத்தி, இடுக்கி, தேள் கொடுக்கு.

**துளிர் :**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தைப் பார்க்க வைத்துக் கொள்ளுதல்.

**பலகை :**

 வலது கையை, இடது கை இருக்கும் இடத்துக்கு நேராகக் கொண்டு

போய், உள்ளங்கை ஆகாயத்தைப் பார்க்கும்படியாக வைத்துக் கொண்டு தன் பக்கத்துக்கு மெதுவாக கொண்டு வருதல்.

**தீரம் : அதாவது ஆறு, குளங்களின் கரை :**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை அடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியப் பிடித்து, வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் இழுத்தல்.

**''இருவர்''என்னும் குறிப்பு :**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, விரல் நுனி ஆகாயம் பார்க்கக் காட்டல்.

**கத்தி :**

மணிக்கட்டை மார்புக்குச் சமீபமாய்க் கொண்டு வந்து,விரல்நுனிகள் ஆகாயம்பார்க்கவும் உள்ளங்கை அடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியும்படியாயும் அமைத்துக் காட்டுதல்.

**துவஜஸ்தம்பம் :**

மணிக்கட்டை கொப்பூழுக்கு நேராகக் கொண்டு வந்து உள்ளங்கை அடுத்த பக்கத்தில் இருப்பவர் பார்க்கும்படியாயும் விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படியாயும் அமைத்துப் பிடித்து, முகம் வரையில் நேராகத் தூக்கிக் கொண்டு போதல்.

**கோபுரம் :**

தோள்பட்டை முதல் மேலே தூக்கியும், விரல் நுனி ஆகாயத்தைப் பார்க்கும்படியாயும் அமைத்துக் காட்டல்.

**மாடு முதலியவைகளின் கொம்பு :**

விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படியாகச் சாய்வாய் அமைத்து,மணிக்கட்டு அடிவாரத்தைத் தலையில் வைத்துக் கொள்ளுதல்.

**இரம்பம் :**

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து உள்ளங்கை அடுத்த பக்கத்தில் உள்ளவர் விரல் நுனிஎதிரில் உள்ளவர்க்கும் தெரியக் காட்டி முன் தள்ளிப் பின் இழுத்தல் (இப்படி 2 அல்லது3 முறை செய்ய வேண்டும்.)

மற்றும், வாத்தியம் முழுக்குதல்,உடுக்கடித்தல், சுழல் வண்டு சுற்றுதல் பூவை நாடி வண்டுவீழ்தல், சூறைக்காற்றைக் காட்டுதல், மழைக்கும் வாடைக் காற்றுக்கும் ஒடுங்குதல், தூமகேதுவைக் காட்டுதல், கத்தி உருவம் காட்டுதல், கத்தி சுழல்வதைக் காட்டல், மீன் கொத்தி மீன்மேல் பாய்தல், சக்கரம் , ராட்டினம், தேர்வண்டியில் சுற்றுதல, பம்பரமாடுதல், மயிர்க்கூச்செறிதல், தயிர் சிலுப்புதல், தேகவெரிப்புக்கும்,

சீக்கிரக் குறிப்பு காட்டுதல், தேங்காயை எடுத்து நீர் ஆட்டிப் பார்த்தல்.

**கர்த்தரிமுக ஹஸ்தம் :**

**1)சிலிட்ட கர்த்தரீ முகம் :**

அர்த்த பதாகத்தில் சுட்டு விரலைச் சுண்டு விரலின் பின்னதாக வைத்தல்.

(விநி) ஆண் பெண்ணைப் பிரித்திடல், விபரீதங்கள் , புரண்டிடல், கண்கடை,மரணம் , பேத பாவனை, முகிலின் மின்னல், தரையில் வீழ்தல், வளர் கொடிகள், போகசையோக விரகம், கோலமிடுதல்.

அதோமுகமாய் வைத்தால் பறவைகளின் அலகு;

உத்வேஷ்டிதத்தால், இதய விகாரம், சந்தடி ;

சிரசின் மேல் வைத்தால் சாவு, நெற்றில் வைத்தால் நிந்தனை, சோதனை,

மார்புநேராய் வைத்தால் மனது பேதித்தல், மதிபேதங்கள்,இரட்டை மஞ்சம்,

நாபியில் வைத்தால் ஆழ்ந்த நயவஞ்சக கபடம்.

கர்த்தரி முகக் கையின் கவட்டுக்குள் கட்டை விரலை வைப்பது.

(விநி) புதன் ,வன்னி மரம், வராளி.

**கண்ணக் கோல் வைத்தல் :**

கணுக்கையை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து மணிக்கட்டு முதல் வலச்சாரியாய்ப் புரட்டுதல். பின் மணிக்கட்டை இடச் சாரியாய்ப் புரட்டல்.

**கடைக்கண் :**

விரல் ஓரத்தைக் கீழிமை ஓரத்தில் கொண்டு போதல்.

**ஒருவனாய்ப் படுத்தல் :**

கணுக்கையைக் காதுக்குச் சமீபத்தில் கொண்டு போய், உள்ளங்கை காதைப் பார்க்கப் பிடித்தல்.

**ஒருவனாக விரஹப்படுதல் :**

கணுக்கையை மார்புக்கு நேராகக் கொண்டுவந்து, உள்ளங்கை அடுத்த பக்கத்தில் இருப்பவருக்குத் தெரியக் காட்டி, கணுக்கை முதல் வலச்சாரியாய்ப் புரட்டல்.

**கீழே விழுதல் :**

மரணத்துக்குப் பிடித்தது போலக் காட்டல்.

**கொடி :**

தோள்பட்டை முதல் கொஞ்சம் முன் கொண்டு வந்து, கணுக்கையை முகத்தின் பக்கமாகத் தூக்கிக் கொஞ்சம் அசைத்துக் கொண்டே இறக்குதல்.

**மின்னல் :**

மணிக்கட்டை முகத்துக்கு எதிரில் தூக்கியும், உள்ளங்கை அடுத்த பக்கத்திலிருப்பவருக்குத் தெரியும்படியும் காட்டல்.

## 5) மயூர ஹஸ்தம் :

**1) சிலிட்ட மயூரம் :**

கர்த்தரிக் கையில் மோதிர விரலோடு கட்டை விரலைக் கலப்பது.

(விநி) கொடிகள், சக்கரம், கூந்தல், சுருட்டைக்கூந்தல், குடுகுடுப்பை , இரத்னமாலை, மலர்மாலை சாற்றல், மரியாதை, பறவைக் கூட்டம், நெற்றியில் நாமமிடல், மைதீட்டல், திலகம், பயங்காட்டல், பிராணாயாமம்,பூத்த மலர் கொய்தல், மயூரத்தில் மத்திமத்தை வளைத்தால் தன்னுடன் தங்குதல்.

**மயில் , பட்சிகள் :**

முழங்கை முதல் (கீழ்க்கை) முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி,நீண்ட விரல் நனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படி அமைத்தல்.

**லதா அல்லது பூங்கொடி :**

கைகள் இருக்கும் பக்கத்தில் விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படித் தூக்கி, அசைத்துக் கொண்டே கீழே இறக்குதல்.

**நெற்றியில் பொட்டிட்டுக் கொள்ளுதல் :**

மோதிர விரல் நுனி நெற்றியில் பொருந்தியது போலக் காட்டுதல்.

**வாந்தியெடுத்தல் அல்லது கக்குதல் :**

உள்ளங்கை வாயை நோக்கி இருக்கும்படி வாய்க்குச் சமீபத்தில் மடித்து வலது சாரியாய் மணிக்கட்டு முதல் அதற்குமேற்பட்ட பாகத்தைப் புரட்டல்.

**விடுத்தல் அல்லது மயிராற்றுதல் :**

விரல் நுனிகளைத் தலையின் பக்கத்துக்கு பிடித்துக் கோத்தது போல்

**கண்ணீர் உகுத்தல் :**

மோதிர விரல் நுனியைக் கண்ணின் இமையோரத்தில் நீளத் தடவிப் பூமியை நோக்கி உறுதல்.

**சாஸ்திர வாதம் :**

கணுக்கை முதல் மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, தன்னைக் காட்டி எதிரில் இருப்பவரையும் சுட்டிக்காட்டுதல். மற்றும் நற்சகுனத்தைக்

குறிப்பிடுதல், வகிடு தள்ளுவது, நதி ஜலத்தைக் கலக்குவது, பிரசித்தமான வஸ்து.

## 6) அர்த்த சந்திர அஸ்தம் :

**1) தலரேகா சந்திரன் :**

பதாகக் கையில் கட்டை விரலை நீட்டல்.

(விநி) ஈட்டி, பாத்திரங்கள், உற்பவங்கள், இடை, தியானம், ஜமர்பாய், நமஸ்காரங்கள், சர நோட்டம் பார்த்தல்,அட்டமிச் சந்திரன், குயவன் கையால் மண் பிடித்திடல், யானை காதை அசைத்தல், வில், பெண்கள் மஞ்சள் பூசுதல், கண்ணாடியைப் பார்த்தல் , இடை பிடித்தல், மாத்திரையை தள்ளித் தாளம் போடல், பிரதி பிம்பம், அர்த்த சந்திர பாணம், கைரேகை பார்த்தல்,கயிறு திரித்தல், நூல் திரித்தல், தரையில் கை கூட்டுதல், தலை சுற்றியாடுதல், சம்பங்கோரை சுற்றுதல், கற்பூரத்தை ஒற்றிக் கையை முகத்தில் வைத்தல், சூரிய ஒளி பார்த்தல், வைத்தியன் , 'கைகாட்டு' என நீட்டுதல், பாணத்தில் கை வைத்து ஈர்த்தல் , புரோக்ஷித்தல், கண்ணாடி.

இக்கையைக் கன்னத்தின் அருகே வைத்தால் சிந்தனை; முன் கையில் வைக்கில் கடகம்; அபவேக்ஷிடிதமாக வைத்தால் புலி; கழுத்தில் வைத்தால் உப்புசம்; காதருகில் வைத்தால் ஆச்சரியம், இடையில் வைத்தால் சதங்கை; மார்பினருகில் வைத்தால் தியானம், புஜத்தில் வைத்தால் கருடன், சிறகு; முகத்தின் நேராக அசைத்து நிறுத்தினால் கதலி வாழை மரம், கலகம், மூக்கின் முன் அசையாமல் நிறுத்தினால் நிழல்.

**2) சிலிட்ட சந்திரன் :**

அர்த்த சந்திரக் கையில் சுண்டு விரலை வளைத்தல்.

(விநி ) சுங்கன் என்ற ஒரு வகை மீன்.

**3) யுக்த சந்திரன் :**

மோதிர விரலை வளைத்தல் .(விநி) ஐந்தாம் பிறை , உத்திராடம், கெள்ளை எனும் மீன் வகை.

**4) இரேகா சந்திரன் :**

யுக்த சந்திரக் கையில் மத்திமத்தை வளைத்தல். (விநி) வக்ரசனி , கக்டா ராகம்.

**5) மீனெனும் (?) இரேகா சந்திரன் :**

தற்சனியையும், அங்குட்டத்தையும் நீட்டி மற்றதை மடக்குவது.

(விநி) விநயம், ஞானம், வியாதி ,'நன்மை, நன்மை' என்பது, வாழ்த்து.

**6) தலரேகா சந்திரன் :**

இரேகா சந்திரக் கையில் சுட்டு விரலையும், கட்டை விரலையும்

வளைத்தல். (விநி) ஈசவிருக்ஷம், அகத்திப் பூ, வளையம், பின்னம்.

**கிருஷ்ண பக்ஷ சந்திரன் :**

தோள்பட்டை முதல் (மேல்கை) கொஞ்சம் நீட்டி, உள்ளங்கை அடுத்த பக்கத்தில் உள்ளவர் பார்க்கும்படிக் காட்டல்.

**கழுத்தில் கை கொடுத்துத் தள்ளுதல் :**

முழங்கை முதல் தோள்பட்டையைப் பார்க்கத் தூக்கி, விரல் நுனிகள் எதிரிலிருப்பவர்களுக்குத் தெரியக் காட்டி, முன்னால் தள்ளுதல்.

**பல்லம் என்னும் ஆயுதம் :**

தோள்பட்டை முதல் எதிரில் இருப்பவரைப் பார்க்க நீட்டுதல்.

**தேவதைகளுக்கு அபிஷேகம் செய்தல் :**

முழங்கை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி விரல் நுனி பூமியைப் பார்க்கக் காட்டுதல்.

**போஜன பாத்திரம் :**

மணிக்கட்டை வயிற்றுக்கு நேராகவும், நீண்ட விரல் நுனிகள் அடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியும்படியாயும் அமைத்துக் காட்டுதல்.

**இடுப்பு :**

பின் பக்கத்தில் கட்டை விரலும், முன்பக்கத்தில் மற்ற விரல்களும் பொருந்தும் வண்ணம் அமைத்துக் காட்டல்.

**தனக்குள் சிந்தித்தல் :**

உள்ளங்கையை மார்பு நடுவில் பொருந்தும்படி காட்டிய பிறகு, ஆகாயத்தை நோக்கித் திருப்பல்.

**தியா னம் :**

உள்ளங்கையை மார்பில் பொருத்தி வைத்தல்.

**பிராத்தித்தல் :**

விரல் நுனி எதிரிலிருப்பவரைப் பார்க்கும்படி அமைத்து, மணிக்கட்டை வயிற்றுக்கு அருகில் வைத்துக் கொள்ளுதல்.

**அவயத்தைத் தொடுதல் :**

சரீரத்தில் பல இடங்களில் உள்ளங்கையைப் பொருத்துதல்.

**பொது ஜனங்களுக்கு வணக்கம் செய்தல் :**

உள்ளங்கையை நெற்றில் பொருத்தியது போலக் காட்டல்.

மற்றும் சாணளவு அளத்தல், தலை வலி யென்று நெற்றியைப் பிடித்தல், குரல்வளையை நெறித்தல், மூக்கில் கை வைத்துச் சுரம் பார்த்தல் ,கேட்கக் கூடாத வார்த்தைக்குக் காதை மூடுதல், அஞ்சனம் பார்த்தல், வில்லுக்குப் பாணம் காட்டல், மஞ்சள் பூசுதல், இடுப்பளவு பார்த்தல், உண்ணும் தட்டு, உற்பத்தி முதலியன.

## 7. அராள அஸ்தம் :

**1) சிலிட்ட அராளம் :**

பதாகக் கையில் தர்ச்சனியை வளைத்தல்.

(விநி) அமுத பானம், பந்து, மார்க்க நிருத்தம், விட பானங்கள், தராசு நிற்றல், சக்கர வாளப் பறவை.

இக்கையைக் காதில் வைத்தால் போதனை; மார்பில் வைத்தால் பெருமை; நெற்றியில் வைத்தால் அமாவாசை; நாபியில் வைத்தால் நீர்ச்சுழி,மார்புக்கு நேராகப் புங்கிதமாக வைத்தால் க்ஷமாரன் என்ற ஓர் அரசன்.

அராள அஸ்தத்தில் மத்திமத்தை வளைத்தால் புறா முதலிய பட்க்ஷிகள், கொங்கண தேசம், தசாவந்தி.

பாம்பு விரல், மோதிர விரல், சுண்டு விரல் ஆகிய மூன்றையும் இருக்கிறபடி சேர்த்து நீட்டி, கட்டை விரல் நுனியானது ஆள் காட்டி விரலில். இரண்டாம் கணுவுக்கும் மூன்றாவது கணுவுக்கும் உட்பட்ட இடத்தில் பொருந்தும்படி ஆள்காட்டி விரலை மடக்கிப் பிடித்தல், அராள ஹஸ்தம் எனப்படும்.

**விஷம் குடித்தல் :**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை ஆகாசத்தைப் பார்க்கும்படி காட்டுதல்.

**அமிர்தம் ஜலம் இவைகளைப் பானம் செய்தல், ஆசமனம் செய்தல் :**

உள்ளங்கையை வாய்க்குச் சமீபத்தில் கொண்டு போதல்.

**பெருங்காற்று :**

வலக்கையை இடது பக்கத்துத் தோளுக்கு நேராக எதிரில் தூக்கி, உள்ளங்கையானது பூமியைப் பார்க்கும்படிப் பிடித்து, அசைத்து இறக்கிக் கொண்டே தன் பக்கத்துக்கு இழுத்தல்.

**சுகதுண்ட ஹஸ்தம் :**

அராளத்தில் அதாமி, கையை வளைத்தல்.

(விநி) பயம் அடைதல், உக்ர பாவனை, உள்ளார்த்தம், மர்மங்கள்,

மிகக் கொடிய கோபம், பிரியமான சொல்லைப் பகுத்துக் காட்டல், ஈட்டி, சாளய நாட்டியம், புங்கிதமாய் வைத்தால் பிண்டி பாலம் மிக்க ஆயுதங்கள்.

அக்கரத்தைத் தான் நோக்கப் பிடித்தால் தததுண்டநாயகன், அஸ்தம் வானத்தைப் பார்க்கப் பிடித்த, விரல்கள் மகிக்கையோடு ஒத்துப் பானுபோற் சுற்றியாடல் பாஞ்சால புருடல்.

**1) சிலிட்ட சுக துண்டம் :**

சுக துண்டத்தில் மத்திமத்தை அடியும் நுனியும் சேராதபடி வளைத்திடுதல்

(விநி) தேள், கங்கை நீரில் ஊரும் ஜந்து, மணலில் ஊரும் ஜந்து.

**2) பிரம்ம சுக துண்டம் :**

கடகாமுகக் கையில் தர்ச்சனியையும், அங்குட்டத்தையும் கூட்டுவது.

(விநி) வைரி (வல்லூறு) முதலான பறவைகள்.

**பாணப் பிரயோகம் :**

மணிக்கட்டை வயிற்றுக்குச் சமீபத்தில் கொண்டு வந்து விரல் நுனி எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாகப் பிடித்து, கணுக்கையை முன்னால் தள்ளுவது.

**கடப்பாரை :**

முழங்கை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, நீண்ட விரல் நுனிகளைப் பூமியைப் பார்க்கப் பிடித்துத் தோண்டுவது போல் காட்டுவது.

**மர்மம் :**

உள்ளங்கையை மார்பில் பொருந்த வைத்துக் கொள்ளுதல்.

**உக்கிரபாவம் :**

மணிக்கட்டைத் தோளுக்கு நேராகத் தூக்கி, நீண்ட விரல் நுனிகள் எதிரில் இருப்பவர்க்குத் தெரியக் காட்டி, மணிக்கட்டு முதல் அசைத்தல்.

## 9) முட்டி ஹஸ்தம் :

கட்டை விரல் தவிர, மற்ற விரல்களை இருக்கிறபடிச் சேர்த்து, உள்ளங்கைக்குள் மடக்கி, பாம்பு விரலின் மீது கட்டை விரலைப் பொருந்தக் காட்டுதல்.

**1) அர்த்தமுட்டி :**

முட்டிக் கையில் நடுவுள் அங்குட்டத்தை நுழைய வைத்தல்.

(விநி) நீர் பறவைகள்.

**2) சங்கீர்ண முட்டி :**

நான்கு விரல்களையும் உள்ளங்கையில் வளைத்து, அதன் மேல் கட்டை விரலை வளைத்தல்.

(விநி) ஸ் திரம், தலைமயிர் பிடிப்பது , சேலை கட்டுதல், ஒரு பிடியில் அடங்கும் இடுப்பு,கோபம், ஈனர்களின் வந்தனம், பிடிவாதம், சந்திப்பு அரசனின் மந்திரி, கோடரியைப் பிடித்தல், சங்கேதஸ்தானம் குறிப்பது. இக்கையை மார்பில் வைத்தால் பதருண்ட நாயகன், தனித்தனியே பொருள்களைப் பிடித்தல்.

**3) சிலிட்ட முட்டி :**

முட்டிக்கையில் அங்குட்டத்தைத் தர்ச்சனிக்குள் அமைத்தல்.

(விநி) பெண்கள், பூவரம்.

**4) சங்கீர்ண முட்டி :**

முட்டிக் கையில் மத்திமம், அணிவிரல், சுண்டு விரல் இவைகள் முன்னே நிற்பது. ( விநி) துப்பாக்கி வாய், உரல், கேணி, துளைகள்.

**ஸ்திரம் அல்லது நிலைத்தல் :**

கணுக்கையை தன் மார்புக்குநேராகக் கொண்டு வந்து, நகக் கண்கள் தன்னைப் பார்க்கப் பிடித்தல்.

**தலைக் கொப்பு அல்லது சொருக்கைப் பிடித்து இழுத்தல் :**

கணுக்கையைக் கையுள்ள பக்கத்துத் தலை மயிருக்குச் சமீபமாய் கொண்டு போய் இழுத்துக் காட்டுதல்.

**கெட்டித் தன்மை அல்லது த்ருடம் :**

கணுக்கையை தோளுக்கு நேராகப் பிடித்தல்.

**பதார்த்தங்களை வைத்துக் கொள்ளுதல் :**

கணுக்கையை மார்புக்கு நேராகப் பிடித்தல் .

**மல்யுத்தம் :**

தோள்பட்டை முதல் கொஞ்சம் பின்னாலே விலக்கித் தள்ளி, கணுக்கையைஇடுப்புக்குச் சமீபத்திற் காட்டல்.

கேடயம், வில், வாள், மழு, சூலம், தண்டம், ரம்பம், மரக்கால் ஆகிய இவை பிடித்தல் . திருச்சின்னம், எக்காளம் ஆகிய இவைபிடித்தல், விக்னேசுவரை வணங்குதல், 'தர்மத்தைப் பற்று' எனல், ஈதல்.

## 10 ) சிகர ஹஸ்தம் :

கட்டை விரலை தவிர, மற்ற விரல்களை இருக்கிறப்படி ச் சேர்த்து

உள்ளங்கைக்குள் மடக்கி, கட்டை விரலைப் போஜ போக்குக்கு மேலே நீட்டுதல்.

**1) சங்கீர்ண சிகரம் :**

முட்டிக் கையில் அங்குட்டத்தை உயர நீட்டல்.

(விநி) ஆலிங்கனங்கள், மன்மதன், இலிங்கம், நினைத்தல், இளைத்த ரூபங்கள், நாகம், பிதுர்காமம், பக்கங்கள், அபிநயவாரம்பம், நாதம் சேர்ந்த மணிகளை, ஸ்திரீகளின் இடையிற் கட்டி விரைந்திழுத்தல், கூந்தலை வகுத்துக் கோதுதல், விநாயகரை வணங்கிக் குட்டிக் கொள்ளுதல், கோபுரம், சிகரம், காம லீலைகளில் நகக்குறி காட்டுதல், முருகன் கை வேல். இக்கையை முகத்தின் நேராக வைத்தால் அற்பன்; புஜத்தின் நேராக வைத்தால் நோய்; ததுகண்ட நாயகன், கண்டத்தின் நேராய் வைத்தால் சிநேகன்; வியாவிருத்தமாகவும், பரிவிருத்தமாகவும் வைத்தால் ஓட்டம்; மார்பு நேராய்ச் சலனமாய்ப் பிடித்தால் வரிந்து ஓலை எழுதுதல், எழுத்தாணி.

**2) அர்த்த சிகரம் :**

சிகரக் கையில் அணி, சுண்டு விரல்களை நீட்டி நிற்பது.

(விநி) ஊர்க்குருவி, காட்டுப்புறா.

**3) சங்கீர்ண சிகரம் :**

முட்டிக் கையில் சிறிதளவு கட்டை விரலை எடுப்பது.

(விநி) கழுகு.

**மன்மதன் தனுசு :**

இடக்கைத் தோள்பட்டை முதல் முன்னால் இருப்பவர்களை, நோக்கி நீட்டி, முழங்கை முதல் அடுத்தபக்கத்தைப் பார்க்கத் திருப்பி, கட்டை விரல் நுனி ஆகாயத்தைப் பார்க்கப் பிடித்தல்.

**அதரம் :**

கட்டை விரல் ஓரத்தைக் கீழுதட்டின் சமீபத்தில் காட்டல்.

**பிதுரு தர்ப்பகம் :**

மணிக்கட்டை வயிற்றுக்குச் சமீபத்தில் கொண்டு வந்து நீண்டவிரல் நுனிகள் பூமியைப் பார்க்க அமைத்தல்.

**பிராணநாதன் அவயம் :**

மணிக்கட்டை மார்புக்கு எதிரில் கொண்டு வந்து விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கப் பிடித்தல்.

**பற்கள் :**

உதட்டுக்குப் பிடித்தது போல்.

**பிரவேசித்தல் :**

சுண்டு விரல் ஓரத்தைப் பூமியில் பதிய வைத்தல்.

**கேள்வி கேட்டல் :**

மணிக்கட்டைக் கழுத்துக்கு நேரில் பிடித்து, கட்டை விரல் நகம் எதிரிலுள்ளவர்களைப் பார்க்கக் காட்டல்.

**'இல்லை' யெனும் வார்த்தை :**

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கப் பிடித்து அசைத்தல்.

**நினைத்தல் :**

நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படி அமைத்துமணிக்கட்டை மார்பில் பொருத்துதல்.

**வால் :**

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, நீண்ட விரல் நுனிகள் மார்பைப் பார்க்கும்படி அமைத்துக் காட்டல்.

**இடுப்பின் முடிச்சு இழுக்கப்படும் பாவனை :**

தோள்பட்டை முதல் எதிரில் இருப்பவரைப் பார்க்கத் தாழ நீட்டி, உள்ளுக்கிழுத்தல்.

**சக்தி , தோமரம் என்னும் ஆயுத வகைகளால் குத்துதல் :**

தோள்பட்டை முதல் அந்தக் கையுள்ள பக்கத்தில் கொஞ்சம் தள்ளி, முழங்கைக்கு மேற்பட்ட பாகத்தைத் தூக்கி முன்னேயிருப்பவரை நோக்கி, மணிக்கட்டு முதல் நீட்டல்.

**பூசைமணி ஆட்டுதல் :**

முழங்கை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி கட்டை விரலின் நுனி ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படி அமைத்து, கணுக்கை முதல் அசைத்தல்.

**ஆலிங்கனம் :**

கையை முன்னாலிருப்பவரைப் பார்க்கத் தோள்பட்டை முதல் நீட்டி, மார்புக்குநேராக மணிக்கட்டைக் கொண்டு வருதல்.

இவைகளன்றி அங்குசம், அலகு, வேல், ஈட்டி, சூலம், இடுக்கி, எழுத்தாணி உலக்கை இவைகளைப் பிடித்தல், உடம்பு வலிக்குக் குத்துதல், குடுமி முடிதல், பெண்கள் பாதத்தில் செம்பஞ்சூட்டுதல் முதலியவை.

## 11) கபித்த ஹஸ்தம் :

சிகரக் கையில் கட்டை விரலைச் சுட்டு விரல் சேர்வது.

(விநி) பார்வதி , வலை வீச்சு, படம் எழுதுதல், தூப தீபம், தாளங்கள், பிரம்புகள், வெண்சாமரைப் பிடித்தல், ஆலவட்டம் பிடித்தல், ஆரத்தி ஏந்தல், எழுத்தாணி தீட்டல், இருபக்கங்களைக் காட்டக் கயிறு பிடித்தல், வில்லுண்டைகள், தராசு, தராசுபிடித்தல், ஊசித் துண்டம், நெசவு நூல் பிடித்தல், விரல் நிமிர்தல், தானிய உமி இறைத்தல், பத்துக்கோல் பிடித்தல், ஜபமாலை பிடித்து ஜபித்தல், ஓலை பிடித்து வாருதல் , வாத்திய முழக்கம், முரசம் இவற்றின் வாரைத் தொட்டிழுத்தல், மற்றும்

இக்கையை முகத்தின் நேராய் வைத்தால் ஆகர் ஷனம், புகை, பாணம்; நெற்றியில் வைத்தால் சமயம் , காலம் ;

இருகைகளாற் செய்தால் இடியைத் தரும் வருணம்.

**1) சிலிட்ட கபித்தம் :**

கபித்தக் கையில் கனிஷ்ட விரலை நீட்டல்.

(விநி) குயில் , கிளிப்பிள்ளை, மாளவ தேசம்.

**அர்த்த கபித்தம் :**

சிலிட்ட கபித்தக் கையில் மோதிர விரலை நீட்டல்.

(விதி) நாண வந்தான், கானாங்கோழி தெலுங்கு, எழுத்தாணியைக் கையில் பிடித்தல், மைனா , நலுங்கிடல், கோலம் போடல், காகம், கோழி , நாரை, கொக்கு, நீர்க்காகம்.

**சரஸ்வதி :**

மணிக்கட்டை மார்புக்கு நேராய்ப் பிடித்தல்.

**தாளம் பிடித்தல் :**

மணிக்கட்டை வயிற்றுக்குச் சமீபத்தில் பிடித்துக் கொஞ்சம் அசைத்தல், அப்போது உள்ளங்கை அடுத்த பக்கத்தில் உள்ளவர்களுக்குத் தெரிய வேண்டும்.

**இலக்குமி :**

உள்ளங்கை எதிரில் இருப்பவர்களுக்குத் தெரியும்படி அமைத்துப் பிடித்து மணிக்கட்டைத் தோள்பட்டைக்கு அருகில் பிடித்தல்.

**உடை அணிந்து கொள்ளல் :**

மணிக்கட்டால் இடுப்பைச் சுற்றிக் காட்டுதல்.

**பால் கறத்தல் :**

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, உள்ளங்கை அடுத்த பக்கத்தில் உள்ளவர்க்குத் தெரியப் பிடித்து, இரண்டு மூன்று

தடவை ஏற்றி இறக்கிப் பிடித்தல்.

**கண்ணுக்கு மை இடுதல் :**

ஆள்காட்டி விரல் நுனியைக் கண்ணோரத்தில் இழுத்துக் காட்டல்.

**பூச்செண்டு பிடித்துக் கொள்ளுதல் :**

உள்ளங்கை அடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியும்படி அமைத்து மணிக்கட்டை மார்புக்குச் சமீபத்தில் பிடித்துக் கொள்ளுதல். (மணிக் கட்டின் ஓரம் பூமியைப் பார்க்கும்படி அமைத்தல் வேண்டும்.)

**சேலைத் தலைப்பைப் பிடித்திழுத்தல் :**

முழங்கை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டியும் , உள்ளங்கை அடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியப் பிடித்தும் வைத்துக் கொண்டுஉள்ளுக்கிழுத்தல்.

**முக்காடிட்டுக் கொள்ளுதல் :**

வலது மணிக்கட்டுக்கு மேற்பட்ட பாகத்தால் இடது சாரியாய் ஒருதடவை முகத்தைச்சுற்றி உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படிஅமைத்துக் காட்டி, அந்தக் கையுள்ள பக்கத்திலேயே வைத்துக் கொள்ளுதல்.

**தூப தீப அர்ச்சனை :**

முழங்கை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தை நோக்கியிருக்கும்படி அமைத்து, வலது பக்கமாய்ச் சக்கரம் போல் சுழற்றுதல் தூபம் கொடுக்க, உள்ளங்கையை எதிரில் இருப்பவர்க்குக் காட்டி, மேல் கண்டபடியே சுற்றுதல் தீபம் கொடுக்க.

இவை மட்டுமல்லாமல் விசிறி, கவரி, ஆலவட்டம், பாசக்கயிறு, பூப்பறித்தல், இராட்டினம், பம்பரம் சுற்றுதல், கவண்கல் எறிதல், மணி கோத்தல், தூண்டில் இழுத்தல் , குச்சியால் பல் துலக்குதல், அறுத்தல், வெட்டுதல், விதை விதைத்தல் , ஆற்றிலோ குளத்திலோ குளித்தல், வெற்றிலை போட்டுக் கொள்ளுதல், தானத்தைக் கையிலேந்தியிருத்தல், அழகிய புஷ்பங்கள் தரித்தல் முதலியவைகள்.

## 12 ) கடகாமுக அஸ்தம் :

கபித்தக் கையில் தர்ச்சனி, மத்திமம், அங்குட்டம் இவற்றை நீட்டல்.

(விநி) மகிழ்ச்சியாய்ப் பேசுதல், பார்வை, நாணில் அம்பு தொடுத்து இழுத்திடல், மலர்கள் கொய்தல், செம்பொன் ஆபரணம் சாற்றுதல், பரத சாரி நாட்டியம், திருட்டாந்தரம், சுருள் கொடுத்தல், அடுப்பு, பேனா பிடித்து கடுதாசு எழுதுதல், சுவாதி, ரத்னங்கள், நாகவல்லி, முத்திராங்கிதங்கள், வாசனைத் திரவியங்கள் வைக்கும் சிமிழ்.

**1) சிலிட்ட கடகாமுகம் :**

கடகாமுகக் கையில் சிறு விரல், அணிவிரல்களை நீட்டி நடுவிரலை வளைத்தல்.

(விநி) உமையவள், பிடித்தெழுதும் ஓலை, கையிற்பிடி செண்டு, தந்தி மீட்டல், கடிவாளம் பிடித்தல்.

**2) இரத்ன கடகாமுகம்:**

கடகாமுகத்தில் தர்ச்சனியைக் கூட்டிக் காட்டல்

(விநி) அட்ட வசுக்கள்.

**பூப்பறித்தல் :**

தோள்பட்டை முதல் அந்தக் கை உள்ள பக்கத்தில் மேலே தூக்கினாற் போல சாய்வாக நீட்டி மறுபடியும் மடக்குதல்.

**முத்து மாலை, பூமாலை :**

பொருந்திய மூன்று விரல் நுனிகளையும் தோளுக்கு நேரில் பிடித்து, வயிறு வரையில் இறக்கிக் காட்டுதல்.

**பாணத்தை இழுத்தல் :**

தோள்பட்டை முதல் முன்னால் நீட்டி, சேர்ந்த விரல் அணியெதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படி பிடித்து, மணிக்கட்டு காதுக்கு வரும்படி இழுத்தல்.

**வெற்றிலை கொடுத்தல் :**

தோள்பட்டை முதல் கொஞ்சம் தாழ்வாக முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, பொருந்திய விரல்கள் ஆகாயத்தைப் பார்க்க அமைத்துப் பிடித்தல்.

**கஸ்தூரி முதலிய வாசனைப் பொருள்களைக் கலத்தல் :**

முழங்கை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, விரல் நுனிகளைத் தரையைப் பார்க்கத் திரும்பி விரல்களால் பிசைதல்.

**பேசுதல் :**

விரல் நுனிகள் அடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியும்படியும், மணிக்கட்டை மார்புக்கு அருகிலும் பிடித்துக் காட்டுதல்.

**சந்தனத்தை வாசனை பார்த்தல் :**

விரல் ஓரத்தை மூக்குக்கு அருகில் கொண்டு போதல்.

**காணுதல் :**

விரல் நுனிகளைக் கண்ணுக்கு நேராகப் பிடித்தல்.

இவைமட்டுமின்றி பாசாங்கு செய்தல், வீணை முதலிய நரம்புவாத்தியங்களைச் சுருதி கூட்டுதல், முதலியவைகள்.

**சூசிக்கை :**

கடகாமுகக் கையில் தர்ச்சனி விரலை நீட்டுதல்.

(விநி) ''ஒன்று '' என்னும் எண், ஓசை, ஆதவன், நாமாவளி பாடுதல், பல் விளக்குதல், காரிகை லீலைகள், நிலத்தில் எழுதுதல், தாடனம், சக்கரம் சுழற்றுதல், வட்டச் சடை, தனத்த விடமாலை (?), உக்கிரகம், இளைத்த உடல், முன்மூக்கு, துந்துமியடித்தல், வண்டில், ஊர், உலகம், சக்கரம், வெயிலில் பிடித்த குடை.

**இக்கையைப் பக்கத்தில் உயரமாகச் சாய்த்தால் இரவு, புங்கிதமாக நின்றால் ''நீ, நீர், நீங்கள்''என்பது ;**

அதோ முகமாக்கினால் 'நாம், நாங்கள் என்பது.

நெஞ்சில் வைத்தால் சத்திய வசனம் கூறுதல்.

வயிற்றில் வைத்து ஆட்டினால் மயிர்க் கூச்சல்.

நேர் தூக்கிச் சுழற்றினால் உருளை, செவி நேராக்கினால் குண்டலம்.

**1) அர்த்த சூசி :**

கபித்தக் கையில் சுட்டு விரலை நீட்டல்.

(விநி) புழு, முளைகள், பட்ச பாதம் பேசல்.

**2) வக்ர சூசி :**

சூசிக் கையில் தர்ச்சனி விரல் வளைந்து நிற்பது.

(விநி) காதணி, ஆணை, யானைக் கை, தைக்கும் ஊசி பிடித்தல். (காதில் அணிய என்றும் பொருள் கொள்ளலாம்.)

'ஒன்று ' எனல் :

நீண்ட விரல் நுனி ஆகாயத்தைப் பார்த்திருக்க, கணுக்கையை மார்புக்கு நேராகப் பிடித்தல்.

**பரப்பிரம்மம் :**

நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்க அமைத்து கணுக்கையை முகத்துக்கு நேராகத் தலைக்குமேல் கொஞ்சம் தூக்குதல்.

**'நூறு' என்னும் எண்ணிக்கை :**

விரல் நுனி ஆகாயத்தைப் பார்க்கும்படியாயும், உள்ளங்கை எதிரில் இருப்பவரைப் பார்க்கும்படியாயும் அமைத்து மணிக்கட்டை கன்னத்துக்கருகில் பிடித்தல்.

**பாவித்தல் அல்லது நினைத்தல் :**

எதிரில் இருக்கிறவர்களை விரல் நுனியால் காட்டல்.

**உலகம் அல்லது பிரபஞ்சம் :**

விரல் நுனி ஆகாயத்தைப் பார்க்கும்படியாய் அமைத்து மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, மணிக்கட்டினை வட்டமாய்ச் சுழற்றுதல்.

**சூரிய மண்டலத்தைக் காட்டல் :**

விரல் நுனியை ஆகாயத்தைப் பார்க்கும்படியாயும் அமைத்து, மணிக்கட்டை முகத்துக்கு நேராய்த் தலைக்கு மேல் கொஞ்சம் தூக்கி, வட்டமாய் மணிக்கட்டை மட்டும் சுற்றுதல்.

**''அப்படியே'' என்னும் குறிப்பு :**

விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படியாய் அமைத்து, மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படிப் பிடித்து, முன்னால் இருப்பவரை நோக்கி மணிக்கட்டினைச் சாய்த்துக் காட்டல்.

**பயமுறுத்தல் :**

விரல் நுனி ஆகாயத்தைப் பார்த்திருக்க மணிக்கட்டை முகத்துக்கு நேராகத் தூக்கி, மணிக்கட்டினை எதிரில் இருப்பவரைப் பார்க்க அசைத்தல்.

**'எவன்'?, 'எவள்'?, 'எது'?, 'அவன்'?, 'அவள்'?, 'அது'?, என்பவைகளின் குறிப்பு :**

முன்னாலிருப்பவர்க்கு விரல் நுனி தெரியக் காட்டி கணுக்கையை மார்புக்கு நேராகப் பிடித்து, மணிக்கட்டினை இரண்டு மூன்று தடவை அசைத்துக் கொண்டே ஓரிடம்விட்டு மற்றோர் இடத்துக்குக் கையை மாற்றுதல்.

**விசிறி :**

விரல் நுனி எதிரில் இருப்பவர்க்குத் தெரியக் காட்டி, மணிகட்டை மார்புக்கு நேராகப் பிடித்து, ஆள்காட்டி விரலை வலம் இடமாக அசைத்தல்.

**இளைத்தல்:**

விரல் நுனி ஆகாயத்தைப் பார்க்கும்படியாகவும், உள்ளங்கை முகத்தைப் பார்த்திருக்கும்படியாயும், கையை முகத்துக்கு நேராகப் பிடித்து இலேசாக இறக்குதல்.

**சரீரம் :**

நீட்டிய விரல் நுனியால் அவயங்களைக் காட்டல்.

**இருப்புக் குச்சி அல்லது சலாகை :**

மணிக்கட்டை மார்புக்கு நேராகப் பிடித்து, விரல் நுனி எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியாக அமைத்துக் காட்டல்.

**ஆச்சரியம் :**

விரல் நுனி ஆகாயத்தை நோக்கி இருக்க, மூக்கில் ஆள்காட்டி விரலைப் பதித்தல்.

**குடை :**

நீண்ட விரல் நுனி ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படி அமைத்து, மணிக்கட்டை முகத்துக்கு நேராகத் தலைக்கு மேல் கொஞ்சம் தூக்கிப் பிடித்துக் காட்டல்.

**தலைமயிர் அல்லது சடை ஆற்றல் :**

நீண்ட விரல் நுனியைப் பிடரிக்கு மேலாகக் கொண்டுபோய்ச் சிறிது சிறிதாக இறக்கி அதே கையின் பக்கத்திலேயே கொண்டு வருதல்.

**கெட்டிக்காரன் :**

நீண்ட விரல் நுனி ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படி அமைத்து, உள்ளங்கையை எதிரில் இருப்பவர்க்குத் தெரியக் காட்டி மணிக்கட்டை தோளுக்கு நேராகத் தூக்குதல்.

**வகிடு :**

தலையின் நடுவில் ஆள்காட்டி விரலைப் பொருத்தி, முன் புறத்திலிருந்து பின்புறத்திற்குக் கொண்டு போதல்.

**கோலம் :**

நீண்ட விரல் நுனியால் பூமியில் 4 மூலையாகக் கீறுதல்.

**பேரிகை முழக்குதல் :**

நீண்ட விரல் நுனியை முன்னாலிருப்பவருக்குத் தெரியக் காட்டி, கணுக்கையை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து அடிப்பது போல் , மணிக்கட்டின் முற்பட்ட பாகத்தை அசைத்தல்.

**மாலை வேளை :**

நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்க, மணிக்கட்டினை முகத்துக்கு நேராகக் கிழக்கே தூக்கி மேற்கே கொண்டு போதல்

**குயவன் சக்கரம் :**

நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கும்படி அமைத்து, மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து மணிக்கட்டின் முற்பட்ட பாகத்தை வட்டமாக ச் சுழற்றுதல்.

இவை மட்டுமின்றி பூமியில் எழுதுதல் ,கண்களுக்கு மையிடுதல், மோகினி வேடம், திரிவிக்ரமவதாரத்தைக் காட்டுதல், பகைவரைப் பயமுறுத்தல், தினக் கடன்களை முடித்தல் , ஆராய்தல் முதலியவை.

**14 ) பதுமகோசஹஸ்தம் :**

ஐவிரல்களைப் பரப்பி அவற்றின் நுனிகளை வளைத்தல்.

(விநி) தாமரை மலர், செம்பருத்திப் பூ, கொங்கை, பந்து, மணி, புஷ்பவர்ஷம், அற்பபோசனம், விதானம், புகைப்படலம், வட்ட முட்டை.

இக்கையை அதோமுகமாய் வைத்தால் வேல்நுனி தும்பிக்கை,உத்வேஷ்டிதமாக வைத்தால் மின்னல், செம்பு, வெள்ளி, தங்கப்பாத்திரம், சிம்ணி .

வியாவிருத்தமாக வைத்தால் விருத்தப் பா , சக்கர வாளம், சமுத்திரம், கப்பரை, கபாலம், நாழி, மிடா, தொன்னை, சகோரப் பறவை, தேங்காய், தாளம், பழம், பஞ்சாமி .

**1 ) சிலிட்ட பதும கோசம் :**

பதும கோசக் கையில் நுனி விரல்கள் உள் மடக்கல்.

(விநி) குட்டரோகம், ஐந்தலை நாகம், தலைகோதுதல்.

**பெரிய பழங்கள் (வில்வம், விளா, நார்த்தை), கோழி முட்டை முதலிய உருண்டை வஸ்துக்கள், பூப்பந்து, மாம்பழம், குறைவான சாப்பாடு :**

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை ) முன்னாலிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தை நோக்கியிருக்கும்படியாக அமைத்து காட்டல்.

**ஸ்திரீகளின் மார்பு ( முலை ) :**

விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்கும்படி அமைத்து, மணிக்கட்டை மார்புக்குச் சமீபத்தில் பிடித்துக் காட்டல்.

**வட்டமாயிருக்கும் வஸ்துகள் :**

உள்ளங்கை முன்னால் இருப்பவர்களுக்குத் தெரியக்காட்டி, மணிக் கட்டைமார்புக்கு நேராகப் பிடித்து வலது சாரியாய்த் திருப்புதல்.

**பாம்புகள் , கரையான்களின் புற்று :**

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கியிருக்கும்படி அமைத்துப் பிடித்து, கையைக் கொஞ்சம் மேலே தூக்குதல்.

**பூங்கொத்து :**

விரல்நுனி பூமியைப் பார்க்கும்படி அமைத்து, கையை முகத்துக்கு நேராகத் தலைக்கு மேல் கொஞ்சம் தூக்குதல்.

**பூசைமணி உருவத்தைக் காட்டல் :**

முழங்கை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, விரல் நுனிகள் தரையை நோக்கி இருக்கும்படியாய் அமைத்துப் பிடித்து, மணிக் கட்டு முதற்பட்ட பாகத்தை அசைத்தல்.

இவையன்றி கடப்பாரை, கல்லெறிதல், பெண்கள் ஸ்தனத்தில் நகக்குறி வைத்தல், பஞ்சாக்கிணிக்கும் , ஐந்து தலைக்கும், குடைக்கும் உவமை காட்டுதல், பார்வதி, சாமுண்டியின் தரிசனத்தைக் காணல், நீ ராஞ்சனமெடுத்தல், சுழல் அல்லது தொப்புள், சாப்பிடுவது, பூவின் மொக்கு புஷ்பமழை, எறும்புப் புத்து முதலியவைகட்கும் பதுமகோசக் கை பயன்படும்.

**சர்ப்ப சீருஷ ஹஸ்தம் :**

கட்டை விரல் தவிர மற்ற விரல்களை இருக்கிறப்படிச் சேர்த்து நீட்டி, நுனியில் கொஞ்சம் வளைத்துப் பிறகு, கட்டை விரலையும் அவ்விரல்களோடு சேர்த்து, அப்படியே கொஞ்சம் வளைத்தல் .

அதன் விநியோகங்கள் :

**1) சந்தனம் :**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை ஆகாயம் பார்க்கப் பிடித்தல்.

**பாம்பு:**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையானது எதிரில் இருப்போர்க்குத் தெரியப்பிடித்தல்.

**ரக்ஷித்தல் :**

பாம்புக்குப் பிடித்தது போலப் பிடித்து, பூமியைப் பார்க்க முழங்கை முதல் இரண்டுதடவை கொஞ்சம் இறக்கி ஏற்றுதல் .

**மந்தம் அல்லது மெது :**

ரக்ஷித்தலுக்குப் பிடிப்பது போலப் பிடித்தல்.

**மந்திரத் தண்ணீர் தெளித்தல் :**

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையைப் பூமியை நோக்கிப் பிடித்து, ஒன்றைத் தொட்டு உதறுவது போல அபிநயித்துக் காட்டல்.

**தேவ ரிஷிகளுக்குத் தர்ப்பித்தல் :**

முழங்கை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை பூமியைப் பார்க்கும்படி பிடித்து, கணுக்கை முதல் பூமியைப் பார்க்கச் சாய்த்தல்.

**யானை மத்தகத்தைத் தட்டிக் கொடுத்தல் :**

முழங்கை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி , உள்ளங்கை பூமியைப் பார்க்கப் பிடித்து, கணுக்கை முதல் ஒரு தடவை அசைத்தல்.

**மல்லர்கள் தோளைத் தட்டுதல் :**

அடுத்த புறத்துத் தோள்பட்டையை உள்ளங்கையால் தட்டு தல்,மற்றும் அரசர், ஆசான், ஆகியோர்கட்குமுன் வாய் பொத்தி நிற்றல், கண் பொத்தி விளையாடல், துக்க காலத்தில் கன்னத்தில் கை வைத்து நிற்றல், வெற்றி பெற்ற போது துடையைத் தட்டுதல், தீர்த்தம் வாங்கிப் பானம் செய்தல், வெயிலுக்கு முகத்தை மறைத்தல், வாழைக் குலை காட்டுதல், மிருகங்களின் காதுகளை க் காட்டுதல், ஓடத்துக்கும், தோணிக்கும் உவமை காட்டுதல், எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல், சிறாங்கைப் பொருள் கொடுத்தல், சாணம் தெளித்தல், குதிரை முகத்தைத் தட்டுதல், கட வாத்யம் செய்தல், பெண்கள் கடிதடம் காட்டுதல், கம்பீர ஒலி, முதலியவைகளைக் குறிப்பிடவும் பயன்படுகிறது.

**1) சலன சர்ப்ப சிரம் :**

(அ) பதாகக் கையில் விரல்களை வளைத்தல்.

(விநி) அத்தம், மல்லர் தோள், முனிவர், தேவர்களுக்குரியஉதக தானங்கள், தன் இருப்பிடம், புரோக்ஷனம் செய்தல், ஆதரவுகள், பானை வாத்யம், மிருக செவிகள், தோணி , கரி, பரி தட்டுதல், தாகத்துக்குத் தண்ணீர் குடித்தல், இலச்சையாய் முகம் மறைத்தல், தலைமயிர்க்குத் தைலமிடல், படமெழுதுதல், குகை, பெண்குறி, பகைவரை வென்று தோள் தட்டுதல், குழந்தை ஏந்தல், ஆட்டுக்கல் ஆட்டுதல், அம்மி அ ரைத்தல், நடை கீழே இறங்குதல்.

**2) சலன சர்ப்ப சீருஷம் :**

(அ) சர்ப்ப சீருஷக்கையில் கட்டை விரலை ஆட்டல்.

(விநி) பசையுள்ள மெழுகு, மை, களை, சோதனை.

**16) மிருக சீர்ஷஹஸ்தம் :**

சர்ப்ப சீருஷக் கையில் கட்டை விரலையும், சுண்டு விரலையும் நீட்டல்.

(விநி) திரிபுண்டரம், அலைகள், படி, கைகளால் செய்யப்படும்

மரியாதை, பாதவிந்நியாசங்கள், நாதங்கள், சுவர் இ[illegible]ப்பிடங்கள், [illegible]து பார்த்தல், முகவியர்வை வழிப்பது , தலை கோதி வகுப்பது, குறித்த வழி காட்டல், கால் கை குத்தல், திருநீறு அணிவது , குடை, விவாதம், ஒருவனை( சீலனை) அழைப்பது, மன்மதன், கிரகம், வாலிபர் கும்மி கொட்டல் , மிருகங்களின் முகம்.

இக்கையை முகத்தின் நேர் வைத்தால் 'மெல்லப் பேசு 'எனல். நெஞ்சில் வைத்தால் சிவலிங்கம், கடைக்கண் அருகே வைத்தால் சமிக்ஞை. வெட்கம், நாபியில் வைத்தால் சிறுபிள்ளை, பார்ச்சவத்தில் வைத்தால் யௌவனஸ்திரீ, வயிற்றில் வைத்தால் பத்மினி, புயத்தில் வைத்தால் சித்தினி, நெற்றியில் வைத்தால் அத்தினி.

**ஸ்திரீ:**

தோள் பட்டை முதல் கொஞ்சம் விலக்கி, முழங்கை முதல் கொஞ்சம் பக்கத்திற் சாய்த்து, உள்ளங்கை பூமியைப் பார்க்கும்படிப் பிடித்தல்.

**' கீரமம்' எனல், மரியாதை :**

கணுக்கையை வயிற்றுக்குச் சமீபத்திற் கொண்டு வந்து, உள்ளங்கை பூமியைப் பார்க்குமாறு பிடித்து, முழங்கை முதல் ஒரு தடவை பூமியைப் பார்க்க அசைத்தல்.

**கபோலம் :**

கன்னத்தைச் சேர்ந்த விரல்நுனியால் தொடுதல்.

**பயம் :**

கையை அடுத்த பக்கத்து அக்குளில் மறைத்துக் கொள்ளுதல்.

**விவாதம் :**

கணுக்கையை மார்புக்கு அருகில் கொண்டு வந்து, உள்ளங்கையானது பூமியைப் பார்க்கும்படிப் பிடித்து ஊஞ்சல் போலக் கணுக்கை முதல் ஆட்டுதல்.

**ஆவாஹனம் செய்தல் :**

தோள்பட்டை முதல் பூமியைப் பார்க்கும்படி நீட்டி, உள்ளங்கையை எதிரில் இருப்பவர் பார்க்கப் பிடித்து, அவர்களைப் பார்க்க விரல் நுனியைப் பூமிக்கு நேராகக் கொஞ்சம் சாய்த்தல்.

**பக்தியுடன் வார்த்தை கேட்டல் :**

உள்ளங்கையை வாய்க்குச் சமீபமாகவும், நீண்ட விரல் நுனிகளை மூக்குக்குச் சமீபமாகவும் வைத்துக் கொள்ளுதல்.

**விபூதி தரித்தல் :**

நீண்ட விரல் நுனிகளின் உட்புறத்தை நெற்றியின் இடப் பாகத்தில்

பொருத்தி வலப்பாகத்துக்குக் கொண்டு வருதல்.

**கோலமிடல் :**

தோள்பட்டை முதல் பூமியைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை ஆகாயம் பார்க்க வைத்துக் கொண்டு நீளமாய் இழுத்தல்.

**'எதிர் ', 'எதிர் ' எனல்:**

விவாதத்துக்குக் காட்டியது போல் காட்டுதல் .

**கால் பிடித்தல் :**

காலில் பல இடங்களில் உள்ளங்கையைப் பொருத்திக் காட்டல்.

**வீடு :**

வலது கணுக்கையை இடது அக்குளுக்கு அருகில் கொண்டு வந்து உள்ளங்கை பூமியைப் பார்க்கக் காட்டல்.

**எல்லாவற்றையும் சேர்த்துக் கொள்ளுதல் :**

தோள்பட்டை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி வளைத்துக் கொண்டு அடுத்த பக்கத்துக்குக் கொண்டு போதல்.

**குடை பிடித்தல்:**

உள்ளங்கை பூமியைப் பார்க்கத் தலைக்குமேல் நேராகப் பிடித்தல்.

**படிக்கட்டு :**

கணுக்கையை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து,உள்ளங்கையைத் தனக்குத் தெரியப் பிடித்து, புரட்டிப் புரட்டி மேலே கொண்டுபோதல்.

**காலடி வைத்தல் :**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை பூமியைப் பார்க்கப் பிடித்து, இடம் விட்டுஇடம் மாறுதல்.

**அன்பர்களைக் கூப்பிடுதல் :**

கணுக்கையை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, உள்ளங்கை தனக்குத் தெரியுமாறு பிடித்துப் புரட்டித் தன்னிடம் இழுத்தல்.

**சஞ்சரித்தல் :**

மேலே கண்டபடி நீட்டல்.

**அலங்காரம் :**

சரீரத்தில் நகை போட்டுக் கொள்ளக்கூடிய இடங்களில் உள்ளங்கையைப் பதித்துக் காட்டுதல்.

**1) சிலிட்ட மிருக சீருஷம் :**

மிருக சீருஷக் கையில் சிறு விரலை வளைத்து நீக்கி உயரமாய்ப்

பிடிப்பது.

(விநி) கோலிக் குண்டினைத் தரையில் தள்ளுதல், 'தாஷ்டக்கேன்' என்பது.

**2) முட்டி மிருக சீருஷம் :**

மிருக சீருஷக் கையில் சுண்டுவிரலை உள் வளைத்தல்.

(விநி) சங்கோசம், மிருகம்.

**3) சங்கோச மிருக சீருஷம் :**

முட்டி மிருக சீருஷத்தில் சுண்டு விரலையும், கட்டை விரலையும் விரித்து நீட்டல்.

( விநி ) கலைமான் .

## 17) சிம்மமுகஹஸ்தம் :

மோதிர விரல் , நடு விரல், கட்டை விரல் இவற்றின் நுனி கூட்டி, சுட்டு விரலும் சுண்டு விரலும் தனித்தனி பரப்பல்.

(விநி) ஓமம், மான், தாது சோதனை, சிங்காதனம், தருப்பை ;தாமரை மணி, பசு, ஆடு, பாகம் நீதியாய் பார்ப்பது, இதனை புங்கி;தமாய் வைத்தால் இடபம், மார்பு அருகில் வைத்தால் மோக்ஷம்.

**ஹோமம் செய்தல் :**

கையுள்ள பக்கத்தில் விரல் நுனியைப் பூமியில் பொருத்திய பிறகு, விரல் நுனிகள் எதிரில் இருப்பவர்க்குத் தெரியக் காட்டல். இப்படி 2 அல்லது 3 தடவை காட்ட வேண்டும்.

**முயல் :**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை அவர்களுக்குத் தெரியப் பிடித்தல்.

**யானை :**

கணுக்கையை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து உள்ளங்கை பூமியைப் பார்க்கப் பிடித்தல்.

**தர்ப்பையை அசைத்தல் :**

கணுக்கையை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து , சேர்ந்த விரல் நுனிகளைப் பூமியைப் பார்க்கப் பிடித்துக் கணுக்கை முதல் அசைத்தல்.

**பத்மாசனத்தில் இருத்தல் :**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை ஆகாயம் பார்க்கப் பிடித்தல்.

**சிம்ஹ முகம் :**

முயலுக்குப் பிடித்தது போல் பிடித்தல் .

**டம்பம்:**

தோள்பட்டை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, முழங்கை முதல் மேலே தூக்கி, உள்ளங்கை பின்னிருப்போர்க்குத் தெரியும்படிப் பிடித்தல்.

**வைத்தியன் ஔக்ஷதம் சொல்லுதல்:**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை எதிரில் இருப்போர்க்குத் தெரியுமாறு பிடித்து, இடம் விட்டு இடம் மாற்றுதல்.

**தாமரைப் பூவின் மாலை :**

சேர்ந்த விரல் நுனிகளைக் கழுத்தில் பொருத்தி வயிறு வரை இறக்குதல்.

**1)சிலிட்ட சிங்கமுகம் :**

சிங்கமுகக் கையில் சுண்டு விரலை வளைத்தல்.

(விநி) கலைக் கோட்டு மாமுனி, கங்கை, நீரருவிகள், ஒற்றைக் கொம்பன், விலங்குகள்முகம்.

**2)சங்கீர்ண சிங்கமுகம் :**

வக்கிரதந்த சிங்க முகக் கையைக் கீழ் நோக்கிப் பிடித்தல்.

(விநி ) எலி முகம், அணில் முகம், மூஞ்சூறு

**3) வக்கிரதந்த முகம் :**

சிலிட்ட சிங்க முகக் கையில் சுட்டு விரலை வளைத்து மெலிதாய் நிறுத்துதல்.

(விநி) கூழைக்கிடாய் முதலான கூழை மிருகங்கள்.

**4) தல சிங்க முகம் :**

சிங்க முகக் கையில் கட்டை விரல் நீட்டி நிற்றல்.

(விநி) கான்டாமிருகம், வனக் கிடாய்க் கொம்புகள்.

**18) காங்கூல ஹஸ்தம் :**

பதும கோசக் கையில் மோதிர விரலை வளைத்தல். இதனை "லாங்கூல ஹஸ்தம் " என்றும் கூறுவர்.

(விநி) இக்கையை அதோமுகமாய் வைத்தால் கணிசம்,மட்டமாக

வைத்தால் நாவற்கனி, கோவைக்கனி, முந்திரிக் கனி, முகத்தில் வைத்தால் சிறுதனம், தேங்காய், ஆம்பறப்பூ, சிறுபொருள், சாதகப் பட்சி, கிண்கிணி.

**கொட்டைப் பாக்கு, எலுமிச்சம் பழம், செழுங்கழுநீர்ப் புஷ்பம், சகோரப் பறவை :**

முழங்கை முதற் பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தை நோக்கி இருக்கும்படியாகப் பிடித்துக் காட்டல்.

**பூஜை செய்யும் சிறிய மணி :**

முழங்கை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையைப் பூமிக்குத் தெரியப் பிடித்து, கணுக்கை முதல் அசைத்தல்.

**சிறு பெண் ஸ்தனம் : (சிறு பெண்ணின் மார்பகம்)**

உள்ளங்கை தனக்குத் தெரியுமாறு, கணுக்கையை மார்புக்கு நேராகப் பிடித்தல்.

**உருண்டையான சிறு வஸ்துக்கள் :**

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை அவர்களுக்குத் தெரியப் பிடித்தல்.

**1) சிலிட்ட காங்கூலம் :**

காங்கூலத்தில் தர்ச்சனி விரலை வளைத்தல் .

*(விநி)* வியாதன், அன்றில்.

**2) சங்கீர்ண காங்கூலம் :**

பத்மகோசத்தில் மத்திமத்தை உள் வளைத்தல்.

*(விநி)* சிந்தாமணி, மாதவி (குறுக்கத்தி )

## 19) அலபதும ஹஸ்தம் :

ஐந்து விரல்களையும் வளைத்து நீட்டி வேறு வேறாகப் பிடித்தல்.

*(விநி)* கண்ணாடி, வட்டம், மேல்வீடு, தளங்கள், குளங்கள், கொண்டை, கம்பீரம், கருவம், கோபம், கூக்குரல் , கபித்தம் முதலான கனிகள், வண்டில் , கொண்டாட்டம் , சக்ர வாகம், சப்தம், பந்து, நிருத்தம், அழகு.

இக்கையை நாபியில் வைத்தால் விகாரம், முகம் நேராக வைத்தால் 'இத்தனைதான்' என்பது; புயத்தில் வைத்தால் தளபதி , சுபசந்தோஷம்; தலைமீது வைத்தால் கிரீடம்.

**மலர்ந்த தாமரைப்பூ, பெரிய பழங்கள், இளநீர், சுரைக்காய், பிரம்ம**

**கபாலம் முதலிய பாத்திரம் தடாகம்**

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தை நோக்கியிருக்கும்படியாய் அமைத்துப் பிடித்தல்.

**விரகம்:**

உள்ளங்கையைப் பூமியைப் பார்க்கும்படி அமைத்து அதைத் தலைக்குமேல் தூக்கித் திருப்பி, அந்தக் கை உள்ள பக்கத்துக்குக் கொண்டு வருதல்.

**வட்டவடிவமான பொருள்கள் , சூரிய காந்திப்பூ, கண்ணாடி முதலியன:**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை அவர்களுக்குத் தெரியப் பிடித்து, கணுக்கையை முதல் வலமாகத் திருப்புதல் .

**பெரிய ஸ்தனம் :**

உள்ளங்கை தன்னைப் பார்க்குமாறு அமைத்து, அதை மார்புக்கு நேராகப் பிடித்தல்.

**முகம் பார்க்கும் கண்ணாடி :**

உள்ளங்கை முகத்துக்குத் தெரியும்படி அதை முகத்துக்கு நேராகப் பிடித்தல்.

**பூர்ண சந்திரன் :**

தோள்பட்டை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, சாய்வாய் உயரே தூக்கி உள்ளங்கை அடுத்த பக்கத்திலுள்ளவர்க்குத் தெரியும்படிப் பிடித்தல்.

**அழகு :**

மணிக்கட்டை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, உள்ளங்கையை அடுத்த பக்கத்திலிருப்பவர்க்குத் தெரியப் பிடித்து, மணிக்கட்டு முதற்பட்ட பாகத்தைத் திருப்புதல்.

**மாடம் , உப்பரிகை :**

உள்ளங்கையை ஆகாயத்தை நோக்கி இருக்கும்படி அமைத்து, முகத்துக்கு மேல் தூக்குதல்.

**கிராமம் அல்லது ஊர் :**

தோள்பட்டை முதற்பட்ட பாகத்தை முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தை நோக்கியிருக்கும்படி அமைத்துக் காட்டல்.

**தலை சொருகு (தலை கொப்பு) :**

உள்ளங்கை அடுத்த பக்கத்தில் உள்ளவர்க்குத் தெரியும்படிப் பிடித்து, அதை அந்தப் பக்கத்துக் காதுக்குப் பின்புறத்தில் பிடித்தல்.

**உயரத்தைக் குறிப்பது :**

தோள்பட்டை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, முழங்கை முதற்பட்ட பாகத்தை மேலே தூக்கி, உள்ளங்கை ஆகாயத்தை நோக்கியிருக்கும்படி அமைத்துப் பிடித்தல்.

**பிரம்ம கபாலம் முதலிய பாத்திரம்:**

தாமரைப் புஷ்பத்துக்குப் பிடித்த விதத்தில் பிடித்தல்.

**பெருங்காயம் :**

கணுக்கையைத் தோளுக்கு நேராகக் கொண்டு வந்து, உள்ளங்கை எதிரில் இருப்போர்க்குத் தெரியப் பிடித்து, கொஞ்சம் அசைத்தல்.

**தடாகம்:**

மேலே தாமரை மலர்க்குப் பிடித்த விதத்தில் பிடித்தல்.

**வண்டி உருளை, சக்கரவாகப் பறவை :**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை எதிரில் உள்ளவர்கள் காணப் பிடித்து வேகமாக அசைத்தல்.

**பெருமைப்படுத்துதல் :**

கணுக்கையை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, உள்ளங்கையை அடுத்த பக்கத்தில் இருப்போர் காணும்படிப் பிடித்து , வலது பக்கமாகத் திருப்புதல்.

**பெருங் கோபம் :**

மணிக்கட்டை தோளுக்கு நேராகக் கொண்டு வந்து, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படிப் பிடித்தல்.

**1) சிலிட்ட அலபதுமம் :**

ஆலபதுமக் கையில் சுண்டு விரலின் நுனியை வளைத்தல்.

(விநி) பனைமட்டை, அதன் நுனி, சூக்குமமான கயிறு , ஓதத்தின் சூசனம் (ஒலிக்குறி)

**20 ) பாண ஹ**

**ஸ்தம் :**

முஷ்டிக் கையில் சுண்டு விரலை நீட்டல்.

(விநி) கூந்தல் திருத்தல், கலப்பை திருத்தி உழுதல், நந்தி நாட்டியம், 'யார்?' என்று கேட்டல், ஆவுடையார், வேர்வை தெறித்தல், கெண்டிச் செம்பு, நீண்ட நகங்களினால் கிள்ளியதைக் குறிப்புக் காட்டல்.

**1) சங்கீர்ன பான ஹஸ்தம் :**

கட்டை விரலையும், நடுவிரலையும் கூட்டி மோதிர விரலையும் சுட்டு விரலையும் வளைத்துச் சுண்டு விரலை நீட்டுதல்.

(விநி) காமதேனு.

## 21) பிரமர ஹஸ்தம்:

நடுவிரலையும், கட்டை விரலையும் கூட்டி, சுட்டு விரலை வளைத்து மற்ற இரண்டையும் நீட்டுதல்.

(விநி) சுற்றும் வண்டு, கூடுதல், சராசரங்கள், கோகிலம் முதலியவை, நகம் வளைத்தல், தும்பி, காட்டுப் பறவைகளைப் பிடித்து அவைகளைப் போலக் கூவுதல், மௌன யோகி, தியானம்.

**வண்டு :**

மணிக்கட்டை மார்புக்கு நேராக நீட்டி, உள்ளங்கை பூமிக்குத் தெரியும்படிப் பிடித்தல்.

**கிளி, குயில், முதலான பறவைகள் :**

அந்தந்தக் கையுள்ள பக்கத்தில் மார்புக்கு நேராகக் கணுக்கையை நீட்டிப் பாம்பு விரல், கட்டை விரல் இவைகளின் நுனி எதிரில் இருப்பவர்களுக்குத் தெரியும்படியாய்ப் பிடித்துக் காட்டல்.

**யோகத் தியானம் :**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை ஆகாயத்தைப் பார்க்கப் பிடித்தல்.

**1) சிலிட்ட பிரமரம்:**

பிரமரக் கையில் மோதிர விரலைச் சுழித்து வளைத்தல்.

(விநி) கல்லினுள் தேரை, முட்டையில் குஞ்சு, குளவிக் கூண்டு.

**2) பூர்வ பிரமரம் :**

அம்சாச்ய ஹஸ்தத்தில் சுட்டுவிரலை வளைத்தல் .

(விநி) பிரமரக் கைக்குள்ள விநியோகங்கள்.

## 22) சந்தம்ச ஹஸ்தம் :

பதும கோசக் கையில் ஐந்து விரல்களை வெவ்வேறாக அடிக்கடிக் கூட்டுவது.

(விநி) பலி கொடுப்பது, தானங் கொடுப்பது, அர்ச்சனை, ஐந்து, அடியுண்டபறவையின் பிராணன், பெரு வழக்கு, பந்தி, முத்து, உத்திராட்சம், நயவசனங்கள், வெள்ளி, குளிகை, புளகமுறுதல், மல்லிகை, நாசி, சிந்தனை.

**உதாரம் :**

முழங்கை முதல் (கீழ்க்கை) முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை பூமியைப் பார்த்திருக்கும்படிப் பிடித்தல்.

**காயம் (புண்) :**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை ஆகாயம் பார்க்கப் பிடித்தல்.

**பிண்டம், எலுமிச்சம்பழம் முதலியவற்றைப் பிசாசு முதலிய துர்தேவதைக்குக் கொடுத்தல் :**

முழங்கை முதல் மேலே தூக்கி, உள்ளங்கையைஆகாயம் பார்க்கப் பிடித்து, இரண்டு மூன்று தடவை ஏற்றி இறக்குதல்.

**புழு :**

முழங்கை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை பூமியைப் பார்க்கப் பிடித்தல்.

**'ஐந்து' என்னும் எண்ணிக்கை :**

முழங்கை முதல் முன்னால் உள்ளவர்களைப் பார்க்க நீட்டி, விரல் நுனிகளை அவர்களுக்குத் தெரியப் பிடித்தல்.

**மனத்தின் பயம்:**

உள்ளங்கை மார்புக்குத் தெரிய அதற்கு அருகில் பிடித்தல்.

**அர்சித்தல் :**

கணுக்கையை வயிற்றுக்கு நேராகக் கொண்டு வந்து வலது பக்கமாகப் பிடித்தல்.

**1) சிலிட்ட சந்தம்சம் :**

சந்தம்சத்தில் நடுவிரல், மோதிர விரலைத் தாங்கும்படி மடக்கிக் காட்டல்.

(விநி) நத்தை, நண்டு , தேள், நண்டுத் தெறுக்கால்.

## 23) தாம்பிரசூட ஹஸ்தம் :

முகுளக்கையில் சுட்டு விரலை வளைத்தல்.

(விநி) ஓலையில் எழுதுதல், ஓர் பூ, பாலர்கள்.

**காகம், கோழி ; கொக்கு முதலியன:**

முழங்கை முதல் மேலே தூக்கிச் சேர்ந்த விரல் நுனிகளை எதிரில் உள்ளவர்களுக்குத் தெரியப்பிடித்தல்.

**சிறு பிள்ளைகள் மணலில் எழுதுதல் :**

ஆள்காட்டி விரலைப் பூமியிற் பதித்துக் கோணல்மாணலாய்க் கோடு போடுவது போலக் காட்டுதல்.

**ஒட்டகம் :**

தோள்பட்டை முதல் முன்னாலுள்ளவரைப் பார்க்க நீட்டி, முழங்கை முதல் மேலே தூக்கிச் சேர்ந்த விரல் நுனிகளை அவர்களுக்குத் தெரியப் பிடித்தல். மற்றும் பெண்குறி, சிவலிங்கம், திரிதிரித்தல் சோற்றைப் பதம் பார்த்தல், பயிர்க்குழியில் விதை ஊன்றுதல்.

**1) மதாந்திர தாம்பிர சூடம் :**

முட்டிக்கையில் சுண்டுவிரலையும், கட்டை விரலையும் மோதி, பின் நீக்கிக் கூட்டுதல்.

(விநி) குதிரை, பசு, மின்னிட்டாம் பூச்சி, (வெட்டுக் கிளி) மழைத்துளி, தூள் (சொக்குப் பொடி )

## 24) முகுள ஹஸ்தம் :

ஐந்து விரல்களையும் நுனி கூட்டுவது.

(விநி) நீல மலர், உந்தி, முத்திராதி தாரணங்கள்.

**போஜனம் :**

விரல் நுனிகளை வாய்க்கு அருகில் கொண்டு போதல் .

**செவ்வல்லிப் பூ (ஆம்பல்) :**

முழங்கை முதல் (கீழ்க்கை) முன்னாலிருப்பவரை நோக்கி நீட்டி, விரல் நுனிகள்ஆகாயத்தைப் பார்த்திருக்கும்வண்ணம் அமைத்துக் காட்டல்.

**வாழைப் பூ :**

தோள்பட்டை முதற்பட்ட பாகத்தை அந்தக் கையுள்ள பக்கத்தில் சிறிது தள்ளிப் பிடித்து,கீழ்க்கையை சிறிது மேலே தூக்கி விரல் நுனிகள் பூமியைப் பார்த்திருக்கும்படிப் பிடித்துக் காட்டல்.

**மன்மதனின் பஞ்ச பானங்கள் :**

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கையை) முன்னே

இருப்பவரை நோக்கி நீட்டி, விரல் நுனிகள் அவர்களுக்குத் தெரியும்படிப் பிடித்து, முன்னே கையைத் தள்ளிப் பின்னுக்கு இழுத்தல்.

**முத்திரையிட்டுக் கொள்ளுதல் :**

இருதோள் பட்டையிலும் விரல்நுனியைப் பொருத்திக் காட்டல்.

மற்றும் தன் எண்ணத்தைச் சொல்லுதல், தாமரைமொட்டு, பஞ்சபூதங்களைக் காட்டல், இரப்பவர்களுக்குப் பொருள் கொடுத்தல், பன்றி, குதிரை இவைகளின் முகங்களைக் காட்டல், குஞ்சங் காட்டல் முதலியவைகள்.

**1) அர்த்த முகுளம் :**

முகுளத்தில் சுட்டு விரலையும் நடு விரலையும் முன்னாக நீட்டல்.

*(விநி)* தேசாட்சிராகம் , வாழை, மா, நொச்சி, அநுமானத்தாற் கொண்டவை.

**2) சிலிட்ட முகுளம் :**

அர்த்த முகுளத்தில் மோதிர விரல் நீண்டு சுட்டுவிரல், நடுவிரல்களைச் சார்ந்து கட்டை விரலுடன் ஒற்றுதல்.

*(விநி)* பிண்டி பாலம், கொத்தினில் பிரிதல் .

**3) கண்ட முகுளம் :**

முகுளத்தில் சுட்டு விரலை நன்றாக நீட்டுதல்.

*(விநி)* பெருச்சாளி.

**4) மத்திம முகுளம் :**

முட்டிக்கையில் மோதிர விரலும் கட்டை விரலும் பொருந்தக் கூட்டல்

*(விநி)* பூனை , வண்டி.

**5) முட்டி முகுளம் :**

நடுவிரலும் கட்டை விரலும் முட்டி நிற்பது .

*(விநி)* குரங்கு.

**6) சந்தம்ச முகுளம் :**

கட்டை விரலையும் , சுட்டு விரலையும் வளைத்துக் காட்டல்.

*(விநி)* காகம்.

**7) பிரதேச முகுளம் :**

முகுளக் கையில் சுண்டு விரலை வளைத்தல்.

(விநி) சாரசம் என்னும் பறவை

## 23) சதுர அம்ச ஹஸ்தம் : (சதுரஹஸ்தம்)

கட்டை விரலை வளைத்து மோதிர விரலின் அடியிற் கூட்டி நடுவிரலையும் மோதிர விரலையும், சுட்டு விரலையும் கூட்டி, சுண்டு விரலை முன்னால் நீட்டுதல்.

(விநி) காரீயம், இரும்பு, பித்தளை , முகம், அச்சம், கொஞ்சம் பொருள்கள்.

**வியசனம் (துக்கம் ) :**

நடு மார்பில் உள்ளங்கையைப் பொருத்திக் கொள்ளுதல்.

**கஸ்தூரி போன்ற வாசனைப் பொருட்கள்,**
**நிற அல்லது வர்ண பேதங்கள் :**

தோள்பட்டை முதல் முன்னால் இருப்பவரைப் பார்க்கக் கொஞ்சம் நீட்டி, உள்ளங்கை எதிரில் இருப்பவர்களுக்குத் தெரியுமாறு பிடித்தல்.

**சிறிதளவு என்னும் குறிப்பு :**

முழங்கை முதல் (கீழ்க்கை) முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கையை ஆகாயத்தை நோக்கியிருக்குமாறு பிடித்துக் காட்டல்.

**இரசம் போன்றவை குடித்தல் :**

ஒன்றுசேர்ந்த விரல் நுனிகள் வாயை நோக்கி இருக்குமாறும், உள்ளங்கை தனக்குத் தெரியும்படியும் அமைத்துக் காட்டி, கையை வாய்க்கு மேல் தூக்குதல்.

**செம்பு, தங்கம் முதலிய உலோகத்துண்டுகள் :**

சிறிதளவு என்னும் குறிப்புக்குப் பிடித்தது போல் பிடிக்க வேண்டும்.

**கண் :**

உள்ளங்கை தனக்குத் தெரியும்படியாகக் கண்ணுக்கு நேராகப் பிடித்து அந்தக் கையுள்ள பக்கத்தில் இழுத்தல். அப்போது சேர்ந்துள்ள விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்க வேண்டும்.

**சத்தியம் செய்தல் (பிரமாணம்) :**

முன்னாலிருப்பவரை நோக்கி வயிற்றுக்கு நேராக முழங்கை முதல் (கீழ்க்கை) நீட்டி, உள்ளங்கையைப் பூமிக்குத் தெரியும்படிப் பிடித்து, பின்னர் உள்ளங்கையைத் திருப்பி மறுபடி இழுத்துக் கொள்ளுதல்.

**மெதுவாக நடத்தல் :**

முழங்கை முதற்பட்ட பாகத்தை (கீழ்க்கை) மார்புயரத்துக்கு

முன்னால் இருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை பூமிக்குத் தெரியப் பிடித்து, ஓரிடம் விட்டு மற்றோர் இடத்துக்கு மாற்றிக் கொண்டு முன்னால் போதல்.

**நெய், எண்ணெய் முதலான பொருட்கள் :**

தோள் பட்டை முதற்பட்ட பாகத்தை அந்தக் கையுள்ள பக்கத்திலே கொஞ்சம் தள்ளிப் பிடித்து, முழங்கை முதற்பட்ட பாகத்தை மேலே தூக்கி, சேர்ந்துள்ள விரல் நுனிகள் பூமியைப் பார்க்க மணிக்கட்டு முதல் சாய்த்தல்.

**சரசம்:**

முன்னேயிருப்பவரைப் பார்க்க மார்புக்கு நேராக முழங்கை முதல் நீட்டி, உள்ளங்கை முன்னாலிருப்பவர்க்குத் தெரியும்படிப் பிடித்தல்.

**ஆசனம்:**

மணிக்கட்டை வயிற்றுக்கு நேராகக் கொண்டு வந்து, சேர்ந்த விரல் நுனிகள் அடுத்த பக்கத்தில் இருப்பவர்க்குத் தெரியுமாறு அமைத்துப் பிடித்தல்.

**1) அர்த்த சதுரக் கை :**

சதுரக் கையில் நடுவிரலின் நுனி வரையில் அங்குட்டத்தைக் கூட்டிச் சேர்த்தல்.

(விநி) இந்தோள ராகம், கொதி நீர், நெய்த்துளி, துரிதம், விரமம்.

**2) கண்டசதுரக் கை :**

சதுரக்கையில் தர்ச்சனியை நீட்டல்.

(விநி) கோரோசனம், அமுதம், வீபூதி, சிவப்பு ரத்தினம், பாதி

**3) சர்ப்ப சதுரக் கை :**

சர்ப்ப சீருஷக் கையில் அநாமிகத்தை அங்குட்டத்தில் நிறுத்துதல்.

(விநி) கற்பனை, மதுபானம், கற்பூரம், சூதம், நெய் , உணவுக்கு உரிய கறி வகைகள்.

## 26) அம்சாசிய ஹஸ்தம் :

தர்ச்சனியுடன் கட்டை விரலைக் கூட்டி, மற்ற மூன்று விரல்களையும் வேறு வேறாக நீட்டிக் காட்டல்.

(விநி) உபதேசம், கண்ணீர்த் துளிகள், கிள்ளுதல், ‘அவன்’ எனக் குறித்தல், பொன், தங்கம் உரைத்தல். முத்தாரம் போடுதல், தூபம் தூண்டுதல், அனுதினம் என்று காட்டல், முனி .

செய்தி சொல்லல், சித்திரம், காகிதம் எழுதுதல், கொத்துதல்,

திரிபரப்பல், மல்லிகை, முல்லை முதலான மலர்கள்.

மலர் கொய்தல், ஒரு மலர் எடுத்தல் , மூக்குச் சிந்துதல், முலை நுனி நெருடுதல், பூணூல் காட்டுதல்,நாமம் தீட்டுதல், பிரமன் விதிப்பது, தக்ஷினா மூர்த்தி ,

பாரதி, இலக்குமி, ஜபமாலை, கணை தொடுப்பது, நடராஜனின் மழுக்கை , அக்கையை ரேசிதமாக்கினால் நீர்த்துளி, உண்மை

முகத்தின் நேராய்க் காட்டினால் அழகிய ரூபம், புல்லாக்கு, மூக்குத் தூள் போடல்; காதில் வைத்தால் போதனை.

**தாலி கட்டுதல் :**

இருகைகளிலும் ஒன்று சேர்ந்துள்ள விரல் நுனிகளைக் கழுத்தின் முன்புறத்தில் பொருத்தி பின்புறமாகக் கொண்டு போதல்.

**உபதேசித்தல் , சாட்சி சொல்லுதல் :**

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை அவர்களுக்குத் தெரியும்படிப் பிடித்துக் காட்டல்.

**மயிர்க் கூச்செறிதல் :**

ஒன்று சேர்ந்துள்ள விரல் நுனிகளை அடுத்த பக்கத்திலுள்ள கையில் பல இடங்களில் பொருத்திக் காட்டுதல்.

**'தயார்' என்பதைக் காட்டுதல், நிச்சயப்படுத்துதல் :**

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை அவர்களுக்குத் தெரியும்படியாய்க் காட்டி, கையைக் கொஞ்சம் மேலே தூக்கி மறுபடியும் இறக்குதல்.

**காட்டு ஈ, நீர்த்துளி, மல்லிகை மொட்டு, முத்து :**

மணிக்கட்டை மார்புக்குநேராகக் கொண்டு வந்து நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படியும், உள்ளங்கை எதிரிலிருப்பவர்களுக்குத் தெரியும்படியும் அமைத்துக் காட்டி, ஓரிடம் விட்டு மற்றோர் இடத்துக்கு இரண்டு மூன்று தடவை மாற்றல் .

**விளக்கின் திரியைத் தூண்டுதல் :**

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரை நோக்கி நீட்டி, உள்ளங்கை பூமியைப் பார்த்திருக்கும்படிப் பிடித்து,நீளமாய்க் கொஞ்சம் தள்ளுதல்.

**சோதித்தல் :**

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை அவர்களுக்குத் தெரியும்படியாய் பிடித்து,முழங்கை

முதற்பட்ட பாகத்தை நீளமாய்ச் சிறிது அசைத்தல்.

**சித்திரம் வரைதல் :**

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியும், நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கியிருக்கும்படிப் பிடித்துக் காட்டி, கணுக்கை முதற்பட்ட பாகத்தை அசைத்தல்.

**தங்கம், மாத்திரை முதலியன உறைத்தல்:**

முழங்கை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை தரையை நோக்கியிருக்கும்படிப் பிடித்து, மணிக்கட்டு முதற்பட்ட பாகத்தை அசைத்தல்.

**பூமாலை அணிந்து கொள்ளல் :**

இருகைகளிலும், முழங்கை முதல் முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை எதிரில் உள்ளவர்களுக்குத் தெரியும்படியாயும், நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படியும் பிடித்துப் பிறகு சேர்ந்துள்ள விரல் நுனிகளைக் கழுத்தின் பக்கவாட்டில் வைத்துக் கீழே இறக்கிக் காண்பித்தல்.

**''நான் '' எனல் :**

சேர்ந்துள்ள விரல் நுனிகளை மார்புக்கு நடுவில் வைத்துக் கொள்ளுதல்.

**கோடு போடல் :**

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, சேர்ந்த விரல் நுனிகள் பூமியை நோக்கி இருக்கும்படிப் பிடித்து, நீளமாய் இழுத்துக் காட்டுதல்.

**'இல்லை ' யெனல் :**

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியும், நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படியும் அமைத்து, மணிக்கட்டு முதற்பட்ட பாகத்தை இடவலமாக அசைத்துக் காட்டல்.

**பாவித்தல் :**

சேர்ந்த விரல் நுனிகளை மார்புக்கு நடுவில் பொருத்துதல், மற்றும் மன்மதன் மலர் தொடுத்தல், பெண்களின் குயத்தை நெருடுதல், பூக்களை நுகர்தல், கவலையுற்றோர் துரும்பு கிள்ளல், நடராஜன் அங்கையின் அக்கினி காட்டல்.

**1) சிலிட்ட அம்சாசியம் :**

அம்சாசியத்தில் நடுவிரலைக்கூட்டுதல்.

(விநி) மலர்மொட்டு, சிறுமுலை, கொட்டைப் பாக்கு, கையில் மணி பிடித்தல்,பதம் பார்த்தல்,சொக்கட்டாங்காய், குவளைப் பூ; நீராம்பல், அல்லி, வராளி, முத்தேவர்களின் கூட்டம், செழுங்கழுநீர்ப் பூ, கொட்டைப் பாவு நூல் பிடித்தல்.

**2) அம்ஸபட்ச ஹஸ்தம் :**

சர்ப்பசீருஷ கையில் சுண்டு விரலை நீட்டல்.

(விநி) வாகனங்கள்; இக்கையை கடைக்கண் நேராக நிறுத்தினால் சமிக்ஞை, பக்தியாய் அழைப்பது, கைலாகு கொடுப்பது, மித்ர சம்பாஷனை, நாசியில் வைத்தால் வெகுதுக்கம்; முகத்தின் நேர் வைத்தால் சொக்குப் பொடி, மனத்திட்பம்.

**''ஆறு'' என்னும் எண் :**

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியும், நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படியும் பிடித்துக் காட்டல்.

**சேது பந்தனம் :**

மணிக்கட்டை வயிற்றுக்கு நேராகக் கொண்டு வந்து உள்ளங்கையை ஆகாயத்தை நோக்கியிருக்கும்படிப் பிடித்து முழங்கை முதற்பட்ட பாகத்தை வலமிடமாக அசைத்தல்.

**நகக்குறி:**

பயோதரம் என்றும் மார்பில் சுண்டு விரலை ஊன்றிக் காட்டல்.

**செய்து முடித்தல் :**

முழங்கை முதற்பட்ட பாகத்தை முன்னாலிருப்பவரைப் பார்க்க நீட்டி, உள்ளங்கை அவர்களுக்குத் தெரியும்படிப் பிடித்து,முழங்கை முதற்பட்ட பாகத்தைக் கொஞ்சம் அசைத்தல்.

**28) திரிசூல ஹஸ்தம் :**

சுண்டு விரலையும், கட்டை விரலையும் வளைத்து, மற்ற மூன்று விரல்களையும்நீட்டல்.

(விநி) திரிபுர சிகரம், ஆர்த்தி .

**வில்வ - இலை, 'மூன்று ' எனல் ' திரிசூலம் :**

கீழ்க்கையை (முழங்கை முதற்பட்ட பாகம்) முன்னால் இருப்பவரை நோக்கி நீட்டியும், உள்ளங்கை எதிரில் இருப்பவர்க்குத் தெரியும்படியும், நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கியிருக்குமாறு அமைத்துக் காட்டல்.

**29) பூர்ண நாப ஹஸ்தம் :**

பதுமகோசக் கையில் விரல் நுனிகளையெல்லாம் வளைத்திடுதல்.

(விநி) திருட்டுக் குரங்கு, சிங்கம், புலி, ஆமை, நரசிங்கம், புடைத்த முலை, அரக்கன், கர்ணிகாரம் என்னும் மலர், அபஜயம், மோவாய் தாங்கல், கெட்டிக்காரத்தனம், தலை சொறிதல் .

**30) வியாக்கிர ஹஸ்தம் :**

மிருக சீருஷக்கையில் சுண்டு விரலையும், கட்டை விரலையும் சமமாக நீட்டல்.

(விநி) மிருக ராசன் (புலி), தவளை, இராக்கதர், குரங்கு.

**31 ) பிண்டி ஹஸ்தம் :**

பூர்ணநாபக் கையை மேலாகச் சுற்றிச் சுருக்குதல்.

**32) சலவக்ஷ ஹஸ்தம் :**

இது சலவட்சக்ரம் எனப்படும்.

(விநி) சிலந்திப் பூச்சி, பூசம் .

**33) தூபஹஸ்தம் :**

திரிபதாகக் கையில் தர்ச்சனியை நடுவிரலின் மேலாகச் சேர்த்திடுதல்.

(விநி) ராட்சச முகம், வீணர்.

**34) மாண்டுக ஹஸ்தம் :**

பதுமகோசக் கையைத் தலைகீழாகப் பிடித்து அசைத்துக் காட்டல்.

(விநி) பெரிய இரணங்கள், மதனன்.

**35) பிரம்ம ஹஸ்தம் :**

பதாகக் கையில் நடுவிரலின் பாதியில் கட்டை விரலைக் காட்டுதல்.

(விநி) சுத்த சூன்ய வஸ்துவின் சொருபத்தை அறிந்து சொல்ல.

**36) மானுஷ ஹஸ்தம் :**

அராளக் கையில் சுண்டு விரலை வளைத்தல்.

(விநி) மானிடர்ப் பொது, மரங்களிலுள்ள தளிர்கள், கடாரி, பிச்சுவா.

**37) கஜமுக ஹஸ்தம் :**

சிம்ம முகக் கையில் பெரு விரலை அகற்றி மெல்ல நீட்டல்.

(விநி) பாண்டிய நாடு, மனம் பார்த்தல், கண் காட்டல், முகங் காட்டல், யானை தன் ஒரு செவியை ஆட்டுதல், காட்டெருமை, ஒரு

கையின் மேல் மற்றொரு கையை வைத்தால் இந்திரன் , சேனை, ஐராவதம்.

**38) மென்னிலைக் கை :**

கட்டை விரலை வளைத்து, அடுத்த நான்கு விரல்களையும் விரித்து முன் நீட்டுதல்.

(விநி) நான்கு சாமங்கள், நான்கு ஜாதிகள், குழல் வாசித்தல், பிரமன் சிரசு

**39) கூர்மக் கை :**

நடுவிரலை நீட்ட மற்ற நான்கு விரல்களும் வளைத்துக் காட்டல்.

(விநி) ஆமை, பூதகணம், ஒண்குறி, இராக்கத கணம், குலை சோர்தல்.

**40) திரிலிங்கக் கை :**

சுட்டு விரலையும், கட்டை விரலையும் கூட்டி,மற்றவற்றை மடக்கி, மணிக்கட்டை வளைத்தல்.

(விநி) திரு விளக்கு, முக்கோணம், பணத்தைச் சண்டல், விதை ஊன்றல், ஆவுடையார், யோனி, கொக்கு, கோழி , கூழைக்கிடாய், ஊசி குத்தல், மெழுகு பதம் பார்த்தல்.

**41) சாளையக் கை :**

கட்டை விரல், நடுவிரல், சுட்டு விரல் ஆகிய மூன்றையும் நீட்டி, மற்ற இரு விரல்களையும் மடக்கி, மணிக்கட்டைத் தொங்கவிட்டு ஆட்டல்.

(விநி) பல வகையான கோமளப் பாவனைக் கூத்து, வாத்திய முடுக்கு, வண்டு வீழல் , வண்டு சுற்றல், சூறாவளிக் காற்று, குளிர்வாடை, ஈழ மின்னல் வெட்டல், ராட்டின விசை, கத்தி சுழற்றல், வண்டிச் சக்கரம் உருளல், பம்பரம், மெய்கூச்சிடுதல், தயிர் சிலுப்புதல், எரிப்பு, தேங்காய் பிடித்தல், சந்தோஷித்தல், கையில் ஏந்தும் சக்கரம்.

**42) சில்முகக் கை :**

கட்டை விரலில் சுட்டு விரலின் நகத்தைப் பலமாக ஊன்றி தர்ச்சனியின் நடுவரை மேற்பற்றி, நடுவிரலின் நகத்தை விசையாக ஊன்றி, இவ்வாறு சிறு விரல் வரை பிடிப்பது.

(விநி) நாட்டியம், லாசியம், நடம், கணை தொடுத்தல் , நாமங் கூறுதல், அன்னச் சிறகு, சங்கு, பலகணி, கோழி, நண்டு ஊர்தல், எதிரில் நீர்க்குளம் ஒன்றைக் காட்டுதல், காய்ந்த தண்ணீரின் சூடுபார்த்தல்.

**43) சங்க ஹஸ்தம் :**

சர்ப்ப சீருஷக் கையில் கட்டை விரலை நீட்டல்

(விநி) குட்டரோகி, சுரத நீர்.

**44) வலம்புரி ஹஸ்தம்:**

மதாந்திர தாம்பிர சூடக் கையில் சுண்டு விரலின் கீழ் கட்டை விரலைத் தொந்தமாக வைத்து நீட்டல்.

(விநி) நகக் குறி, மூக்குத்தி.

**45) இலதை ஹஸ்தம்:**

தர்ச்சனி, நடு, அங்குட்டம் இவற்றைச் சேர்த்து மற்ற இரண்டையும் விட்டு வளைத்தல்.

(விநி) மலர் மொட்டு, புகையிலை, மூக்குத்தி

**46) மண்டல ஹஸ்தம் :**

முகுளக் கையில் கனிட்டக் கையை நீட்டுவது.

**47) சந்திர கலா ஹஸ்தம் :**

தோள் பட்டை முதற்பட்ட பாகத்தை முன்னால் நீட்டிக் காண்பித்தல்.

(விநி) மூன்றாம் பிறைச் சந்திரன்.

**2) சம்யுத ஹஸ்தம் என்னும் இரட்டைக் கை :**

இரண்டு கைகளையும் இணைத்துக் காட்டப் பெறும் முத்திரை "சம்யுத ஹஸ்தம்" ஆகும்.இதன் வகைகள் பற்றிப் பல நூல்களிலும் பலவாறாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் 47 வகைகள் கூறப்பட்டுள்ளன.

**1) அஞ்சலி ஹஸ்தம் :**

இரண்டு கைகளையும் பதாகமாகக் கூட்டிக் கொள்ளுதல்.

(விநி) தலையின் மேல் 12 அங்குலங்கள் உயர்த்தி நிறுத்தினால் சிவபெருமான், தலை மீது நிறுத்தினால் தேவர்களுக்கும், நெற்றிக்கு நேராக வைத்தால் ஆசானுக்கும், வாயில் வைத்தால் பிதாவுக்கும், மார்புக்கெதிரே வைத்தால் அந்தணர்க்கும், இடைஉந்தியில் வைத்தால் மாதாவுக்கும், இக்கை நமஸ்காரங்களைத் தெரிவிக்கும். மற்றும் வீபூதி குழைத்தலையும் குறிக்கும்.

**2)கபோத ஹஸ்தம்:**

அஞ்சலி ஹஸ்தத்தில் கைகளின் அடி,நுனி, இரண்டு பக்கங்களுக்கும் சிறிதளவு உள்வெளியாய்க் காட்டிக் கொள்ளல்.

(விநி) குருவுடன் சத்திய சொல் பேசுதல், விநயம் பேசுதல், ஆவுடையார், வாழை மலர், தென்னை, குமிழ், திருஷ்டி கழிக்க, மங்கைத் தலையைச் சுற்றிப் போடல், கோயிலைச் சுற்றுதல், கும்ப முத்திரை, பருத்த முலை.

**பெரியவர்களிடத்தில் பேசுதல், ஒன்றை வணக்கத்துடன் ஒப்புக் கொள்ளுதல்,முதலியவற்றைக் குறிப்பிடுவதற்கு :**

ஒன்று சேர்ந்துள்ள கைகளை, மார்புக்கு நடுவில் வைத்துக் கொள்ள வேண்டும்; விரல் நுனிகள் எதிரில் இருப்பவர்களுக்குத் தெரியும்படிப் பிடிக்க வேண்டும்.

**3) கற்கடக ஹஸ்தம் :**

அஞ்சலி அஸ்தத்தில் உள்ள பத்து விரல்களையும் ஒன்றினிடையில் மற்றொன்றாக நுழைத்து கைகளை இருபுறமும் வளைத்தல்.

(விநி) கூட்டமாக வருவதற்கெல்லாம், உடல் பழுத்த வஸ்துக்களைக் காட்டல், உடல் பிடித்தல், சிறுவர் ஆடும் கிச்சந்தம்பல விளையாட்டு, சிவத் தியானம், பெருங் கொட்டாவி .

**சங்கு ஊதல் :**

கட்டை விரல் நுனி வாய்க்குச் சமீபத்தில் இருக்கும்படியும், மற்ற விரல்கள் ஆகாயத்தை நோக்கியிருக்கும்படியும் பிடித்துக் காட்டுதல்.

**நாயகன் பிரிய விரகத்தால் நாயகி துயரமடைதல் :**

கையின் உட்புறத்தைப் பூமியில் பதித்தல்.

**சோம்பல் முறித்தல் :**

விரல் நுனிகளை ஆகாயத்தை நோக்கியிருக்கும்படி அமைத்து, கையைத் தலைக்கு மேல் தூக்குதல்.

**பருமனாயிருப்பவன் :**

கையை மார்புக்கு நேராகக் கொண்டு வந்துகூறல், தன் எதிரேயிருப்பவர்க்குத் தெரியும்படியும், முழங்கைகள் அந்தந்தப் பக்கத்திலேயே சிறிது,விலகி இருக்கும்படியும் பிடித்துக் காட்டுதல்.

**கும்பல், நெருங்கிய பொருள்களைக் காட்டுதல் :**

சேர்ந்துள்ள கைகளை மார்புக்கு நேராகப் பிடித்து விரல் நுனிகள் எதிரேயிருப்பவர்க்குத் தெரியும்படிக் காட்டல்.

**மரக்கிளையை வளைத்தல் :**

சோம்பல் முறித்தலுக்குக் கூறியது போலவே கையைத் தூக்கி மறுபடியும் கீழே இறக்குதல்.

### 4) சுவஸ்திக ஹஸ்தம் :

பதாகக் கைகளைக் கணுக்கையிடத்தில் குறுக்கிட்டு வைத்து, கைகள் நுனிமேல் நோக்கி நிற்க வைத்து, உள்ளங்கையிரண்டையும் முகத்தின் நேராய் வரும்படி வைத்தல்.

(விநி) பயம், தோத்திரம், பயத்துடன் பேசல் அல்லது புகழ்தல்.

### 5) டோள ஹஸ்தம் :

இருபதாகங்களை இரண்டு அடித் துடைகளுக்கும் நேராய்,இடம் வலமாக இருபக்கங்களிலும் இரண்டு கைளும் தொங்க நீட்டுதல்.

(விநி) நடனவாரம்பம்,பருமை, தண்ணீரில் நீந்துதல், தராசுகள் ஆடுதல்,கயிற்றின் பாக நீளம், பறவைகள் சிறகடிப்பு, வாளின் நீளம், சிறுவரை இணைப்பது.

### 6) புட்பபுட ஹஸ்தம் :

இரு சர்ப்பசீருஷக் கைகளில் சுண்டு விரல்களைப் பக்கத்தில் கூட்டுதல்.

(விநி) நற்புதல்வர்கள், தீராஞ்சனம், கிழங்கு, மந்திர புஷ்பம், அர்க்கிய தானம், கண்கள் வாங்குதல்.

**கற்பூரம் முதலியவற்றால் ஆரத்தி எடுத்தல் :**

உள்ளங்கையை ஆகாயத்தை நோக்கியிருக்கும்படி அமைத்து கையினை மார்புக்கு நேராகப் பிடித்து வலச்சாரியாய் ச்சுற்றுதல்.

**குழந்தை முதலியவைகளை வாங்கிக் கொள்ளுதல் :**

உள்ளங்கை ஆகாயத்தை நோக்கியிருக்கும்படி அமைத்து கையை மார்புக்கு நேராகக் கொண்டு வந்து, விரல் நுனி எதிரிலிருப்பவர்க்குத் தெரியும்படி பிடித்துக் காட்டுதல்.

**மாலை வேளைகளில் அர்க்கியம் விடுதல், மந்திரபுஷ்பங்களால் அர்ஷித்தல் :**

மேற் சொன்னவாறே பிடித்து, கையை முகத்துக்கு நேராகத் தூக்கி, விரல் நுனி பூமியைப் பார்த்திருக்கும்படிச் சாய்த்துப் பிடித்தல்.

அரசரிடத்தில் சென்று வாய் பொத்திப் பேசுதல், கன்னி கல்யாணக் கோலம், காப்பு கையில் கட்டுதல், வதனத்தின் நீரை மேலிடுதல், பிச்சை வாங்கல், தொன்னை, புட்பாஞ்சலி, கையிலுள்ள பாத்திரம்.

**உத்சங்க ஹஸ்தம்:**

இரு மிருக சீருஷக் கைகளை இரு தோள்களுக்குநேரே பிடித்தல்.

(விநி) ஆலிங்கனம்,கடகம் தொடுதல், சிறு பாலர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்தல், குளிர், வாடை , பனிமழை இவற்றில் குளிருடன் நிற்பது, மல்லுகட்டு, மார்பை மூடுதல், ஒழுக்கமாய் நிற்பது, கும்மி கொட்டுதல், களிப்புடன் பள்ளராடல்.

**நாய்களையோ, குழந்தைகளையோ கட்டிக் கொள்ளுதல் :**

முன்னால் இருப்பவரை நோக்கி தோள்பட்டை முதற்பட்ட பாகத்தை (மேல்கையை ) நீட்டிப் பிறகு உத்சங்கஹஸ்தத்தைப் பிடிக்க வேண்டும்.

**வெட்கப்படுதல் :**

உத்சங்க ஹஸ்தத்தைப் பிடித்து,முகம் பூமியைப் பார்க்கும்படி தலையை முன் பக்கமாய்ச் சிறிது வளைத்தல்.

**தோள்பட்டையைக் காட்டல் :**

உத்சங்க ஹஸ்தத்தை அப்படியே பிடிக்கவும்.

**8) சிவலிங்க ஹஸ்தம் :**

இடக் கையால் அர்த்த சந்திரக் கையையும், அதனடியில் வலக்கையால் சிகரக்கையும் வைத்துப் பிடிப்பது.

(விநி) இந்தஹஸ்தத்தைப் பிடித்து, வலக்கையிலுள்ள நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்த்திருக்கும்படி கையை மார்புக்கு நேராகப் பிடிக்கவும்.

**9) கடகாவர்த்தன ஹஸ்தம் :**

இரண்டுகடாமுகக் கைகளை மணிக்கட்டுக்குக் குறுக்கே கூட்டுவது.

(விநி) மன்னர் பட்டாபிஷேகம், பூஜைகள், திருமணத்திடை அறுகிடுதல், ஆசீர்வாதம் செய்தல், இதனைக் காதில் வைத்தால் கணபதி வணக்கம்; கைமாறி வைத்தால் இருதலைப் பறவை, ஆச்சரியம், பூமியில் செய்யும் கிரியைகள்.

**பட்டாபிஷேகக் காலத்திலும், பூஜைக் காலத்திலும், விவாகக் காலத்திலும் அட்சதை போட்டு ஆசீர்வாதம் செய்தல் :**

இரு கைகளிலும் உள்ள கட்டை விரல், பாம்பு விரல், ஆள்காட்டி விரல் இவைகளின் நுனிகளைப் பூமியில் பதித்து, பிறகு முகத்துக்கு நேராகத் தூக்கிக் காட்டுதல்.

**10) கர்த்தரீ சுவத்திக ஹஸ்தம் :**

கர்த்தரீமுகக் கைகள் இரண்டை மணிக்கட்டின் குறுக்கே நீட்டுவது.

(விநி) மலைகள் , பலகலைக் கூடங்கள், முள்ளிலவுகள், சரக் கூடாரம், பாய்மரம் கட்டுதல், சித்திரத்தில் கைத்தொழில் , தேர்.

**பாய் மரக்கொம்பு :**

நீண்ட விரல் நுனிகள் ஆகாயத்தை நோக்கி இருக்க, மணிக்கட்டு முதற்பட்ட பாகத்தை முகத்துக்கு நேராகத் தூக்குதல்.

**மலைச் சிகரம் :**

நீட்டிய விரல் நுனிகள் ஆகாயத்தைப் பார்க்கும்படிப் பிடித்து, கணுக்கை முதற்பட்ட பாகத்தைத் தலைக்குமேல் தூக்குதல்.

## 11) சகட ஹஸ்தம் :

பிரமரக் கையில் நடுவிரல், கட்டை விரல் இரண்டையும் விட்டு நிரவிப் பரப்பி நீட்டுதல்.

(விநி) வண்டி.

**இராட்சதன் :**

சுண்டு விரல்கள் கடைவாய்க்கு அருகில் இருக்கும்படி, அந்தந்தப் பக்கத்துக் கடைவாய்க்கு அடியில் அந்தந்தக் கையைப் பிடித்தல்.

## 12) சங்க ஹஸ்தம்:

வலக்கையில் சிகரஹஸ்தம் அமைத்து, இடக்கையின் அங்குட்டத்தைச் சிகரத்தின் அங்குட்டத்தோடு சேர்த்து நடுவிரல்களைப் பின்னே நீட்டிக் காட்டுவது.

(விநி) இக்கையை உள்ளங்கை எதிரேயிருப்பவர்க்குத் தெரியும்படிப் பிடித்தால் சங்கு.

## 13) சக்கர ஹஸ்தம் :

இரு கைகளில் அர்த்த சந்திர ஹஸ்தத்தைப் பிடித்து, ஒரு கை மேலே ஒரு கையைக் குறுக்கே நீட்டி வைத்தல்.

(விநி) வலது தோள்பட்டைக்கு அருகில் பிடித்தால் சக்கராயுதங்கள்.

## 14) சம்புட ஹஸ்தம்:

சக்கரக் கைகளில் பத்து விரல் நுனிகளையும் வளைத்திடுதல்.

(விநி) இக்கைகளை இடது இடுப்புக்குச் சமீபத்தில் பிடித்தால் வஸ்துக்களை மூடுதல்; வயிற்றுக்கு நேரே பிடித்தால் சம்புடம்.

## 15) பாச ஹஸ்தம் :

இரு கைகளையும் சூசி ஹஸ்தங்களாக்கி, இரு சுட்டு விரல்களையும் வளைத்துத் திருகி ஒன்றோடொன்றாகச் சேர்த்து மாட்டல்.

(விநி) பாசம், விலங்கு, புணர்ச்சி, வாத வழக்குகள், கலகம், நாகங்களின் புணர்ச்சி, சரிபலவான்கள், பிடிவாதம், கோபம், சிக்கல்.

மணிக்கட்டு முதற்பட்ட பாகத்தை மார்புக்கு நேராகப் பிடித்தால் ஒருவருக்கொருவர் நேரிடும் சண்டை, பாசக்கயிறு ; சங்கிலி முதலியன.

## 16) கீலக ஹஸ்தம் :

மிருக சீருஷக் கைகளில் சுண்டுவிரல்கள் இரண்டையும் வளைத்து, இறுகவே , அவற்றை ஒன்றோடொன்று எதிரெதிர் காட்டுதல்.

(விநி) நிறைந்த தட்புக்களை நீண்ட உறவு, கோசலை முத்திரை, ஆண் பெண் கூட்டம், யோகிகள், மகாநன்மை முத்திரை, மணப் பெண்ணின் கையைப் பிடித்தல்.

**பந்து, சுபசோனங்கள் :**

கையை மார்புக்கு நேராகப் பிடித்தால் சுகமாய்ப் பேசுதல், ஒற்றுமை, நட்பு.

## 17) வலக்கையை இடக்கையின் புறத்தின் மேலே வைத்து, கனிட்டக்கை அங்குட்டங்களாகிய நான்கின் நுனிகளையும் நீட்டுதல்.

(விநி) ஜல சந்துகள், பன்றி , நாய் இவற்றின் பாய்ச்சல் , படைக் கூட்டம், குரங்குப் பாய்ச்சல், முயல், உடும்பு, தர்ப்பை, குழாமை, முதலை, மச்சம், வயிற்றுக்கு நேரே இக்கையைப் பிடித்தால் மீன்.

## 18) கூர்ம ஹஸ்தம் :

சக்கரக் கைகளில் சுண்டு விரல், கட்டை விரல்களாகிய நான்கினையும் நீட்டி, மற்ற விரல்களையெல்லாம் வளைத்துக் கொள்ளல்.

(விநி) இக்கையை வயிற்றுக்கு நேராகப் பிடித்தால் ஆமை.

## 19) வராக ஹஸ்தம் :

மிருக சீருஷக் கைகள் இரண்டு பிடித்து, கட்டை விரல் , சுண்டு விரல் ஆகிய நான்கை நன்றாகத் தெரியும்படி நீட்டுதல்.

(விநி) நீண்ட விரல் நுனிகள் பூமியை நோக்கி இருக்கும்படி அமைத்து, கையை வயிற்றுக்கு நேராகப் பிடித்தால் வராகம்.

## 20) கருட ஹஸ்தம்:

அர்த்தசந்திரக் கைகள் இரண்டினைக் கணுக்கையிடத்தில்குறுக்காக வைத்து, கட்டை விரல்களை ஒன்றாகச் சேர்த்து, முகத்துக்குநேரே பிடித்தல்.

(விநி) உள்ளங்கையைத் தன்னை நோக்கி இருக்கும்படி அமைத்துக்

கையை மார்புக்கு நேராகப் பிடிக்க வேண்டும்; அங்ஙனம் பிடிப்பது கருடனைக் குறிக்கும்.

**21) நாக பந்த ஹஸ்தம் :**

இரு சர்ப்ப சீருஷக் கைகளை ஸ்வஸ்திகம் போல் குறுக்கே நீட்டிப் பிடித்தல் .

(விநி) இக்கையை உள்ளங்கை பின்னால் இருப்பவர்க்குத் தெரியும்படியாக மார்புக்கு நேராகப் பிடித்தால் ''நாகபந்தம்''கையை முகத்துக்கு மேல் தூக்கினால் புதர் குகை.

**22) கட்டுவ ஹஸ்தம்:**

சதுரக் கைகள் இரண்டின் நுனிகளைக் கூட்டி, அவற்றில் தர்ச்சனிகளையும், அங்குட்டங்களையும் நீட்டல்.

(விநி) இக்கையை நீண்ட விரல் நுனிகள் பூமியை நோக்கி இருக்க, கையை வயிற்றுக்கு நேராகப் பிடித்தால் கட்டில்; விசி பலகை.

**23) பேருண்ட ஹஸ்தம் :**

கபித்தக் கைகள் இரண்டினைக் கணுக் கையில்குறுக்கே நீட்டுதல் .

(விநி) பேருண்டப் பறவை வகையின் ஆணும் பெண்ணும் கூடுதல், உள்ளங்கைகள் அடுத்த பக்கத்தில் இருப்பவர்களுக்குத் தெரியும்படியாக அவைகளை மார்புக்கு நேரே பிடித்தால் பேருண்டப் பறவை.

**24) கஜ தந்த ஹஸ்தம் :**

சர்ப்ப சீருஷக் கைகளை மாற்றி வைத்து நீட்டல்.

(விநி) இப் பகுதி விளங்கவில்லை .

**25) அவகித்த ஹஸ்தம் :**

இரு சுகதுண்டக் கைகளைஇருமணிக்கட்டுக்களைக் கூட்டித் தலைகீழாகப் பிடித்திறக்குதல்.

(விநி) கோமளக் கை.

**26) கலச ஹஸ்தம் :**

இரண்டு அர்த்த சந்திரக் கைகளை நெருக்கமாக வைத்து அடி கூட்டிக்கொள்ளுதல்.

(விநி) பூசாரி , விநோத வஸ்துக்களைக் காண்பித்தல், பாத்திரத்தில் நீரைப் பருகுதல்.

**27) திடத ஹஸ்தம் :**

இடக்கையை முகுளக்கையாக்கி வலக் கையில்கபித்தத்தைக் காட்டி, உத்வேஷ்டிதத்தால் நிகழ்த்துவது.

(விநி ) தேவதைகள் .

**28) வர்த்தமான ஹஸ்தம் :**

அம்ஸபட்சக் கை இரண்டை பராமுகச் சுவத்திகமாகச் சேர்த்துக் கூட்டி நீக்குதல்.

(விநி) மகாமேருகிரி, தானங்கள்.

**29) பட்ச வஞ்சிதம் :**

இரண்டு அர்த்த சந்திரக் கைகளை இடுப்பினில் வைத்தல்.

(விநி) விருதுகள், வெள்ளி அரைஞாண், பறவை இறகுகள்.

**30) உத்தான வஞ்சிதம் :**

இரு திரிபதாகக் கைகளைத் தோளுக்கு நேரே பிடித்தல்.

(விநி) விஷ்ணு.

**31) தாடனபதாக ஹஸ்தம் :**

இடக்கை பதாகமாகவும், வலக்கை அர்த்த சந்திரனாகவும் கொண்டு எட்டங்குலம் மேலே தூக்கி அடித்தல்.

(விநி) அநுட்டானம் , தாளம், காக பலி.

**32) அபயவரத ஹஸ்தம் :**

இரண்டு பதாகக் கைகளில் வலப் பதாகையின் நுனியை மேலே தூக்கி, இடப் பதாகையின் நுனியைக் கீழே வைத்து, இவ்வாறு கைகளை மேல்கீழாக வைத்தல்.

(விநி) தாப நிவர்த்தி, ஈசன் முதலிய தேவர்கள்.

**33) உபசார ஹஸ்தம் :**

பிறைக்கை மேல் பிறைக் கையை வைப்பது.

(விநி) ஒழுக்கம், மரியாதை, எதிரேற்பது, நின்று ஒன்றை வாங்குகை, தருக்கர்,மராடர் ஆகியோருக்குச் சொல்லும் வணக்கம்.

**34) பதுமமுகுள ஹஸ்தம் :**

விரல்களின் நுனிகளை ஒன்றாய்ப் பதித்து விரித்து நீக்குதல்.

(விநி) செல்வத்தைக் கொடுத்து எடுத்தல், ஆடும் குஞ்சங்கள், மன்னரின் மகுடங்கள், தோரணம்.

**35) பாரதி ஹஸ்தம் :**

இரு மிருக சீருஷக் கைகளை மலர்த்திச் சேர்த்தல் .

(விநி) சரசுவதி முதலோர், வீணை வாத்திய தாளங்கள், சிறுகுழந்தைகளை ஏந்திப் பால் கொடுத்தல்.

**36) மல்யுத்த ஹஸ்தம் :**

நெஞ்சுப் பக்கத்தில் இரு முட்டிக் கைகளை நேர்பிடித்தல்.

(விநி) தைரியம், பூதம், பருமை, செண்டு, மல்லர் போர், ஆயுதம், கர்ப்பத்துக்குள்ளிருக்கும் குழந்தை .

**37) திருஞான ஹஸ்தம் :**

இடக்கைப் பதாகத்தில், வலக்கை திரிபதாகத்தை, ஒடுக்கமாயில்லாமல் நேராய், உத்வேஷ்டிதமாய்ப் பற்றல்.

(விநி)பாரிசாதம், ஞானம்,மும்மூர்த்தி,சமாதி.

**38) சதாகிருத ஹஸ்தம் :**

இரு அஞ்சலிக் கைகளில் சுண்டு விரல், கட்டை விரல் இரண்டையும் சேர்த்துக் காட்டல்.

(விநி) மகர ராசி.

**39) சம்யமி ஹஸ்தம் :**

இரு அம்சாசியக் கைகளைப் பரிவர்த்தனமாக இணக்கி, பத்மாசனத்தில் இழுத்து கொண்டு முழந்தாளின் மீது வைத்தல்.

(விநி) முனிகள்.

**40) சதுரச்ச ஹஸ்தம் :**

இரண்டு கடகாமுகக் கைகளை மார்புக்கு நேராகச் சுவத்திகமாக வளைத்துப் பிடித்தல்.

(விநி) சாமரம் பிடித்தல், மணிகள் கோத்த ஆரம்பூனல், சக்கனி நடனம்.

**41) திரிபதாக சுவத்திக ஹஸ்தம் :**

இரு திரிபதாகங்களை மணிக்கட்டைச் சுவத்திகம் செய்து அமைப்பது.

(விநி) கற்பகம், மேடை , பருவத சிகரம்.

**42) பதாக சுவத்திகம் :**

இருபதாகங்களை மணிக்கட்டில் தாக்கிச் சுவத்திகம் செய்தல்.

(விநி) கடல்முதலை, பொறுமை, மரத்தில் காய்த்து அகலமாய்ப் பொருந்துதல்.

**43) மித்திரோத்சங்க ஹஸ்தம்:**

இரண்டு மிருக சீருஷக் கைகளை வயிற்றின் மேலாய்ச் சேர்த்தல்.

(விநி) புத்த மதம்,ஒரு கையை எடுத்து ஆவிருத்தமாகக் கன்னத்தில் வைத்தால் வெட்கமுண்டாதல், அச்சம்.

**44) திலக ஹஸ்தம் :**

இருதிரிபதாகங்களை எதிரெதிராகச் சேர்த்துப் பிடித்தல்.

(விநி) திலகம் தீட்டல், சந்தனம் திருத்துதல், புஷ்பாஞ்சலி.

**45) வைஷ்ணவ ஹஸ்தம் :**

இரு பதாகங்களில் கட்டை விரலையும் சேர்த்தல்.

(விநி) கூட்டத்து ஓசை.

**46) வல்லபாயுத ஹஸ்தம் :**

சிகர ஹஸ்தத்தின் மேல் மிருகசீருஷத்தைப் பிடித்தல்.

(விநி) தூண் ஏறல், ஏற்றம், ஏறல், சபதம் செய்தல்.

**47) ரதாமோத ஹஸ்தம் :**

அராளத்தில் இரு முகுளங்களும், பதாக நேரில் விஸ்தாரமாகப் பற்றுதல்.

(விநி) சௌசீதி பந்தங்கள்.

## 3. முத்திரைக் கை

முத்திரைக் கைகளில் இந்நூலில் இருபது வகைகள் கூறப்படுகின்றன. அவைகளாவன :

**1) சுரப முத்திரை :**

இரு கைகளையும் கோத்து இடக் கையில் கனிட்டை, தர்ச்சனிகளை வலக் கையின் அநாமிகை, மத்திமையில் பொருத்தி, வலக்கையின் தர்ச்சனியை இடக்கை அநாமிகை மத்திமங்களோடு பொருத்தி அதோமுகமாகப் பிடித்தல் .

**2) கவுஸ்துப முத்திரை :**

கீலகக் கையின் அநாமிகை மத்திமத்தைக் கீழ் நோக்கி இடக்கையின்

தர்ச்சனியைப் பிடித்து,வலத் தர்ச்சனியை இடக்கையின் அநாமிகை, மத்திமம், அங்குட்டம் இவற்றின் நடுவில் இடுக்குதல்.

**3) இரவி முத்திரை :**

இரண்டு உள்ளங்கைகளையும் மாறி வைத்து, இடத் தர்ச்சனியை வலக் கனிட்டையாலே பிடித்து, வலத் தர்ச்சனியை இடக் கனிட்டையால் பிடித்து, இடக்கையில் அநாமிகா, மத்யம் என்றவைகளை வலது அங்குட்டத்தில் சேர்த்து, வல அநாமிகை, மத்திமம்ஆகியவற்றை இட அங்குட்டம்உறும்படி சேர்த்துநடுத் துளையாக்கிப் பிடித்தல்.

**4) பதும முத்திரை :**

இட அநாமிகையை மத்திமத்தின் மேல் வைத்து, வல அநாமிகையையும் அதன் மத்திமத்தின் மேல் வைத்து, அதன் மீது இடக்கையின் தர்ச்சனிக் கனிட்டையும் வைத்துப் பிடித்தல்.

**5)சந்நிகித முத்திரை :**

இரு சிகரக் கைகளிலும் சுண்டு விரலைச் சுண்டு விரலோடு சேர்த்து, விரலுடன் மலர்த்தி , எட்டு விரல்களையும் கொஞ்சம் தூக்கிக் காட்டுதல்.

**6) பிரசன்ன முத்திரை :**

அங்குலிகளை உள்ளங்கையால் புங்கிதமாகப் பிடித்தல்.

**7) சந்திரோதன முத்திரை :**

இரண்டு பதாகங்களையும் மணிக்கட்டோடு மணிக்கட்டு எதிர்த்துச் சேர்த்து வலியத் தள்ளுதல் போல் புங்கிதம் செய்து பிடித்தல்.

**8) யோனி முத்திரை :**

இரண்டு சுட்டு விரல்களை இரண்டு சுண்டு விரல்கள் உடன் மாறிப் பிடித்துப் பிறகு முரண்படுத்தி, மற்ற நால்விரல்களை முன்பாகவே நீட்டி,பிறகு அங்குட்டங்களைக் கொண்டு அநாமிகையின் மேல் ரேகையில் வைத்தல்.

**9) நிர்வாண முத்திரை :**

இரு கை விரல்களையும் ஒன்றோடொன்று கோத்துச் சுருட்டி மடக்கித் திருப்பி ஒன்றாய்ச் சுற்றி இரண்டு தர்ச்சனிகளையும் சேர்த்துப் புங்கிதமாய் நீட்டல்.

**10) சகட முத்திரை :**

இடச்சங்கீர்ண முட்டியின் மேல் வலச் சங்கீர்ண முட்டியை வைத்தல்.

**11) ஆவாகன முத்திரை :**

இரு அர்த்த சந்திரக் கைகளை விரித்து உள்மடக்கிப் புங்கிதமாய்ச் சுருட்டி, அதோ முகமாகச் சூழச் செய்தல்.

**12) ஸ்தாபன முத்திரை :**

ஆவாகனக் கையைக் குப்புறக் கவிழ்த்து மேவுதலாய்க் காட்டல்.

**13) அவகுண்டன முத்திரை :**

இரு பதாகங்களை இயல்புடன் சேர்த்து, திருத்தமாக வெளியில் திருப்பி விரித்தல்.

(விநி) சிவபிரான்திருமுன் காட்டப்படும்

**14 ) கீரதித முத்திரை :**

இருகை விரல்களையும் பொருந்தக் கோத்து மடக்குதல்.

**15) சன்முகோன்முக முத்திரை :**

இரு முகுக் கைகளை ஒன்றுடனொன்று எதிர்த்துத் தாக்கி,(பின்பு) கீழ் மேல்(மாற்றித்) தாங்கிக் காட்டல்.

**16) பாதுகை முத்திரை :**

இரு அர்த்தசந்திரக் கைகளைக் கோதிக்குளித்து,(கூட்டித் தணித்து) அங்குட்டங்களைத் தூக்கிமேலாகக் காட்டல்.

**17) முலை முத்திரை :**

இரு முட்டிக் கைகளை ஒன்றுநேர்ஒன்றாக உயர்த்தித் தூக்கிக் காட்டல் .

**18) விஸ்தார முத்திரை :**

இரு அர்த்த சந்திரக் கைகளைச் சேர்த்துக் காட்டல்.

**19) இக்ஷு முத்திரை :**

முதலில், முட்டிக் கைகளை மூன்று தரம் சேர்த்து, பிறகு முட்டிமேல் திரிசூலக் கையை மணிக்கட்டில் வைத்துக் காட்டல்.

**20) கும்ப முத்திரை :**

புட்பபுடக் கையை ஊர்த்துவ முகமாய்ப் பிடித்தல்.

## 4. நிருத்தக் கை :

இந்நூலில் இந்த கர வகையில் முப்பது வகைகள் கூறப்படுகின்றன. அவைகளும் அவைகளின் விவரங்களும் :

**1) சதுர நிருத்தக் கை :**

இரு கடகாமுகக் கைகளை எட் டங்குல அளவில் மார்பின் முன் வைத்தல்.

**2) உத்விர்த்த நிருத்தக் கை :**

இரு அம்சபட்சக் கைகளை உயர்த்தித் தணித்து அதோமுகமாகக் காட்டல்.

**3) தலமுகநிர்த்தக் கை :**

உத்விருத்தக் கைகளைப் பக்கங்களில் ஒன்றிற்கொன்று எதிரிடையாகச் சாய்த்து வைத்தல்.

**4)சுவத்திக நிருத்தக் கை :**

அம்சபட்சக் கைகளை ஒன்றுமேலொன்று வைத்தல்.

**5) விப்ர கீர்ண நிருத்தக் கை :**

சுவஸ்திகக் கையை வேகமாக விட்டு விட்டு மார்பில் வைத்தல்.

**6) அராள கடகாமுகம் :**

வலக்கை கடகாமுகம், இடக்கை அராளமுமாய்அதோமுகமாகப் பிடித்தல்.

**7)ஆவிருத்தவர்க்த்ர நிருக்தக் கை :**

முழங்கைகளைப் பரப்பி பதாகாதிக் கைகளை, வியாவிருத்தமாக வைத்தல்.

**8) சூச்யாசிய நிருத்தக் கை :**

சர்ப்ப சீருஷக் கைகளில், கட்டை விரல், நடு விரல்களைக் கூட்டிச் சதுரமாக வைத்தல்.

**9) ரேசித நிருத்தக் கை :**

இரு அம்சபட்சக் கைகளை உயரமாய் எடுத்து, அவற்றைத் துரிதமாகத் திருப்பல் .

**10) அர்த்த ரேசித நிருத்தக் கை :**

ரேசிதக் கையொன்றினைக் கடகாமுகக் கையாக வைத்தல்.

**11) நிதம்ம நிருத்தக் கை :**

இருபதாகக் கைகளைக் கழுத்துப் பக்கத்திலிருந்து உயரமாக்கி, பிறகு தலைகீழாக நிதம்பத்தில் பிடித்தல்.

**12) பல்லவ நிருத்தக் கை :**

பதாகங்களை, வியாவிர்த்தகரணமாய்ச் சற்று உயர்த்தி, பரிவிருத்தமாய் இறக்கிக் கைகளைப் பிடித்தல்.

**13)கேசபந்த நிருத்தக் கை :**

இரு பதாகங்களை ஸ்தம்பாகாரமாய்ப் பக்கங்களிலே ஒரு நிலையாக உயர்த்தி இறக்குதல்.

**14) உத்தானவஞ்சிதக் கை :**

திரிபதாகக் கைகள் இரண்டையும் இரு தோள்களின் எதிரே ஒத்து நிறுத்துதல்.

**15) லதாகாரக்கை :**

பதாகங்களை டோளமாக, திரியக்காக , பிரசாரிதமாகச் சேர்த்துப் பிடித்தல்.

**16) கரி நிருத்தக் கை :**

லதாகாரக் கையைத் துதிக்கைபோல் வைத்து, ஒரு கடகாமுகத்தைக் காதோரம் திரிபதாகமாக வைத்தல்.

**17) பட்சவுஞ்சித நிருத்தக் கை :**

திரிபதாகம் இரண்டையும் கூட்டி இடுப்பில் வைத்து நுனி விரலை வளைத்தல்.

**18) பட்சப் பிரத்தியோதகம் :**

பட்சவஞ்சிதத்தில் மோதிர விரலைப் பக்கமாக, எதிரில் வைத்தல்.

**19) தண்டபட்ச நிருத்தக் கை :**

ஒரு கையை அம்சபட்சமாக மார்பின் பக்கம் வைத்து, மறு கையை லதாகாரமாகத் தோளிடத்தில் வைத்து, முழங்கையைக் கீழே இறக்கிப் பிடித்தல்.

**20) கருட பட்சம் :**

இருபதாகங்களைக் கடிதடத்தில் தலைகீழாய்ப் பிடித்தல்.

**21) ஊர்த்வ மண்டலி நிருத்தக் கை :**

இருபதாகங்களை மார்பிலிருந்து நெற்றி மட்டும் செலுத்திப் பக்கத்தில் பிடித்தல் .

**22)பார்ச்சுவ மண்டலி :**

இரு பதாகங்களையும் பக்கத்தில் பிடித்தல்.

**23) உரோமண்டலி நிருத்தக் கை :**

இரு பதாகங்களையும் கீழ் மேலாக மார்புக்கு நேரே வளைத்தல்.

**24) உரப் பார்ச்சவ மண்டில நிருத்தக் கை :**

ஒரு கையை மார்புக்குஉயர்த்தி, ஒரு கையைத் தொங்கவிட்டு மறுபடியும் வியாவிருத்தமாக, ஒரு கை அராளமாக மார்பு நேரில் வைத்து மற்றொரு கையை அபவேஷ்டிதமாக அராள அளவுக்குச் செய்தல்.

**25) முட்டிகச் சுவத்திகம் :**

ஒரு கை அராளமாகவும் , ஒரு கை பல்லவமுமாகவும் பிடித்து, பிறகு இருகடகாமுகங்களாக்குதல்.

**26) நளின பத்ம கோசம் :**

சுவத்திகத்தை வியாவிருத்தமாய் பராமுகமாகப் பிடித்தல்.

**27) அலபத்ம நிருத்தக் கை :**

அலபத்மக் கைகளை மார்பிலிருந்து கழுத்துக்கு உயர்த்துதல்.

**28) உல்பண நிருத்தக் கை :**

அலபத்மக் கைகளைக் கழுத்தெதிர் பிடித்தல்.

**29) வலித நிருத்தக் கை :**

லதாகாரக் கையைச் சுவத்திகமாகப் பிடித்தல்.

**30) லலித நிருத்தக் கை :**

பல்லவ கையைத் தலையின் மீது சுவத்திகமாய் வைத்தல்.

# கரகேத்திரம்

இனி ''கரகேத்திரம்'' என்பதைக் கவனிப்போம். ''கரகேத்திரம்'' என்பதன் பொருள் 'அபிநயத்தில் கைகள் வைக்குமிடம்' என்பதாகும். இது பதின்மூன்று வகைப்படும்.

அவைகளாவன :

1) வலம்,

2) இடம்,

3) முன்,

4) பின்,

5) கீழ்,

6) மேல்,

7) தலை,

8) நெற்றி,

9) கன்னம்,

10) புஜம்,

11) மார்பு,

12) வயிறு,

13) பக்கம்.

இவைகளன்றி வேறிடங்களில் அபிநயத்தல் தகாது.

# 11. சிரோபாணிகர்மம்

சிரம் - தலை

கரம் - கை

''சிரோபாணிகர்மம் '' என்பது சிரசும் கரமும் கூடிய பாவம் ஆகும்.

இதன் வகைகள் பத்தொன்பது . அவைகளாவன.:

**1) உத்தானனம் :**

சிம்பி முளை விடுகிறது.

**2) சிலேஷம் :**

ஆலிங்கனம் செய்வது.

**3) விசிலேஷம் :**

ஆலிங்கனம் விடுகிறது.

**4) ரக்ஷணம்:**

அபயாஸ்தம்.

**5) க்ஷேபம் :**

தள்ளுகிறது.

**6) மோக்ஷணம் :**

பிடித்ததைப் பிடித்தல் .

**7) நிக்கிரகம் :**

பிடித்ததை விடுதல்.

**8) உத்க்கிருஷ்டம் :**

கீறுதல்

**9) ஆக்குஷ்டம் :**

அறுத்தல்.

**10) விக்ருஷ்டம் :**

கத்தரித்தல்.

**11) துரோடனம் :**

இழுத்தல்.

**12) சேதனம் :**

வெட்டுதல்.

**13) தாடனம் :**

அடித்தல்.

**14) பேதனம் :**

பிளத்தல்.

**15) கபோடனம் :**

தெறித்தல்.

**16) மோடனம் :**

மத்திமவிரல் வளைத்து முன் நீட்டல்.

**17) ஆவாகனம் :**

அழைத்தல்.

**18) விசர்ச்சனம் :**

விடுத்தல்.

**19) தர்ச்சனம் :**

அதட்டுதல்.

## 12. கரப்ரசாரம்

''கரப்ரசாரம்'' என்பது கைகளுக்குரிய பிராணன்கள் எனப்படும், அதாவது கைகளுக்குரிய நகர்ச்சிகள். இந்த கைகளுக்குரிய பிராணன்கள் பனிரெண்டு வகைகளாக உள்ளன. அவைகளாவன :

**1) பிரஸாரணம் :**

அங்குலிகளை முன் நீட்டல்.

**2) குஞ்சிதம் :**

வளைத்தல்

**3) ரேசிதம் :**

அசைத்தல்.

**4) புங்கிதம் :**

பதாகாதி எதிராய் நீட்டல்.

**5) பிரேரிதம் :**

பிரித்த கை பிறகு நீளுதல்.

**6) அபவேஷ்டிதம் :**

கீழே சரிந்திருத்தல்.

**7) உத்வேஷ்டிதம் :**

மேலே நோக்கல் .

**8) வியாவிருத்தம் :**

வலப்பக்கம் நீளல்.

**9) பரி விருத்தம் :**

நேர் நீளல்.

**10) சங்கேத கரப்ரசாரம் :**

இந்த ''சங்கேத கரப்ரசாரம்', நிர்திஷ்ட சங்கேதம்.

'ஊகித சங்கேதம் ' என இரு வகைப்படும்.

**i. நிர்த்திஷ்ட சங்கேதம் :**

கையை 'நில் ' என்று ஒன்றைக் காட்டுவது.

ஜன்ம நாளைக் கொண்டு அபிநயிப்பது.

**ii. ஊகித சங்கேதம் :**

கையைப் பொருத்திக் காட்டுகையாலே யார்க்கும் ஊகிக்கும்படிக் காட்டுவது.

ஸ்திரசங்களான பொருள்களுக்கு ஜன்ம நாள் கொண்டாவது,பேர்

கொண்டாவது அபிநயத்தல்.

**சங்கேதத்தால் அபிநயக்கக் கூடியவை :**

**சங்கேத நிர்ணயம் :**

ஆடை , பணிகள், சர்ப்பம், பசு, பட்சி முதலாக உள்ளவற்றுக்கும் சிங்காரம், முதலிய நவரசங்களுக்கும், தித்திப்பு, புளிப்பு முதலான ஆறு ருசிகளுக்கும், அங்கம், கலிங்கம் முதலான 56 தேசங்களுக்கும், நவரத்னம், உப்பரிகை, கோட்டை, வீதி, தேர், நாகம், பரி, ஆயுதம், காலாள், பெண்மை, காது , நாசி, கண்கள், தனம், முதலான அவயங்களுக்கும் சங்கேதத்தால் அபிநயக்கலாம்.

**11) சின்ன கரப்ரசாரம் :**

1) ஆகாரம், 2) முகம், நீரிக்ஷனம், 3) நேர் நிற்பதோர் எல்லை, 4)பதாகம், 5) ஆயுதம், 6) பிரயோசனம், 7) தலங்கள், 8) சேஷ்டை முதலிய ஸ்திரம், சரம் முதலாயுள்ள வஸ்துக்களுக்கு எல்லாம் உள்ள எட்டுவித வேற்றுமைகளைப் பிரத்தியக்ஷமாகவும், பரோக்ஷமாகவும் காட்டுவது.

**12) பதார்த்த டீகம் :**

பத்துவித பேதங்களுள்ள வஸ்துக்களைத் தாம் நுட்பமாக அறிந்ததை (பேச்சில்லாமல் ) கையாற் காட்டி நிச்சயித்தல் .

**13) வக்ஷசு என்னும் மார்பு :**

நடன வகைகளுக்குத் தக்கவாறு மார்புஎடுப்பாக இருக்கும். உயர்த்தியும், தாழ்த்தியும், சமமாகவும், கிடுகிடென நடுங்கவும் நடிக்க வேண்டியிருக்கும். இவற்றை நடன காலத்தில் நேரே பார்க்கின்றவர்கள் அனுபவிக்க இயலுமேயன்றி சிலையில் கலையை வடித்தபோது காண முடியாது. ஆனாலும் அதன் அமைப்பை நூல்கள் வாயிலாக அறிந்து கொண்டு சிலையைப் பார்க்கின்றபோது அதிலும் அந்த மெய்ப்பாட்டைக் காணலாம். ஆதலால் அவற்றை நன்கு உணர்த்தல் இன்றியமையாதது. இந்த மார்புஉத்வாகிதம், சமம், பிரகம்பிதம் என மூன்று வகைப்படும்.

**1) உத்வாகிதம் :**

மார்பு தூக்கி நிற்பது.

(விநி) 'என்னைப்பார்' என்பது.

**2) சம மார்பு :**

அசையாமல் நிற்பது .

(விநி) துக்கம்.

**3) பிரகம்பித மார்பு :**

மார்பைச் சிறிது அசைத்தல்.

(விநி) பெரியோர் முன் நல்லோர் எனல், சாமகானம் பாடித் தணிந்திடும் பயனைக் காணல்

## 14) கடியென்னும் இடுப்பு :

இடுப்பு ஒருபக்கமும் வளையாது சம நிலையில் நிற்றல், முன் வளைந்துநிற்றல், வயிற்றை அடக்கிக் கொண்டு நிற்றல் என மூன்று நிலைகளை உடையது.இவை முறையேக பாலபாவிகம், அநமிதம், நமிதம் என மூன்று வகைப்படும்.

**i.) கபால நடு :**

இடுப்பு சற்று அசையாது நிற்றல்.

(விநி) யோகம், ஞான வழி.

**ii.) அநமித நடு :**

சிறிது அசைத்தல்.

(விநி) அந்தரங்கம்.

**iii.) நமித நடு :**

மிக்க அசைத்தல்.

(விநி) மிலேச்சர், தியானம், நடையைதாங்கிச்சமமாகும்.

## 15) பார்ச்சுவம் என்னும் பக்கம் :

நடனத்தில் பக்கங்களுக்கும் சிறந்த பங்குண்டு. நடன பேதங்களுக்குத்தக, இடுப்பை முன்பக்கம் வளைத்தலும், பின் பக்கம் வளைத்தலும்,பக்கங்களிலும் வளைத்தலும் வேண்டும்.

இவை முறையே ஆலோளிதப் பார்ச்சுவம், விலோளிதப் பார்ச்சுவம், குஞ்சித பார்ச்சுவம் என மூன்று வகைப்படும்.

**i)ஆலோளிதப் பார்ச்சுவம் :**

இடப் பக்கத்தில் சாய்தல்.

(விநி) தொந்தாபிநயத்தில் சயனத்துக்கு.

**ii) குஞ்சித பார்ச்சுவம் :**

முன்னும் பின்னும் சுற்றிப் பக்கம் சாய்தல் .

( விநி) நற்சபையில் வழக்கு பேசல்.

iii) **விலோளித பார்ச்சுவம் :**

வலப் பக்கம் சாய்த்தல்.

(விநி) சரம் பார்த்தல்.

## 16) முதுகு பேதம் :

இஃது ''பிருஷ்ட பேதம்'' எனவும் வழங்கப்படுகின்றது. இது சமம்,லளிதம், வலிதம் என மூன்று வகைகளை உடையது. அவற்றை ஈண்டு காண்போம்.

**1) சம பிருஷ்டம் :**

உல்லாசத்தாலே விரிந்திருத்தல்.

**2) லளித பிருஷ்டம் :**

பதியாமல் உயர்ந்தது.

( விநி) தீரம், வீரம், சுமைதாங்கி.

**3) வலித பிருஷ்டம் :**

ஏழைபோல் தணிந்து காட்டல்.

(விநி) விகற்பமில்லாதவனென்றும், யோகி, பச்றனென்றும் காட்டல்.

## 17) வயிறு பேதம் :

இந்த வயிறு பேதப் பிரகரணம் சலனோதரம், லம்போதரம், கர்வோதரம் என மூன்று வகைகளை உடையது. அவைபற்றிக் கீழே குறிப்பிடப்படுகின்றது.

**1) சலனோதரம் :**

வயிற்றை மாற்றி மாற்றி விடாது அசைத்தல்.

(விநி) ஆச்சரியம், உற்சாகம், ஏப்பம்.

**2) லம்போதரம் :**

ராஜாங்க மேன்மை.

**3) கர்வோதரம் :**

வெட்கிக் (வற்றிக்) காட்டுதல்.

## 18) தொடைபேதம்

பற்றி விளக்கங்கள் காணப்படவில்லை.

## 19) முழந்தாள் பேதம் :

இஃது மண்டலம், அர்த்த மண்டலம், சம மண்டலம்,

நிருத்தமண்டலம் என நான்கு வகைப்படும்.

**1) சமம் :**

பாதங்கள் இரண்டும் மாற்றாமல் சமமாய் நிற்றல்.

(விநி) குரு, மன்னர், பெரியோர் இவர்கள் முன்னும், தேவ சந்நிதியிலும், நாட்டியாரம்பத்திலும்.

**2) மண்டலம் :**

இரண்டு குதிகால்களை எதிர்த்து வைத்துஇடைவெளியாக நிற்றல்.

(விநி) கரி, பரி, கருடன் இவற்றின் மேல் ஏறல், கடும்புலிப் பாய்ச்சல், நடனாரம்பம்.

**3) நிருத்தநிலைப்பாதம் :**

வலக்காலூன்றி இடக் காலின் முட்டைத் திருத்தமாய் வளைத்துத் தூக்கல்

(விநி) சபாபதி, வீரபத்திரன் நிலை, துவார பாலகர் ,பாண்டியனுக்காகச் சொக்கர் கால்மாறியாடிய நிலை, கோபம் செய்தல், உதைத்தல்.

## 20)கணைக்கால் பேதம் :

கணைக்கால் பேதம் சலனம், சங்கிர மணம், சரணம், குட்டனம், லுடிதம், லோகிதம், விஷம சஞ்சாரம் என ஏழு வகைப்படும். அவற்றின் விவரங்கள் பின் வருமாறு :

**1) சலனம்:**

பாதங்களை அதனதன் இருப்பிடத்திலேயே அசைத்தல்.

(விதி) இது சிவபெருமானின் தாண்டவத்தின் ஒருபகுதியாகிய அங்ககாரத்தில் முக்கியமாகப் பயன்படுகிறது.

**2) சங்கிரமணம் :**

பாதங்களை உயர்த்தி உயர்த்தித் தூக்கி வைத்து நடப்பது.

(விநி) நாட்டியத்தின் இறுதிக் கால் அடைவுகளைக் கற்பிக்கையிதும் துரித கால நர்த்தனத்திலும் பயன்படும்.

**3) சரணம்:**

கால்களை எடுக்காமலே நகர்த்துவது.

(விநி) ஆற்றின் வேகம், ஏழுவகையான லாஸ்ய நர்த்தனம், சிங்கார நாட்டியம் இவற்றில் பயன்படும்.

**4) குட்டனம் :**

குதிகாலாலாவது , முன்னங்காலாலாவது கால் முழுவதினாலாவதும் பூமியைத் தட்டுதல்.

(விநி) காதல் பற்றிய நடனம், சாரி நாட்டியம் இவைகளில் பயன்படும்.

**5) லுடிதம் :**

கால்களை ஒன்றுக்கொன்று குறுக்காக வைத்துக் கொண்டு இது நெளிவது.

(விநி) ஆகாசசாரியில் இஃது பெரிதும் பயன்படும்.

**6) லோகிதம் :**

பாதங்களைஒன்றை ஒன்று சுற்றி வளைத்து இருபக்கங்களிலும் ஊசலாடுவதுபோல் அசைந்தாடுதல்.

(விநி) நூற்றெட்டுக் கரணங்களில் பயன்படும்.

**7) விஷமசஞ்சாரம் :**

பாதத்தின் மீது ஒரு பகுதியை மட்டும் பூமியிலே வைத்து நடப்பது.

(விநி) ஆச்சரியத்தைக்குறிக்க, முகசாரி என்னும் ஆரம்ப நாட்டியத்தில் .

## 21) குதிக்கால் பேதம்:

குதிக்கால் பேதப் புரகரணம் பத்து வகைகளைக் கொண்டது. அந்தப் பத்து வகைகளும், அவற்றின் விவரங்களும் பின்வருமாறு :

**1) அஞ்சிதம் :**

இரு குதிக்கால்களையும் ஊன்றி,இரு படங்களையும் மேலே தூக்குவது.

(விநி) நெளிவு, பொய்க்கால் (ஆட்டம்) பெருமுளைக் கொட்டல், மண் மிதித்தல், உள்ளங்கால் ஒட்டத்தட்டுதல்.

**2) சூசி :**

ஒருகாலின் கட்டை விரல் பூமியைத் தொட்டுக் கொண்டிருக்கக் குதிக்கால் உயர்ந்து மற்றொரு கால் சமநிலையில் இருப்பது.

**3) அக்கிரதலம் :**

இஃது 'அக்ரதல சஞ்சலம்' எனவும் வழங்கப்படும்.

கால் கட்டை விரலையும் மற்ற விரல்களையும் நன்றாக நீட்டித் தரையில் பதிய வைத்துக் குதிக்காலை உயர்த்தியிருப்பது.

**4) உத்கட்டிதம் :**

ஒரு கால் சமநிலையிலிருக்க மற்றொரு குதிகால் தரையைத் தட்டுவது.

**5) சமம் :**

பாதங்கள் இரண்டையும்மாற்றாமல் சமமாய் நிற்றல்.

(விநி) குரு, மன்னர், பெரியோர் இவர்கள் முன்னும், தேவ சந்நிதியிலும், நாட்டியாரம்பத்திலும்.

**6) குஞ்சிதம் :**

இருபாதங்களையும்நிலையாக ஊன்றி, இருகுதிகால்களையும் உயரத் தூக்கல்.

(விநி) கயிற்றின் மேல் நடத்தல், புலிப் பாய்ச்சல், ஆண்போல் மருவுதல், உண்ணியேற்றல் , மந்திப் பாய்ச்சல்.

**7) அர்த்த புராடிகா :**

ஒரு கால் விரல்களின் மேற்புறம் பூமியில் படிந்திருக்க மற்றொரு காலால் பூமியைத் தட்டுவது.

**8) சாரிகா :**

பாதத்தைப் பூமியை விட்டு எடுக்காமல் நகர்த்தவது. இவை தவிர உள்ள மற்ற இருவகைகளான உதஞ்சிதம், சஞ்சரம் என்பனவற்றுக்கு விளக்கம் காணப்படவில்லை.

## 21) காற்பட பேதம் :

காறபட பேதப் பிரகரணம் பதினான்கு வகைகளையுடையது.

அவற்றையும், அவற்றைப் பற்றியும் கீழேதரப்படுகின்றது.

**1) சுவத்திகம் :**

பாதங்களை ஒன்றிற்கொன்று குறுக்காக வைத்துக் கொள்வது.

**2) ஸ்புரிகா :**

முன்னங்கால் அல்லது குதிகாலால்பாதத்தை அசைத்தலும் நிலையாக நிற்றலுமாம்.

**3)நிகுட்டணம்:**

முன்னங்காலைச் சிறிது தூக்கி அதன் மேல் நின்று கொண்டிருப்பது.

**4)தலோக்ஷேபம் :**

முன்னங்கால் அல்லது குதிகாலால் நின்று கொண்டு முழங்கால்வரை காலை முன்னும் பின்னும் அசைப்பது.

**5) புருடோக்ஷேபம் :**

முன்னங்கால் அல்லது குதிகாலால் நின்று கொண்டு காலின் பின்புறத்தை மட்டும் அசைப்பது.

**6) வேஷ்டனம்:**

ஒரு பாதத்தைத் தரையில் ஊன்றிக் கொண்டு மற்றொரு காலால் அதைச் சுற்றி வளைப்பது.

**7) அட்டங்கலிதம் :**

ஒரு காலால் வழுக்கினாற்போல் நகர்வது.

**8) குத்தா :**

முன் பாதத்தால் தரையைத் தட்டுவது.

**9)பராவிருத்தம் :**

ஒரு காலை முன்னும் பின்னுமாக வைத்துக் கொண்டு உடலைத் திருப்புவது.

**10) உத்வேஷ்டனம் :**

கால்களைப் பின்புறமாக நீட்டுவது.

**11) உல்லோளிதம் :**

கால்களை ஒன்றன்பின் ஒன்றாக ஊசலாடுவது போல் இருமருங்கும் அசைப்பது.

**12) சமங்கலிதம் :**

இரு கால்களையும் வழுக்கினாற் போல ஒரே சமயத்தில் நகர்த்துவது.

**13) லதாக்ஷேபம் :**

காலை பின்புறமாக நீட்டித் தரையைத் தட்டி முன்புறமாகக் கொண்டு வருவது.

இதைத்தவிர விலோளிதம் என்று ஒரு வகையும் உண்டு .

## 22) பாத பேதம் :

பாத பேதம் பத்து வகைப்படும். அவற்றின் விவரங்கள் கீழே கூறப்பட்டுள்ளன.

**1) சம பாதம்:**

பாதங்கள் இரண்டும் மாற்றாமல் சமமாய் நிற்றல்.

(விநி) குரு, மன்னர், பெரியோர் இவர்கள் முன்னும், தேவ சந்நிதியிலும்,நாட்டியாரம்பத்திலும்.

**2) மண்டல பாதம்:**

இரண்டு குதிகால்களையும் எதிரெதிர் வைத்துஇடைவெளியாய் நிற்றல்.

(விநி) கரி, பரி, கருடன் இவற்றின் மீது ஏறல், கடும்புலிப் பாய்ச்சல், நடனாரம்பம்.

**3) குஞ்சித பாதம் :**

இருபாதங்களையும்நிலையாக ஊன்றி, இருகுதிகால்களையும் உயரத் தூக்கல்.

(விநி) கயிற்றின் மேல் நடத்தல், புலிப் பாய்ச்சல், ஆண்போல் மருவுதல், உண்ணியேற்றல்? மந்திப் பாய்ச்சல்.

**4)அஞ்சித பாதம்:**

இரு குதிகால்களையும் ஊன்றி,இரு படங்களையும் மேலே தூக்குவது.

(விநி) நெசவு, பொய்க்கால் (ஆட்டம்) பெருமுளைக் கொட்டல், மண் மிதித்தல், உள்ளங்கால் ஒட்டத்தட்டுதல்.

**5) வடிம்பு பாதம் :**

பாதங்களின் ஓரங்களிரண்டும் ஒரு பக்கம் சாய்த்து நிற்றல்.

(விநி) நெல் குற்றல், மண் மிதித்தல், சட்டியில் பதார்த்தம் கடைதல், சேறு மிதித்தல் , சம்மனங் கொட்டுதல், கால்மடித்து உட்காருதல்.

**6)தாடித பாதம் :**

ஒவ்வொரு பாதமாக எட்டெட்டங்குலம் தூக்குதல்.

(விநி) கோபம், பேரணி அடைவு , வாட்டம்.

**7) நாக பந்தம் :**

இரு கால்களையும் மாறிப் பின்னுதல்.

(விநி), மோகினி நிலை, யோகிகள், ஒட்டியாணம் கட்டுதல், பாலூட்டல், லாகிரிக் காரன் நடை, முனிவர் தவம்,ஊடல் மறுத்தல், வேணு கோபாலன் கால் வைத்தல்.

**8) சாட்கதி பாதம் :**

பாதத்தை நேராக நிறுத்தி, பின்புறத்தில்மாறி உந்த நடத்தல்.

(விநி)கன்று, பாம்பு, பூதம்,பிசாசுக்கு பயந்தவன்கால், சண்டையில்

ஆயுதத்துக்குப் பின் வாங்கினவன் கால்.

**9) கருட நிலைப் பாதம் :**

இடக்கால் மண்டியிட்டு, வலக்கால் முன்னீட்டி ஊன்றி முட்டுயர்தல்.

(விநி) கருடன் , அனுமன், பூதம், இவர்கள் கடவுளைச் சுமத்தல், இராவணன் கைலையைத் தூக்கியது, பாணங்களைத் தொடரவே தொடுத்தல், அம்மானையாடுதல், பணிந்து நாற்றுப் பிடுங்குதல், வீராசனத்திலிருத்தல்.

**10) நிருத்த நிலைப் பாதம் :**

வலக் காலூன்றி இடக்காலின் முட்டைத் திருத்தமாய் வளைத்துத் தூக்கல்.

(விநி) சபாபதி, வீரபத்திரன் நிலை, துவார பாலகர், பாண்டியனுக்காக சொக்கர் கால்மாறியாடிய நிலை, கோபம் செய்தல், உதைத்தல்.

# நவரச பேதப் பிரகரணம்

மனிதர்களும், மற்றும்உள்ள பிராணிகளும் ஒவ்வொரு காலத்தில் அனுபவிக்கும் அனுபவ நிலைக்கு 'ரஸம்' என்று பெயர். சுவையென்னும் தமிழ்ச் சொல்லும், 'ரஸம்' என்னும் வட சொல்லும் ஒரே பொருள் உடையன.

செவியால் நுகரப்படுவன குண அலங்காரங்களாகிய சொற்சுவைகளும், ஒன்பது வகையான பொருட் சுவைகளும் ஆகும்.

நாவாற் சுவைத்து உண்டவை அப்போதே அற்று விடும். செவியாற் சுவைத்து உண்டவை உள்ளத்தே எப்போதும் நிலைபெற்று இன்பம் பயக்கும்.

சுவையானது எல்லாப் பிராணிகளிடமிருந்தாலும், அவற்றை மனிதர் எளிதில் தமக்குள்ளாகவே அவரவர்கள் செய்கை முதலியவை களால் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

மனிதர்கள் செய்கை செய்யும் ஒரே காலத்திலேயே எல்லா ரஸங்களை அல்லது சிலவற்றை கட்டாயமாக ஒன்றை அனுபவத்தில் கண்டு கொள்ளலாம்.

சுவை என்பது மெய்ப்பாடு என்றும் கூறப்படும். மெய்ப் பாடாவது உலகிலுள்ள நிகழ்ச்சி நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றல் வெளிப்படுதலாம். புறத்து வெளிப்படுவது

அகத்துணர்வே ஆதலின் சுவைக்கு மெய்ப்பாடு என்னும் பெயர் பொருந்தியதே. ஏறக்குறைய 4000 ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியத்தில், மெய்ப்பாடு செய்யுளுறுப்புக்களுள் ஒன்றாகக் குறிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுவை என்னும் மெய்பாடு ஒன்பது வகைப்படும். அவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**1) நகை ரசம் :**

ஒருவரால் தோன்றிய இகழ்ச்சியாலும், இழி சொல்லாலும், பேதையர் பேச்சாலும், மடமையாலும் நகை உண்டாகும் . மற்றும் வியப்பினால் உண்டாகும் ஆசியம், கூச்சம், அங்கவீனம்,விகற்ப ஞானம், சூழ்ச்சி, சுரம், போர், சினம், பிரமை இவற்றிலும் நகைரசம் தோன்றும்.

**2) துக்கரசம் :**

அழுகை,பூச்சியக் கோடு, இனியர் இகழ்ச்சி, நோய், வறுமை இவற்றால் துக்கமுண்டாகும். இதனின்றும் சோகம் பிறக்கும்.

மன்னரால் உண்டாகும் தண்டனை,மரித்தல், செல்வம், சுழி நீரில் அழுந்திப் போதல், ஊடல், காழி அழும்படி செய்த கள்ளச் செயலாலும் துக்கம் உண்டாகும்.

**3) இளிவரல் ரசம்:**

இழிவு, இளிவரல்,தோல்வி, மூப்பு, பிணி, இகழ்தல் இவற்றால் பிறக்கும்.

துன்மார்க்கருக்கு நற்போதனை செய்தும் திருந்தாதயிடத்தும் புறங்காட்டி ஓடச் செய்யும் தோல்வியாலும், பிழை செய்யும் குற்றத்தாலும், வாந்தி முதலியவற்றால் உண்டாகும் துர்நாற்றத்தாலும் இழிந்த நடைகளாலும் இளிவரல் வரும்.

**4) மருட்கை ரசம் :**

ஏதேனும் அரியதொன்றால் உண்டாகும் துணுக்கத்தாலும், மிகப் பெருவடிவு தோன்ற உண்டாகும் மனக்கலக்கத்தாலும், அறிவின்மையாலும், நினைத்து எய்தாக் காலத்துக்கும் உண்டாகும் வறுமை என்றும் விஷம், பூத வஸ்துவின் செய்கைகள், மனமயக்கம், மணிமந்திரங்களால் உண்டாகும் மயக்கம், ஸ்திரீகள் செய்யும் மயக்கு இவற்றாலும் மருட்கை உண்டாகும்.

**5) அச்சரசம் :**

வேதாள , பேய் முதலியன மேலெழுந்து வரும்போதும், கொடிய விலங்குகளாலும், சமுத்திரமுடைதலாலும், அரசர் கோபத்தாலும், இடி,

மழை, காற்று, மின்னல், இருள்,வெயில், வெள்ளம், பாம்பு வாழ்கின்ற மடு, படைக் கூட்டம், போர்க்கள இரத்தம், பீரங்கியின் வெடிச் சத்தம் இவற்றினாலும் அச்சம் உண்டாகும்.

**6) பெருமை ரசம்:**

மிகுந்த கல்வி, வாழ்வின் மிகுதி, அழகு, கொடை, வெற்றி இவற்றால் உண்டாகும். பூஜை, விருந்து, பழைமை, நீதி, கீர்த்தி, நியமமுடன் செய்யப்படும் யாகம் இவற்றாலும், தேவதைகள் மும்மூர்த்திகள், சயிலங்கள் கடல்கள், மருகன், சந்திர சூரியர் இவர்களாலும் தோன்றும்.

**7) வீரரசம் :**

குறைகளைச் சுட்டிக் காட்டும்போதும், 'உம் குலம் ஈனம்' என்னும் போதும், தப்புக்களை நிரம்பச் செய்யும் போதும், நீண்ட சத்ருக்களாலும், களவு, பொய் முதலியவற்றை நடத்தும்போதும், மானச் சொல் பேசும்போதும், பொன் திருட்டு நடத்தும் போதும் கோபம் தோன்றும்.

உறுப்பிலாரிடம் பேசுதலாலும், குலமில்லாதவர் பெருமையைப் பேசுதலாலும், மனத்தில் நினைத்தவை கிடைக்காமற் போனாலும், ஆயுதங்களால் கொலை நிகழுமிடத்தும் வெகுளி உண்டாகும். வாது பேசுதல், மடிதனைப் பிடித்து (சண்டைக்கு) இழுக்கும் போதும், சூதாடுமிடத்தும், வைதல், சொற்பிழைத்தல், மதம் இவற்றாலும், மத பேதத்தால் முயற்சியைத் தடுக்கும்போதும் வீரம் (கோபம்) விளையும்.

**8) உவகை ரசம்:**

தெய்வ நூல்கள், புணர்ச்சி, தையலர் விளையாட்டால் வந்தடைதல் இவற்றால் உண்டாகும். மற்றும் கல்வி, கல்யாணம் செய்தல், மின்னார் கூடும் செய்கையைச் செப்பும் போது, நீண்ட நாள் கழித்து மைந்தரைப் பெறுதல், புதையல் காணல், இக்காலங்களிலும் உண்டாகும்.

**9) சாந்திரசம் :**

சாத்துவிகம்,சரித்திரங்களின் ஞானம், அருமை உணர்ச்சி, பகை, அன்னியர் பொறாமை இவை சாந்தி நிலைக்குக் களன்களாகும்.

# மதனாவஸ்தை

இஃது பத்து வகைப்படும். இவ்வகைகளைப்பற்றிக் கீழே காண்போமாக .

**1 ) நேத்திரோற்சவம்:**

நாயகனை கண்குளிரப் பார்த்தல்.

**2) சித்த சங்கமம் :**

நாயகன் மேல் சித்தம் பற்றுதல்.

**3) ஸ்மரணம் :**

நாயகனை நினைத்துக் கொண்டேயிருத்தல்.

**4) குணகீர்த்தனம் :**

நாயகனது குணங்களைச் சொல்லுதல்.

**5) அரதி :**

நாயகனின் பிரிவாற்றாமை.

**6) தாபம் :**

காம சுரம் உண்டாதல்.

**7) லச்சாத்தியாகம் :**

இலச்சையை விடுதல்.

**8) கமனம் :**

நாயகனைக் குறித்து ச் சொல்லுதல்.

**9) மூற்சை :**

மூற்சையாதல்.

**10) தன்னியதா :**

நாயகனைச் செல்வம் போல உடன் வைத்துக் கொண்டிருத்தல்.

# மதன சைந்நியம்

இது இருபது வகைகளை உடையது. அவற்றின் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1) இரதம் | - | தென்றல் |
| 2) கஜம் (யானை) | - | இருள் |
| 3) துரகம் (குதிரை) | - | கிளி |
| 4) சைந்நியம் (படை) | - | ஸ்திரீகள் (மங்கையர்கள்) |
| 5) துவஜம் (தேர்க் கொடி) | - | மகரம் (மீன்) |

| | | |
|---|---|---|
| 6) சத்திரம் | - | சந்திரன் |
| 7) வாகனம் | - | அம்சம் (அன்னம்) |
| 8) கட்கம் | - | மாந்தளிர் |
| 9) பேரிகை | - | சமுத்திரத்தின் அலைகள் |
| 10) எக்காளம் | - | குயில் |
| 11)நடி | - | மயில் |
| 12) தசை (வில்) | - | கரும்பு |
| 13) நாண் | - | தும்பி (வண்டு) |
| 14) பாணம் (அம்பு) | - | தாமரை, அசோகம், சூதம் அல்லது மா, முல்லை, நீலோற்பவம் ஆகிய 5 புஷ்பங்கள். |
| 15) ஆசுனம் | - | சகனம் (சகடம்) |
| 16) கிரகம் | - | சரதாலயம் |
| 17) அஸ்திரம் (ஆயுதம்) | - | படிக்கம், சந்திரன், காளாஞ்சி, மகிழம்பூமாலை, மல்லிகை, வெற்றிலை மாலை, மஞ்சள். |
| 18) வாள் | - | தாழம்பூ |
| 19) கவரி (சாமரம்) | - | கமுகம் பாளை |
| 20) படை வீடு (ஆயுத சாலை) | - | இளஞ்சோலை. |

# மதன சைந்நியாவஸ்தை

இதன் பத்தொன்பது வகைகள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1) தென்றல் | - | புலிபோல் பாய்தல் |
| 2) இருள் | - | முட்டுதல் |
| 3) கிளி வார்த்தைகள் | - | ஊசிபோல் சொற்கள் நுழைதல் |
| 4) ஸ்திரீகள் | - | கை கொட்டிச் சிரித்தல் |
| 5) மகரம் | - | கவ்வுதல் |

| | | |
|---|---|---|
| 6)சந்திரன் | - | அனல் போல் காய்ந்து கொப்புளமுண்டாதல் |
| 7) சமுத்திரத்தின் அலை | - | உடல் நடுக்குதல் |
| 8) குயிலோசை | - | பயப்படுதல். |
| 9) மயிலாடல் | - | கண்கூசுதல் |
| 10) அம்சம் (அன்னம்) | - | நடை தள்ளாடுதல். |
| 11)கட்கம் | - | பிரமையுண்டாகுதல். |
| 12) கரும்பு | - | புன்சிரிப்புஉண்டாகுதல் |
| 13) தும்பி | - | காது அடைத்தல் |
| 14) தாமரை | - | (நெஞ்சம் ) நினைத்தல். |
| 15) சூதம் | - | (கொங்கை) விம்மி தேகம் இளைத்தல், வளைகள் நழுவுதல், அன்னம் உட்கொள்ளாமை. |
| 16) அசோகம் | - | (கண்) சிறுத்தல், வாய் புலம்பல். |
| 17) முல்லை | - | (சிரசு) மூற்சையாகுதல் |
| 18) நீலோற்பவம் | - | (அல்குல்) மரண மூர்ச்சை. |
| 19) சந்தனம், பன்னீர் | - | நெருப்பு . |

# பஞ்ச பாணங்களின் குணங்கள்

மதன சைந்நியத்தில் பதினான்காவது வகையாகச் சொல்லப்பட்ட பஞ்ச பாணங்களின் குணங்களை கீழே அறியலாம்.

| | | |
|---|---|---|
| 1) தாமரை | - | நினைப்புண்டாகும் |
| 2)மாம்பூ | - | பச்சை நரம்போடச் செய்யும். அதாவது பசலை போடச் செய்யும். |
| 3) அசோகம் | - | உணவு தவிர்க்கச் செய்யும். |
| 4) முல்லை | - | சோகமுண்டாக்கும். |
| 5) நீலோற்பவம் | - | மரண மூர்ச்சை. ( இந்த பாணத்தைப் போடக் கூடாது) |

இதுவரை நாட்டிய இயற்பகுதி கூறப்பட்டது.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

## அண்மை வெளியீடுகள்

| | | ரூ.பை |
|---|---|---|
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி 1 | .. | 50.00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி 2 | .. | 40.00 |
| சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுக் கட்டுரைகள் | .. | 40.00 |
| சங்கத் தமிழர் வாழ்வியல் | .. | 75.00 |
| வேதகிரியார் சூடாமணி நிகண்டு | .. | 65.00 |
| தமிழக மேடைநாடகப்பெண்கலைஞர்கள்குறிப்பேடு | .. | 25.00 |
| A Grammar of Contemporary Literary Tamil | .. | 80.00 |
| Cilappatikaram | .. | 100.00 |
| காதம்பரி மூலமும் வசனமும் | .. | 125.00 |
| Tani Pacura Togai | .. | 30.00 |
| Dedication | .. | 25.00 |
| Temple Chimes | .. | 20.00 |
| Nala Venba | .. | 45.00 |
| Tamil Heroic Poems | .. | 40.00 |
| Six Long Poems from Sangam Tamil | .. | 30.00 |
| Kurinci-p-pattu-Muttollayiram | .. | 40.00 |
| Kuruntokai | .. | 110.00 |
| Landscape and Poetry | .. | 50.00 |
| Tamil Culture and Civilization | .. | 60.00 |
| Tolkappiyam and Astadhyayi | .. | 110.00 |
| தமிழக மகளிர் தொடக்க காலமுதல் ஆறாம் நூற்றாண்டு வரை | .. | 50.00 |
| தொல்காப்பியம் - பொருள் - செய்யுளியல் பகுதி 1. | . | 50.00 |
| தடிவீரசுவாமிகதை வன்னியராயன்கதை | .. | 55.00 |
| சடத்தலம் | .. | 40.00 |
| காத்தவராய நாடகம் | .. | 30.00 |
| மதங்க சூளாமணி | .. | 40.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | .. | 32.00 |
| தமிழில் நவீன நாடகம் | .. | 70.00 |
| இலக்கியத்தில் சோதிடம் | .. | 65.00 |
| சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | .. | 80.00 |
| தொல்காப்பியம்-பொருள்-புறத்திணையியல் பகுதி 1. | . | 50.00 |
| தொல்காப்பியம்-பொருள்-புறத்திணையியல் பகுதி 2. | . | 65.00 |
| சோதிடவியல் | .. | 70.00 |

நாட்டிய நன்னூல் விலை ரூ.25/-